# பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்து பிரதமரின் கருத்துக்கள்



- பெண்களுக்கு அதிகாரமளித்தல், மகளிர் சுகாதாரம், பொருளாதார வளமை, வறுமைக்கு எதிராக போராட்டத்தில் மகளிருக்கு உடல்ரீதியாக அதிகாரமளித்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து அரசு செயல்பட்டு வருகிறது.
- அரசால் தொடங்கப்பட்டுள்ள "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்" திட்டத்திற்கு சமூகம் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
- முத்ரா திட்டத்தின் கீழ் மூன்றரை கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இவர்களில் பெரும்பாலானோர் இப்போது தான் முதன்முதலாக வங்கிச் சேவையை பெறுவோர் ஆவர். இவர்களில் சுமார் 80 விழுக்காட்டினர் பிற பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் 80 விழுக்காட்டினர் மகளிர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பெண்களின் பங்களிப்பை எதிர்பார்க்கிறேன்.
- இந்தியாவின் வளர்ச்சியில் அங்கமாக உள்ள பெண்கள் அவர்களின் குழந்தைகளை வளர்க்க வசதியாக பேறுகால விடுமுறை 26 வாரங்களாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.
- ஜவுளித்துறையில் நூல் நூற்கும் நெசவாளர்கள் மற்றும் மக்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ஊதியம் 100 ரூபாயிலிருந்து 190 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதனால் ஜவுளித் துறையில் உள்ள பெண்கள் பயன்பெறுவர்.
- பட்டு சேலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஒரு மீட்டருக்கு ரூ.50 கூலி உயர்வு வழங்கப்படும். இந்த தொகை வணிகருக்கோ அல்லது இடைத்தரகருக்கோ செல்லாமல் ஆதார் மூலம் நேரடியாக நெசவாளரின் வங்கிக் கணக்கில் சேர்வது உறுதி செய்யப்படும். இதன்மூலம் நெசவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும். நெசவாளர்களில் பெரும்பான்மையானோர் மகளிர் ஆவர்.
- பொன்மகள் திட்டத்தின் மூலம் லட்சக்கனக்கான குடும்பங்கள் பயனடைந்துள்ளன. பெண் குழந்தைகள் வளரும் போது அவர்களுக்கு பயன் கிடைப்பதை இத்திட்டம் உறுதி செய்கிறது.
- இந்திரதனுஷ் டிக்காகரன் திட்டம் பெண்களுக்கு பொருளாதார அதிகாரத்தையும், சுகாதார பிரச்சினைகளுக்கு எதிரான அதிகாரத்தையும் வழங்குகிறது.
- ஏழைக் குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவதற்கான திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.
- அடுப்பிலிருந்து வெளிவரும் புகையிலிருந்து பெண்களை காப்பதற்கான உஜ்வாலா திட்டம் ஏழைப் பெண்களுக்கு அதிகாரம் அளித்திருக்கிறது. அடுத்த 3 ஆண்டுகளுக்குள் 5 கோடி ஏழைக் குடும்பங்களுக்கு இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. திட்டம் தொடங்கப்பட்ட 100 நாட்களுக்குள் 50 லட்சம் பேருக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

# திட்டம்

## மாதஇதழ்

மலர்: 48
இதழ்: 1

செப்டம்பர் 2016
பாத்ரபத் – அஸ்வின 1938



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**

கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | : | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | : | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | : | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | : | ரூ. 610.00 |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை
சென்னை – 600 006.
தொலைபேசி: 2827 2382



- பாதகமான குழந்தைகள் பாலின விகிதம், பொதுப்புத்தி மற்றும் அரசின் கொள்கை
  – மேரி. இ. ஜான்
- மகளிருக்கு அதிகாரம் அளித்தல் ஒரு சீரிய பார்வை
  – Dr. சுபாஷ் ஷர்மா
- இந்தியாவில் பள்ளிக்கல்வியில் பாலின நிலைமை: முன்னேற்றமும் சவால்களும்
  – சலேந்தர் ஷர்மா, Dr. ஷஷி ரஞ்சன் ஜா
- இந்திய சுதந்திரப் போராட்டத்தி பெண்களின் பங்கு
  – டாக்டர் ஜோதி அட்வால்
- பெண்களின் பொருளாதார அதிகாரம்
  – இலா ஆர்.பட்
- மகளிருக்கு அதிகாரமளித்தல் கனவு நனவாகுமா?
  – முனைவர் இரா. வெங்கடேஷ்
- இந்தியக் கண்ணோட்டத்தில் பெண்களுக்கு அதிகாரம்
  – கமலா பாசின்
- பெண் கல்வியே பெண்ணுரிமை
  – திருமதி. வாசுகி கருணாநிதி
- பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்: அரசாங்கத்தின் தெளிவான பார்வை
  – லீனா நாயர்
- பெண்களின் பல்வேறுவகைப்பட்ட வாழ்வியல் செயல்கள்: சமூகக்கட்டமைப்பிற்கான தேவை
  – தேவகி ஜெயின்


*அடுத்த மாத இதழில்....*
**ஜவுளித்துறை**
பற்றிய கட்டுரைகள்

# நாளை உலகை ஆளப் போகும் பெண்கள்

''பெண்களுக்கு அதிகாரமளிப்பதை விட நாட்டின் வளர்ச்சிக்கு சிறந்த கருவி எதுவுமில்லை''... பெண்களின் திறமைகளை துல்லியமாக குறிப்பிடுவதற்கு இதை விட சிறந்த வார்த்தைகள் இல்லை. பாரம்பரியம் சார்ந்த விஷயங்களாக இருந்தாலும், நவீன பணிகளாக இருந்தாலும் பெண்கள் சாதிக்காததவை என்று பெரிதாக எதுவுமில்லை. தாய்மார்கள் என்ற முறையில், நினைவு தெரிந்த நாளில் இருந்து குழந்தைகளை கருவாக சுமந்து, பெற்றெடுத்து வளர்த்து வருகின்றனர். மகள்கள், சகோதரிகள் மற்றும் மனைவிகள் என்ற முறையில் ஆண்களுக்கு பல வழிகளில் உதவியாக உள்ளனர். கல்வியாளர்கள், மேலாளர்கள், அரசியல் தலைவர்கள் என நவீனகால அவதாரங்களையும் அவர்கள் சிறப்பாக செய்து வருகின்றனர். அண்மைக்காலங்களில், ஆண்களால் மட்டுமே செய்ய முடியும் என்று கூறப்பட்ட விஷயங்களை பொய்யாக்கி, மலையேற்ற வீராங்கனைகளாகவும், விமானிகளாகவும் பெண்கள் உருவெடுத்துள்ளனர். பல பெண்கள் இராணுவத்தில் சேர்ந்து போரிடுவதையும் பார்க்க முடிகிறது. எனினும், பெண்களின் நிலை எப்போதுமே இப்படி இருந்தது இல்லை. பழங்காலங்களில் ஆண்கள் இல்லாமல் பெண்கள் இல்லை என்ற நிலையே நிலவியது. அவர்கள் மகளாகவோ, மனைவியாகவோ அல்லது தாயாகவோ மட்டுமே இருக்க முடிந்தது. அவர்களால் தலைமையேற்க முடியாது. அவர்கள் தங்களின் வாழ்க்கையில் தந்தை, மகன் அல்லது கணவன் என யாராவது ஒரு ஆணின் ஆதிக்கத்தின் கீழ் தான் இருக்க வேண்டியிருந்தது. முடிவெடுக்கும் பணிகளை மேற்கொள்ள பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மேலைநாடுகளிலும் இதேநிலை தான் காணப்பட்டது. அங்கு பெண்களுக்கு வாக்குரிமை மிகவும் தாமதமாகவே வழங்கப்பட்டது. இந்தியாவிலும் ஒரு நூற்றாண்டு போராட்டத்திற்கு பிறகே பெண்களுக்கு சொத்துரிமை, வாக்குரிமை, திருமணம் மற்றும் வேலைவாய்ப்புகளில் சட்டத்தின் முன் சமத்துவம் ஆகியவற்றை பெறமுடிந்தது. இந்தியா விடுதலை அடைந்த பிறகு அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்களும், தேசிய தலைவர்களும் சமூகத்தில் ஆண்களும், பெண்களும் சமத்துவம் கொண்டவர்கள் என்பதை அங்கீகரித்தனர். அதைத்தொடர்ந்து பொருளாதாரம், அரசியல், மற்றும் சமூகத் தளங்களில் பெண்களுக்கு சம நிலை வழங்க அடுத்தடுத்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன. பெண்கள் தங்களின் திறமைகளை வெளிப்படுத்த கூடுதல் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் தேசிய நடவடிக்கைகளில் நாமும் பங்கேற்கிறோம் என்ற எண்ணம் பெண்களுக்கு ஏற்பட்டது. கடந்த சில பத்தாண்டுகளில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், மத்திய, மாநில அரசுகள் கொண்டு வந்த பல்வேறு திட்டங்கள் ஆகியவற்றால் சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பெண்கள் விடுதலை பெற முடிந்தது. கல்வி தான் பெண்களுக்கு பெரிய அளவில் அதிகாரமளித்தது. எங்கெல்லாம் பெண்கள் கல்வி கற்றார்களோ, அங்கெல்லாம் பெண்களுக்கு விரைவாக அதிகாரம் கிடைத்திருக்கிறது. இதனால், தங்களின் திருமணம், தாய்மையடைதல், வேலைவாய்ப்பு ஆகியவை குறித்து அவர்களால் முடிவெடுக்க முடிந்தது. திருமணத்திற்கு வெளியில் உள்ள வாய்ப்புகள் குறித்து பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியது கல்வி தான். கல்வி தான் பெண்களுக்கு நிதி சுதந்திரத்தை அளித்து, தங்கள் வாழ்க்கையின் அங்கமான தந்தை அல்லது கணவனை சார்ந்திருக்கும் நிலையை குறைத்தது. பெண்கள் இப்போது வீடுகளில் இழைக்கப்படும் குடும்ப வன்முறையையோ அல்லது மனரீதியிலான தாக்குதல்களையோ சகித்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. எப்போது கருத்தரிக்கலாம், தேவையில்லாத குழந்தையை கருக்கலைப்பு செய்வது ஆகியவற்றில் தமது விருப்பத்திற்கேற்ப முடிவெடுக்கும் அதிகாரத்தை பெண்களுக்கு வழங்கியதும் கல்வி தான். பெண்கள் பாதிப்பை சந்திக்கும் இன்னொரு விஷயம் சுகாதாரம் சம்பந்தப்பட்டதாகும். உடல்நலனை பேணிக் காப்பதற்கான நேரமோ, மனநிலையோ அல்லது வசதிகளோ பெரும்பாலான பெண்களுக்கு இல்லை. குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு, அடிப்படைத் தேவையான கழிப்பறைகள் கூட இருப்பதில்லை. அதனால் தான் பெண்களின் சுகாதாரத்திற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. அதன் ஒருபகுதியாக பெண் குழந்தைகளை காப்போம்... பெண் குழந்தைகளை படிக்க வைப்போம், பெண் சிசு பாதுகாப்புத் திட்டம் ஆகிய திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. கைம்பெண்கள், விவாகரத்து பெற்றவர்கள், திருமணமாகாத பெண்கள் ஆகியோரிடம் சமூகம் காட்டும் பாகுபாடு தான் பெண்களின் நிலை தாழ்ந்து இருப்பதற்கு காரணமாகும். எனினும் இப்போது இந்த நிலை படிப்படியாக மாறி, பெண்கள் இந்த சமூகத்தடைகளை உடைத்து பல்வேறு துறைகளில் சாதனை படைத்துள்ளனர். அருந்ததி பட்டாச்சாயா, இந்திரா நூயி, கிரண் மஜூம்தார், சந்தா கோச்சார் ஆகியோரை இதற்கு சில உதாரணங்களாக கூறலாம். பவனா காந்த், அவனி சதுவேதி, மோகனா சிங் ஆகியோர் அண்மையில் இந்திய விமானப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சுதந்திர இந்திய வரலாற்றில் முதன்முறையாக முப்படைகளையும் சேர்ந்த மகளிர் படையணிகள் கடந்த 2015ஆம் ஆண்டு குடியரசு நாளில் இராஜபாதையில் அணிவகுத்து வந்தனர். இவர்கள் மகளிர் முன்னேற்றத்தைத் தாண்டி, மகளிர் தலைமையிலான முன்னேற்றத்தை நோக்கி நடைபோட்ட இந்தியப் பிரதமர்களின் தொலைநோக்குப் பார்வையை உருவகப்படுத்துகின்றனர். உலகின் மொத்த மக்கள் தொகையில் பெண்களின் பங்கு பாதிக்கும் மேல் இருப்பதால் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு சமமாக நடத்தப்படுவதற்கான அனைத்து உரிமைகளும் பெண்களுக்கு உள்ளது. '' பெண்களின் நிலை முன்னேறாமல் உலகம் நலமுடன் வாழ்வதற்கு வாய்ப்பில்லை, ஒரு பறவை அதன் ஒரு இறகை மட்டும் வீசிக்கொண்டு பறக்க முடியாது'' என்று விவேகானந்தர் கூறினார். தங்களின் குடும்பங்களை மட்டுமின்றி நாட்டையும், உலகையும் தலைமையேற்று நடத்தும் திறன் பெண்களுக்கு உண்டு என்பதை இதைவிட சிறப்பாக எவரும் எடுத்துக் கூற முடியாது.

– முதன்மை ஆசிரியர்

# பாதகமான குழந்தைகள் பாலின விகிதம், பொதுப்புத்தி மற்றும் அரசின் கொள்கை

– மேரி. இ. ஜான்

**ஆ**ண்–பெண் பாலின விகிதத்தில் ஏற்றத்தாழ்வான நிலை, காலனி ஆட்சிக்காலத்தில் இருந்தே நம் நாட்டின் வரலாற்றில் ஓர் அங்கமாகவே இருந்து வருகிறது. 1970களில் ஒரு பெரும் பிரச்சினையாக இந்த விஷயம் முன்னிலைக்கு வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு, ரஜபுதனத்து மக்களும் ஜாட் இனத்தினரும் தமது பெண் குழந்தைகளை ஏன் கொல்கிறார்கள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. சுதந்திரத்திற்குப் பின்னரும் ஆண்களுக்குரிய விகிதத்தில் பெண்களின் எண்ணிக்கை ஏன் இல்லை என்று மக்கள் தொகை வல்லுநர்கள் கண்டறிய முயலுகிறார்கள். இவ்வாறாக இவ்விஷயத்தில் கேள்விகளுக்கும் புதிர்களுக்கும் பஞ்சமில்லை. 1980களில் தில்லி, அமிர்தசரஸ், மும்பை போன்ற நகரங்களில் அதிர்ச்சிகரமான புதிய பரிமாணம் தெரிய வந்தது. கருவின் வளர்ச்சி முறையாக இருக்கிறதா என்று கண்டறிவதற்கான தொழில்நுட்பத்தை, அந்தக் கரு ஆணா, பெண்ணா என்று தெரிந்துகொள்ளப் பயன்படுத்தியதும், பெண் என்று தெரிந்தால் அந்தக் கருவை அழித்துவிடுவதும் புதிய போக்காக அந்தப் பெரிய நகரங்களில் உருவாகியிருந்தது.

மருத்துவர்கள், கரு வளர்ச்சியைத் தெரிந்துகொள்ள உதவும் தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை உணர்ந்த அரசு, சட்டம் இயற்றி, கருவில் உள்ள குழந்தை ஆணா – பெண்ணா என்று அறிவிப்பதைக் குற்றமாக்கியது. கருவின் பாலினத்தைத் தெரிந்து அறிவிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்காகத் தீவிரமான முனைப்பு இயக்கங்கள் நடத்தப்பட்டன. எனினும் தவறு செய்கிற மருத்துவர்கள் தண்டனையில் இருந்து தப்பித்துவிடுகின்றனர். இந்தச் சட்டத்தில் அமல்படுத்தும் கண்காணிப்பு அமைப்புகளுக்கும், மருத்துவர்களுக்கும், பரிசோதனை மையங்களுக்கும் நெருக்கமான புரிதல் கொண்ட தொடர்பு இருப்பதால், கருவின் பாலினத்தைத் தெரிந்துகொண்டு, பெண் கருவை அழிக்கும் போக்கு முற்றாக முடிவுக்கு வரவில்லை. கருவின் பாலினத்தை அறிவிக்கக்கூடாது என்ற பிரச்சார இயக்கம், அவசியமான கருக்கலைப்புக்கு எதிராகப் போகிறது என்ற எதிர்ப்புக் குரல்களும் எழும்பின. இந்தியாவில் கருக்கலைப்பு என்பது பெண்களின் உரிமை என்ற விஷயமாக அல்லாமல், குடும்பக்கட்டுப்பாட்டு நடவடிக்கையோடு தொடர்புடையதாகவே பார்க்கப்படுகிறது.

## பொதுப்புத்தியை மாற்றுதல்:

கருவில் உள்ள குழந்தை ஆணா – பெண்ணா என்று தெரிந்துகொள்ளும் போக்கிற்குக் காரணம் மக்களின் 'பொதுப்புத்தி' என்று பரவலாக நம்பப்படுகிறது. பொதுவாகவே பிரச்சினைகளுக்கு மக்களின் பொதுப்புத்தி' தான் காரணம் என்று சொல்லும்போது அதனை மாற்றிவிடுவதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டாக வேண்டும். பொதுப்புத்தி என்பது மனதில் ஊறிப்போய்விட்டதான நடவடிக்கை அல்லது மனப்பாங்கு எனலாம்.

கருவின் பாலினத்தைத் தெரிந்துகொண்டு, பெண்ணாயிருந்தால் அழித்துவிடும் பழக்கம் நிலவுகிற சமுதாயத்தில் மகன் – மகள் பற்றிய எண்ணம் காலங்காலமாக ஒரேவிதமாகவே உள்ளது. அதாவது மகன் மேலானவன், குடும்பத்தின் வம்சம் தழைக்க அவசியமானவன்; மகளோ வேண்டாத சுமை. இந்த எண்ணத்தில் இருந்து மக்கள் விலகிவர வேண்டும் என்றால், அவர்கள் தமது பழமையான சிந்தனைப் போக்குடைய வாழ்க்கை முறையில் இருந்து நவீன வாழ்க்கை முறைக்கு மாறவேண்டும்.

---

**மேரி. இ. ஜான்,** மகளிர் வளர்ச்சி ஆய்வு மையத்தின் முதுநிலை ஆய்வறிஞர்.

தற்போதைய நவீன காலகட்டத்திற்கு ஏற்றாற்போன்ற மனநிலை அவர்களுக்கு இல்லை என்று நாம் அனுமானிப்பது, இந்தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்துகொள்ளாததினால் ஏற்பட்டது என்று கட்டுரையாளர் நம்புகிறார். இந்த மக்கள், ஒரு பையனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றோ, அல்லது ஒரு பெண் பிறந்துவிடக்கூடாது என்றோ எண்ணும்போது, காலங்காலமாக இருந்துவரும் தமது நம்பிக்கைகளால் மட்டுமே அவ்வாறு தீர்மானிக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. மாறாக, தமது வாழ்க்கையின் திட்டங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றிக்கொள்ள எந்தவிதமான பொருளாதார வளங்கள் கிடைக்கக்கூடும் என்ற அனுமானத்தில் பேரிலேயே அவர்கள் அவ்வாறு தீர்மானிக்கின்றனர் எனலாம். அதாவது குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றை நல்ல முறையில் வளர்த்து, கல்வி புகட்டி ஆளாக்குவதற்கும் இடையே தான் மக்கள் குழப்பத்தில் உழன்று கொண்டிருக்கின்றனர்.

1980களில் இருந்து கருவின் பாலினத்தைக் கண்டறிய உதவும் புதிய தொழில்நுட்பம் வந்த பிறகு, வேறு எந்தக் காரணிகளால், ஆண் குழந்தையா – பெண் குழந்தையா என்ற தீர்மானம் உருப்பெறுகிறது? எந்தவிதமான குடும்பங்கள் இத்தகைய முடிவுகளை மேற்கொள்கின்றனர்? என்ற கேள்விகளையும் நாம் எழுப்ப வேண்டும்.

1990களில் பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்ற சமயத்தில் தான் குழந்தைகள் பாலின விகிதம் குறையத் தொடங்கியது என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். பெருமளவில் பொருளாதாரம் விரிவுபெற்று மாற்றங்கள் நிகழ்ந்தாலும், அவற்றின் பயன்கள் மிகவும் சமச்சீரற்று இருந்ததோடு பழைய வேலைகளுக்குப் பதிலாக புதிய வேலைகளை உருவாக்கவும் இல்லை, மிகவும் வறுமையில் இல்லாத குடும்பங்கள் தமது பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காகக் குறைவான குழந்தைகளே போதும் என்று தீர்மானித்த போதுதான் பாலினத்தைத் தெரிவு செய்யத் தொடங்கினர். அவர்களில் பலரும் ஒரு பெண் அல்லது ஆண் மட்டுமே போதும் என்று சொன்னாலும், உள்ளூர, ஒரேஒரு ஆண் குழந்தையாவது வேண்டும், பெண்ணாக இருந்துவிடவேண்டாம் என்றுதான் விரும்பினார்கள். அத்தகைய பெற்றோர் தமது பிள்ளைக்கு நல்ல ஆரோக்கிய வாழ்வும், சிறப்பாக கல்வியும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற 'நவீன'ப்பார்வை கொண்டவர்களாக இருந்ததோடு, கை நிறையச் சம்பாதிக்கும் நல்ல வேலையோடு பிக்கல்பிடுங்கல் இல்லாத வாழ்க்கைத் துணையும் அமைய வேண்டும் என்று எதிர்பார்த்தனர். எனவே இந்த இலட்சியத்தை எட்டுவதற்காக மிகவும் தொல்லைகளை எதிர்கொண்டனர். அதுவே பெண் குழந்தையாக இருந்துவிட்டால் சிக்கலாகிப்போன சமூக–பண்பாட்டு–பொருளாதாரச் சூழலில் சிரமங்கள் பல்கிப்பெருகின. எனவே பெண் குழந்தை வேண்டாம் என்ற பொதுப்புத்தி தோன்றி நிலைபெற்றுவிட்டது.

### அரசாங்கத் திட்டங்களின் பங்கு:

மேலே சொன்னவாறு வறுமையின் பிடியில் இல்லாத குடும்பங்களே தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக்கொள்வதற்காக, பாலினத் தெரிவு வேலையில் இறங்குகின்றனர். 2001ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 0–6 வயதுக்குட்பட்ட குழந்தைகளில், ஆண்–பெண் பாலின விகிதம் மிகவும் குறைவாக இருப்பதைக் கண்டவுடன், பெண் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாகப் பல திட்டங்களை அரசு செயல்படுத்தியது. பல மாநிலங்களிலும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதோடு, ஏற்கனவே இருந்த பல திட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டன. உங்கள் மகள் உங்கள் சொத்து (அப்னி பேட்டி அப்னிதன்) போன்றவை, உரிய காலத்திற்கு முன்னரே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதைத் தடுக்க முயன்றன. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்கள் தமது பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பவும், 18 வயதுக்கு முன்னதாக அவர்களுக்கு திருமணம் செய்யாமல் இருக்கவும் அரசு பல ஊக்க உதவிகளை வழங்கியது. ஹரியாண, பஞ்சாப், இமாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், தில்லி போன்ற

மாநிலங்களில், இத்திட்டங்களின்படி, சில நிபந்தனைகளை நிறைவேற்றினால் பண உதவி வழங்கப்பட்டது. பெண் குழந்தை பிறந்தது தொடங்கி, தடுப்பூசி போடும் கட்டம், ஆரம்பப்பள்ளியில் சேரும்போது, பின்னர் உயர்நிலை, மேல்நிலைக் கல்வி பயிலும் போது என ஒவ்வொரு நிலையிலும் பெண் குழந்தையின் பெயரில் அரசு, வங்கியில் பணம் செலுத்தியது. பதினெட்டு வயதான பின்னரே, அதுவும் திருமணம் ஆகாமல் இருந்தால்மட்டுமே வட்டியோடு அந்தப்பணம் கிடைக்கும்.

'தேவையற்ற குழந்தை' என்ற பெண் குழந்தையின் நலனைப் பேணுவதற்காகச் செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்திற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளால் அது சரி யான வெற்றியைப் பெறவில்லை என்று ஆய்வுகள் புலப்படுத்தின. பெண் குழந்தை களின் பள்ளிப்படிப்பில் சற்றே முன்னேற்றம் ஏற்பட்டாலும், தகுதியுடைய பல பெண் குழந்தைகளும் பள்ளிப்படிப்பைத் தொடர வில்லை. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பத்துப் பெண் குழந்தைகளுக்கு மட்டும் இத்திட்டம் செயல்பட்டதாலும், வறுமையின் பிடியில் இல்லாத சற்றே மேல் நிலையில் இருந்த, பாலினத் தெரிவு வேலையில் இறங்கிய குடும்பத்தினருக்கு இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்காததாலும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. மேலும், இதுபோன்ற திட்டங்கள் பெண் குழந்தைகள் சுமையானவைதான் என்ற பொதுப்புத்திக்கு வலுச் சேர்ப்பதாக இருக்கின்றன என்று சிலர் கூறினர்.

இரண்டாண்டுகளுகு முன்னர், நூறு கோடி ரூபாய் செலவில், பெண் குழந்தையைப் பேணு வோம், பெண் குழந்தையைப் படிக்க வைப் போம் (பேட்டி பச்சாவோ; பேட்டி படாவோ) என்ற திட்டத்தை மிக்க ஆரவாரத்தோடு மத்திய அரசு தொடங்கியது. பலகாலமாக ஆண்–பெண் குழந்தை விகிதம் குறைவாக உள்ள ஹரியானா போன்ற மாநிலங்களில், இத்திட்டம் பெரிதாக விளம்பரப்படுத்தப்படுகிறது. பிர தானப் பெருவழிகளிலும், நகரங்களிலும், பேருந்துகளிலும் பெரிய பெரிய விளம்பரப் பலகைகள் மூலம் இத்திட்டம் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. மாநில அரசின் அமைச்சர்களும் அலுவலர்களும் இதைப் பற்றி பல மேடைகளிலும் பேசுகிறார்கள். நல்ல திட்டமாக இருந்தாலும், நிதி உதவி அளிப்பதற்கான நிபந்தனைகளால் இது பின் னடைவைச் சந்தித்துள்ளது. திட்டத்தின் பெருமளவு நிதி விளம்பரத்திற்கே செலவிடப் படுகிறது.

கல்வி பெறும் உரிமைச் சட்டத்திற்கு முதுகெலும்பு போன்றதான சர்வசிக்ஷா அபியான் (அனைவருக்கும் கல்வி), ஒருங் கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் ஆகியவற்றுக்குக் கடந்த இரண்டாண்டுகளில் பட்ஜெட் ஒதுக்கீடு வெகுவாகக் குறைக்கப் பட்டுவிட்டதையும் இதோடு சேர்த்துப் பார்க்க வேண்டும். குழந்தைகளுக்கு – பெண் குழந்தைகள் உட்பட – இளம் பிராயத்தில் நல்ல சத்துணவுக்கும் ஆரம்பக்கல்விக்கும் முக்கியமான இவ்விரு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைவது முறையாகாது.

குழந்தையின் பாலினத்தைத் தெரிவு செய் வதைத் தீர்மானிக்கும் போக்கில் இருந்து மக்களைத் திருப்ப வேண்டுமென்றால், அரசுத் திட்டங்களால் ஏற்படும் விளைவுகளைப் புரிந்துகொள்ள வேண்டும். மக்களின் பொதுப் புத்தியை மாற்ற முயலும் திட்டங்களைவிட, மக்கள் அத்தகைய பொதுப்புத்தியை உரு வாக்கிக் கொள்வதற்குக் காரணமான சமூக நிலையை மாற்றும் திட்டங்களே அவசிய மனவை. பெற்றோர் தமது குழந்தைகளின் வருங்காலத்தைப் பற்றி யோசிக்கும் போது, ஆண் குழந்தைக்கு வேறு – பெண் குழந்தைக்கு வேறு என்று யோசிக்காதவாறு பாலின வேறுபாடு அற்றதாக சம வாய்ப்பு உடை யதாக சமூக அமைப்பை மாற்ற வேண்டும். வேலைவாய்ப்புகளில் சமதள நிலையோடு, வெளியிடங்களில் பெண்களுக்குப் பாது காப்பான சூழலையும் நாம் உருவாக்கித்தர வேண்டும். அவ்வாறான மாற்றங்கள் ஏற்படும் போது பெண் குழந்தைகளைப் பெற்று வளர்ப் பதைப் பெற்றோர் சுமையாக அல்லாமல், சுகமானதாகவே கருதுவார்கள் என்பதில் ஐய மில்லை.

●

# மகளிருக்கு அதிகாரம் அளித்தல் ஒரு சீரிய பார்வை

– Dr. சுபாஷ் ஷர்மா

**1789**ல் ஏற்பட்ட பிரெஞ்ச் புரட்சி மனித குலத்தின் விடுதலை என்று கருதப்பட்டாலும் அதனால் மகளிருக்கும் அடிமைகளுக்கும் விடுதலை கிடைக்கவில்லை. ஏனெனில் புரட்சிக்கான பிரகடனத்தில் "மனிதர்களுக்கும், குடிமக்களுக்குமான உரிமைகள்" என்றுதான் கூறப்பட்டுள்ளது. குடிமக்கள் என்ற சொல்லில் மகளிரும், அடிமைகளும் சேர்க்கப்பட வில்லை. ஆண் என்ற சொல்லில் பெண் அடங்கவில்லை. உடல் ரிதியான, சமூக, கலாச்சார, பொருளாதார அரசியல் மற்றும் பிற ரிதியாக ஆண், பெண் உறவுகள் பற்றிப் பார்க்கும் போது அவர்களுக்கிடையே வேறுபாடுகளும், இடைவெளியும் பாகுபாடுகளும் அதிகாரம் அளிக்கப்படாமல் பாதிக்கப்படுவதும் காணப்படுகிறது. இது கிராமப்புற இந்திய சமுதாயத்தில் மேலும் அதிகமாகக் காணப்படுகிறது.

இந்திய மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஆண், பெண் உறவு என்பது முற்போக்கான அம்சமாக இல்லை. ஏனெனில், குடும்பம் சார்ந்த முடிவுகள் எடுப்பதில் ஆண்களே பெரும் பங்கு வகிக்கிறார்கள். உதாரணமாக தேசிய அளவில் பள்ளிப்படிப்பில் ஆண்களைவிட பெண்கள் பின்தங்கியே உள்ளனர் - 6-9 வயதுக்குட்பட்டவர்களில் 95.4 சதவிகிதமும், 10-14 வயதுகளில் 93.7 சதவிகிதமும் 15 17 வயதுகளில் 83.8 சதவிகிதத் தினருமாக உள்ளனர். பெண்கள் கல்வி அறிவு அதிகமாக உள்ள முதல் ஐந்து மாநிலங்களாக கேரளம், மகராஷ்டிரம், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்கள் உள்ளன. இந்த வகையில் மிகக் குறைந்த மகளிர் கல்வி உள்ள ஐந்து மாநிலங்களாக ராஜஸ்தான், குஜராத், ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம் மற்றும் உத்திரபிரதேச மாநிலங்கள் உள்ளன. எல்லோருக்கும் சமமான ஊதியம், சட்டம், 1948, இருந்தபோதிலும் எல்லா ஜாதி, மத பகுதியையும் உள்ளடக்கியும் பெண்களுக்கு 20 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம் வரை ஊதியம் குறைவாக அளிக்கப்படுகிறது. இரண்டாவதாக, இந்த பாகுபாடு கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகள் இரண்டிலேயும் காணப்பட்டாலும் ஆண்களுக்கும், பெண்களுக்குமான ஊதியம் கிராமப்புறங்களைவிட நகர்ப்புறங்களில் அதிகமாக உள்ளது. மேலும், இருவரின் படிப்பறிவும் உயர உயர ஆண்கள், பெண்கள் இருவரின் ஊதியம் உயர்ந்து இருவருக்கிடையேயுமான ஊதிய இடைவெளி குறைந்து கொண்டே வருகிறது. இந்த நிலைக்கு மூன்று காரணங்களைக் கூறலாம்: *a*) பெண்மைப்படுத்தப்படும் ஏழ்மை; *b*) குறிப்பாக பெண்களுக்கு அன்றாட, முறைப்படுத்தப்படாத மற்றும் ஒப்பந்த ரிதியிலான வேலை வாய்ப்புகள் மற்றும் *c*) மகளிர்க்கு எதிரான பாலியல் கொடுமைகள் பெண் குழந்தைகள் / பெண்களை பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துதல், விபச்சாரம் போன்றவை பெருகுதல்.

அடுத்த முக்கியமான பிரச்சினை இந்தியாவில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களாகும் குறிப்பாக கற்பழிப்பு, ஆள் கடத்தல், பாலியல் பாதிப்பு, பெண்களை கேலி செய்தல், வரதட்சணை சார்ந்த இறப்புக்கள் ஆகியன. 2013ல் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 3.095 லட்சம் பதிவு செய்யப்பட்டன. ஆனால், தண்டிக்கப்பட்டதன் எண்ணிக்கை மிகக்குறைவே. இந்தியாவில் 20 நிமிடத்திற்கு ஒரு கற்பழிப்பு சம்பவம் நடைபெற்றது. துரதிர்ஷ்ட வசமாக இந்தியாவில் பெண்கள் இரவில் மலம் கழிக்கச் செல்லும் போது, இந்த

**டாக்டர். சுபாஷ்சர்மா,** மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர், நிதி ஆலோசகர்.

சம்பவங்கள் 65 சதவிகிதம் ஏற்படுகின்றன. (இன்னமும் 50 சதவிகித மக்கள் வெட்ட வெளியிலேயே மலஜலம் கழிக்கிறார்கள்). மேலும், இதைப்போன்ற பல குற்றங்கள், காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படுவதில்லை. இதற்கு முக்கிய காரணமாக, விழிப்புணர்வு இன்மை, குற்றம் சாட்டப்பட்டவர்கள் / விஷமிகளிடமிருந்து பயம், உள்ளூர் காவல் துறையினரின் ஒத்துழைப்பு இன்மை மற்றும் சமுதாயத்தில் மதிப்பிழப்பு ஆகியவைகளைக் கூறலாம். இது அல்லாமல், தற்போது, கும்பல் கற்பழிப்பும், பாதிக்கப்பட்டவரை கொலை செய்வதும் மிகுந்து வருகிறது.

## II

**மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் தேசிய கொள்கை 2001:**

இந்தக் கொள்கையில் முக்கிய அம்சங்களாக உள்ளவை:

- வாழ்க்கையில் எல்லா துறையிலும், மகளிரின் மேம்பாடு, வளர்ச்சி மற்றும் அதிகாரமயமாக்கல்.
- பெண்களின் தேவைகளுக்கு ஏற்ப அதிக ஆதரவான நீதி வழிமுறைகள்
- அதிகார பங்களிப்பில் பெண்களுக்கு சம வாய்ப்பு மற்றும் கொள்கைகள், முடிவு எடுப்பதில் தீவிர பங்கேற்பு.
- வளர்ச்சிசார்ந்த திட்டங்களில் மகளிருக்கு உரிய பங்களிப்பு.
- இதை செயல்படுத்த தேவையான செயல் கட்டமைப்பை உருவாக்கி உறுதி படுத்துதல்.
- சமுதாய அமைப்புகளோடு கூட்டு செயல் பாடு.
- பன்னாட்டு ஒப்பந்தங்கள், கடமைகள் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை உலக அளவிலும், தேசிய அளவிலும், உள்ளூர் அளவிலும் செயல்படுத்துதல், குறிப்பாக பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை நீக்கும் கமிஷன், குழந்தைகளுக்கான உரிமைகள் கமிஷன் மற்றும் கிராமப்புற பகுதிகளில் சமுதாயம் ஏற்று நடத்தும் மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவை.
- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்டம் எட்டு மில்லேனியம் மேம்பாட்டு இலக்கு களை அறிவித்திருந்ததில் மூன்றாவது இலக்கு மகளிர் அதிகாரம் அளித்தல் சார்ந்ததாகும்: ஆரம்ப மற்றும் நடுநிலை பள்ளிக் கல்வியில் ஆண், பெண் பாகுபாட்டை அனைத்து மட்டங்களிலும் 2015க்குள் நீக்க வேண்டும். ஆனால், 2015க்குள் நாம் பள்ளிக் கல்வியில் பாலின சமத்துவத்தை எட்டவில்லை. ஆனால், நாட்டில் அனைத்து பகுதிகளிலும், அனைத்து இன மக்களிடையேயும் பெண் குழந்தைகள் பள்ளியில் சேர்க்கப்படுவது அதிகரித்துள்ளது. மேலும், பச்சிளம் குழந்தைகள், மற்றும் மகப்பேறுகால மகளிர் இறப்பின் எண்ணிக்கையின் சதவிகிதம் சமீப காலங்களில் குறைந்து வந்தாலும் மேற்கண்ட இலக்கை அடைய முடியவில்லை. இதைப்போலவே, தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலக மயமாக்கல் ஆகியவற்றை முன்னிறுத்தியவர்கள் பெருமளவிலான வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டதாக கூறினாலும், வேலை வாய்ப்பு மற்றும் கொள்கை முடிவு எடுப்பதில் மகளிரின் பங்கேற்பு போதுமானதாக இல்லை. உண்மையில்,இந்தியப்பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பு அதிகம் ஏற்படாத வளர்ச்சிதான் ஏற்பட்டுள்ளது. தற்போது, பொருள் உற்பத்தித் துறையில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆண், பெண் சமத்துவம் ஏற்படவும் மகளிர் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான

அனைத்து வகை கொடுமைகளை நீக்கவும் எல்லோருக்கும் மருத்துவ சிகிச்சை வசதி மற்றும் எல்லோரையும் உள்ளடக்கிய பொதுவான கல்வி வழங்கப்பட வேண்டும். படித்த மற்றும் வேலை செய்யும் மகளிர் நிச்சயம் தாமதமான திருமணத்தின் மூலம் சிறிய குடும்பத்தையும், ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் இடையே நல்ல இடைவெளியையும்,குடும்பக்கட்டுபாட்டு சிகிச்சையையும் மேற்கொள்வார்கள். ஆகவே, பெண்களுக்கு அதிக கல்வியும் வேலை வாய்ப்பும் வழங்குவதற்காக அவர்களுக்கு பட்டபடிப்பு வரை இலவச கல்வி, சிறப்பான பள்ளி, கல்லூரி உள் கட்டமைப்பு (கட்டடங்கள், கழிப்பறை கள், நூல் நிலையங்கள், பாதுகாப்பான குடிநீர் ஆகியவை), போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், முறைப்படுத்தப் பட்ட திறன் மேம்பாட்டுத் திட்டங்களை அனைத்து பள்ளிகளிலும், கல்லூரி களிலும் வழங்குவது, தேவைக்கு ஏற்ப தொழிற்பயிற்சி நிலையங்கள், பாலி டெக்னிக்குகள் போன்றவைகளை மகளிர் மேம்பாட்டு திறன்களை அளிக்க ஏது வாக அமைக்க அதிக வளங்களையும் உந்துதல்களையும் அளிக்க வேண்டும். இதற்காக, திறன்மேம்பாடு, தொழில் முனைவு சார்ந்த புதிய அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது.

## III

### மகளிருக்கான மத்திய அரசு திட்டங்கள்:

சப்லா எனப்படும் இளம் பெண்களுக்கான ராஜீவ்காந்தி வேலை வாய்ப்பு திட்டம் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் இந்தியாவில் தேர்ந்தெடுக் கப்பட்ட 205 மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகிறது. இரண்டாவதாக, ஒருங் கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டம் மூலமாக இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 53 மாவட்டங்களில் மகளிர் ஒத்துழைப்பு திட்டம் செயல்படுத்தப் பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 19 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு குழந்தைகள் பிறக்கும்போது, முதல் இரண்டு குழந்தைகளுக்கு தலா ரூ.6000 இரண்டு தவணையில் வழங்கப்படுகிறது. இந்த திட்டம் மத்திய அரசு நிதியளிக்கும் திட்டமாக 2010–11முதல் செயல்படுத்தப்படுகிறது. பிறகு இந்த திட்டம் மேலும் 200 மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு 2016–17ல் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மூன்றாவதாக, இக்கட்டான சூழ்நிலையில் வாழும் மகளிருக்கான திட்டம் 2001–02ல் ஒன்று துவக்கப்பட்டது. இதன்படி, ஆதரவற்ற விதவைகள், விடுவிக்கப்பட்ட பெண் குற்ற வாளிகள், தேசிய பேரிடர் காரணமாக வீடின்றி வாழும் மகளிர், விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட மகளிர், தீவிரவாத நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டு ஆதரவின்றி இருக்கும் பெண்கள், ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற எய்ட்ஸ் தாக்கப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு தங்க இடம், உணவு, உடை, மற்றும் இதர சேவைகளை வழங்கி அவர் களின் மறுவாழ்விற்கான மனஆறுதல் சார்ந்த உதவிகளை வழங்குவதற்கும் மருத்துவ சிகிச்சை மற்றும் சட்ட உதவி, ஆபத்திலிருக்கும் பெண்களுக்கு உதவிகள் வழங்குதல் ஆகி யவைகள் இந்த திட்டத்தில் செயல்படும். மாநில அரசுகளின் மகளிர் மேம்பாட்டு வாரி யங்கள் அல்லது அறக்கட்டளைகள் மூலம் செயல்படுத்தப்படும் மகளிர் இல்லங்கள் 311 தற்போது செயல்பட்டு வருகிறது. 2014–15ல் பட்ஜெட் ஒதுக்கீடாக ரூ.115 கோடி அளிக்கப்பட்டது.

நான்காவதாக பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்துவதை தடுப்பதற்கான திட்டமாக 2007ல் துவக்கப்பட்டது. இந்த திட்டத்தின்படி இவ்வகையான குற்றங்களை தடுத்து, பெண் களை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து, சமுதாயத்தில் மீண்டும் இணைத்து, வேற்றுப் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட

பெண்களை அவர்களுடைய சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பது, ஆகியவை இந்த திட்டத்தில் அடங்கும். 2014–15ல் ரூ.16 கோடி நிதியில் 289 திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டன. (165 பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு மையங்கள் உட்பட)

ஐந்தாவதாக, ஸ்டெப் எனப்படும் 16 வயதிற்கு மேற்பட்ட மகளிருக்கான திறன் அளிப்பு திட்டம் மத்திய அரசு திட்டமாக 1986–87 ஆண்டுகளில் துவக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 2013–14ஆம் ஆண்டுகளில் பல மாநிலங்களுக்கு ரூ.7 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆறாவதாக 31.12.2014வரை 915 வேலை செய்யும் மகளிர் விடுதிகள் அமைக்கப்பட்டு அதில் 68,631 மகளிர் பயன்பெற்றனர். 2014–15ல் வேலை செய்யும் மகளிருக்கான விடுதிகள் கட்டுவதற்கு ரூ.25 கோடி பட்ஜெட் ஒதுக்கப்பட்டது. முடிவாக, ஆண்டுதோறும், தேசிய அளவில் தனி நபர் மற்றும் அமைப்புகளுக்கு தலா, ரூ.3 லட்சம் வீதம் ஆறு பேருக்கு மகளிர் சக்தி விருதுகளும், ஒவ்வொரு மாநிலத்திற்கும், யூனியன் பிரதேசத்திற்கும் ரூ.40,000 மதிப்பிலான ஒரு மாநில மகளிர் விருதும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.20,000 மதிப்புள்ள மாவட்ட மகளிர் விருதும் வழங்கப்படுகிறது. பெண்களைப் போற்றுவோம், பெண்களுக்கு கல்வி அளிப்போம் என்பது மத்திய அரசின் முன்னோடி திட்டமாகும்.

## IV

தற்போது, முன்பைப் போல் குடும்ப நல பிரச்சாரங்கள் குறைவாக உள்ளன. இவை, இனி செய்யப்பட வேண்டும்.

இரண்டாவதாக, மத்திய, மாநில அரசுகள் அடிப்படை மட்டத்தில் செய்யப்படும் எல்லா திட்டங்களிலும் மகளிருக்கு 30 சதவிகித ஒதுக்கீடு இருக்க வேண்டும். எல்லா அரசுத் துறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்ட துறைகளில் வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த வேண்டும். தனியார் துறைகளும், தங்களுடைய நிர்வாகத்தின் சமூக பொறுப்பாக அதிகமாக மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். வங்கிகள், போதிய அளவு நிதிகள் அளிக்காததால், மகளிர் சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட முடியவில்லை.

மூன்றாவதாக, சட்டம் இயற்றப்படும் மன்றங்களில் பெண்களுக்கான வாய்ப்புகள் இன்னும் நிறைவு பெறவில்லை. 2010ல் இதற்கான பெண்களுக்கான ஒதுக்கீடு சட்ட முன்வடிவு நாடாளுமன்ற மக்களவையிலும் மாநில சட்ட மன்றங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதை நாடாளுமன்ற மாநிலங்கள் அவை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. மகாராஷ்டிரம், பிகார், இமாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம் மற்றம் ராஜஸ்தான் மாநிலங்கள், பஞ்சாயத் ராஜ் அமைப்பில் மகளிருக்கு 50 சதவிகித ஒதுக்கீடு அளித்துள்ளன; மற்ற மாநிலங்கள் மூன்றில் ஒரு பங்கு ஒதுக்கீடு அளித்துள்ளன.

நான்காவதாக, உத்திரபிரதேச மாநில பிருந்தாவனில் மட்டும் ஆயிரக்கணக்கான விதவைகள் மிக மோசமான நிலையில வாழ்கிறார்கள் (உணவு, உடை, தங்குமிடத்திற்காக பிச்சை எடுத்தல், ஆசிரமத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை வீடு கட்டும் மோசடிக்காரர்கள் எடுத்துக் கொள்வதால் தங்க வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு மூப்பு மற்றும் விதவை பென்ஷன்கள் வழங்கப்படுவதில்லை. பாலியல் தொல்லைகள், வாக்கு அளிக்க அடையாள அட்டை இல்லாமை, ரேஷன் அட்டை இல்லாமை மற்றும் அவர்கள் இறக்கும் போது அடக்கம் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.) இதைப்போலவே, நாடு முழுவதும் உள்ள சிகப்பு விளக்கு பகுதிகளில் உள்ள 30,000 மேற்பட்ட விலை மாதர்களின் நிலைமைகளும் மிக மோசமாக உள்ளது. அவர்களுக்கு முன்னுரிமை அளித்து, வாழ்வதற்காக மாற்று வேலை வாய்ப்புகளை அளிக்க வேண்டும்.

ஐந்தாவதாக, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர்களாலும், தொழிற்சாலை பொருட்களுக்கும், விவசாய / கைவினைஞர் களின் பொருட்கள் சேவைகளுக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வான வணிக முறை காரணமாகவும் வியாபாரிகள், இடைத் தரகர்கள் பொருட்களை மடக்குவதால் ஏற்படும் விலை ஏற்றத்தாலும் மிகக்குறைவான மற்றும் சமமான ஊதியம் இல்லாததாலும், நலிந்த உடல் நலத்தாலும் சுகாதாரம் இன்மையாலும், விவசாயத்தில் ஈடுபடும் மகளிருக்கும், பெண் தொழிலாளிகளின் நிலைமையும் மிகவும் மோசமாக உள்ளது. தற்போது ஸ்வீடன் நாட்டில் மகளிர் மகப்பேறு மரணங்களின் விகிதங்கள் எட்டாகவும், சிறு குழந்தைகள் மரண விகிதம் ஐந்தாகவும் உளள நிலையில் இந்தியாவில் 2014ல் சிறு குழந்தைகள் மரண விகிதம் 38 ஆக உள்ளது. இதே சமயத்தில் பங்களாதேஷில் 31 சதவிகிதமாகவும், நேபா ளத்தில் 29 சதவிகிதமாகவும் உள்ளது. 2013ஆம் ஆண்டில் இந்தியாவில் மகளிர் மகப்பேறு இறப்பு விகிதம் 167ஆக இருந்தது. 1990–2012ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் சிறுகுழந்தைகள் இறப்பு விகிதம் 50 சதவிகிதம் குறைந்தது. ஆனால் இதே கால கட்டத்தில் பங்களாதேஷில் 67 சதவிகிதமும், நேபாளத்தில் 66 சதவிகிதமும் குறைந்தது. ஏனெனில், இந்தியா மக்கள் சுகாதாரத்திற்காக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3 சதவிகிதம்தான் செலவிடுகிறது. ஆனால், இதே சமயத்தில் மக்கள் நல்வாழ்விற்காக, பிரிட்டன் 7.6 சதவிகிதமும், அமெரிக்கா 8.1 சதவிகிதமும் செலவழிக்கின்றன. தனிநபர் உடல் நலனுக்காக இந்தியாவில் செய்யப்படும் செலவும் பற்றாக்குறையாகவே இருக்கிறது. இந்தியாவில் $61 ஆகவும், இலங்கையில் $102ஆகவும், பிரிட்டனில் $3598 ஆகவும், அமெரிக்காவில் $9146ஆகவும் உள்ளது. இந்தியாவில், உடல் நலக் காப்பீடு 18 சதவிகிதம் தான் உள்ளது. பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா, பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி யோஜனா ஆகியவை இந்த வகையில் நல்ல துவக்கமாகும். இதுபோலவே, குழந்தைகளுக்கு ஏழு தடுப்பூசிகள் கொண்ட இந்திர தனுஷ் திட்டமும் நல்ல திட்டமாகும். சுத்தமான பாரதம் திட்டமும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். சுகாதாரத்திற்காக செல விடப்படும் ஒவ்வொரு ரூபாயும், உடல்நலம், கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு செலவிடப்படும் ஒன்பது ரூபாய்க்கு இணை யாகும். இந்தியாவில், 640 மாவட்டங்களில் 193 மருத்துவக் கல்லூரிகளும், உயர்தர சிகிச்சை மருத்துவமனைகளும் உள்ளன. இந்தியாவில் 70–80 சதவிகித மருத்துவ வசதிகள் தனியார் துறையில் உள்ளன. ஆகவே, பொதுத்துறையில் இதற்கான செலவினம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவிகிதமாக உயர்த்தப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க 14 மாநிலங்கள் மட்டுமே 212 துரித நீதிமன்றங்களை அமைத்துள்ளன. ஆனால் உத்திரபிரதேசம், பீஹார் மற்றும் குஜராத் மாநிலங்கள் உரிய நேரத்தில் இவைகளை துவக்கவில்லை. 2012ல் இந்தியாவில் 8233 வரதட்சணைசார் மரணங்கள் ஏற்பட்டன. 2001–2012 கால கட்டத்தில், மொத்தம் 91202 வரதட்சணைசார் மரணங்கள் ஏற்பட்டாலும், இதில் தண்டனை பெற்றவர்கள் 15 சதவிகிதமே. ஏனெனில், சட்டத்தை செயல்படுத்தும் அமைப்பும், நீதி மன்றங்களும் உண்மை யாக செயல்படவில்லை. அது அல்லாமல், பொய்யான வழக்குகளும் இருந்தன. மக்கட் தொகையில் 48 சதவிகிதம் உள்ள பெண்களுக்கு முழுமையான மற்றும் கூர்மையான அதிகார மளித்தல் இப்போதைய தேவையாகும். இதில், சம்மந்தப்பட்ட அனைத்து துறையினரும், மகளிரின் பாதுகாப்பு, அவர்களை எல்லாத் துறைகளிலும் உள்ளடக்குதல் மற்றும் அவர் களின் மேம்பாட்டுக்காக ஆண்களும், பெண் களும் இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக செயல்பட வேண்டும். இந்த விஷயத்தில், உலக அளவில் சிந்தித்து, உள்ளூர் நிலைமைக்கு ஏற்ப நாம் செயல்பட வேண்டும்.

●

# இந்தியாவில் பள்ளிக்கல்வியில் பாலின நிலைமை: முன்னேற்றமும் சவால்களும்

– சலேந்தர் ஷர்மா, Dr. ஷஷி ரஞ்சன் ஜா

**ச**முதாயத்தில் பெண்களின் நிலைமையை மேம்படுத்த அவர்களுக்கு கல்வி சார்ந்த ஒதுக் கீடுகளையும், சிறப்புப் பள்ளிகள் அமைக்கப் படுவது பற்றியும் குரல் எழுப்பப்பட்டுள் ளன. ஆனால், எந்தவொரு, ஸ்திரமான முயற்சியும் எடுக்கப்படாமல், அவர்களுக்குரிய பங்களிப்பு அளிக்கப்படாதது மட்டுமல்லாமல் அவர்களின் தனித்தன்மைகள், கண்ணியம், எப்படியெல்லாம் அவர்கள் புறக்கணிக்கப்படு கிறார்கள் என்பதை பற்றி அறிந்து கொள்வதில் தீவிரம் காட்டப்படவில்லை. ஆதலால், கல்வியில் மகளிர் புறக்கணிக்கப்படுகிறார்கள் முழுமையாக இல்லாமல் இருந்தாலும்கூட.

நம்நாட்டில் கல்வியில் பெண்களுக்கு உரிய வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உதா ரணமாக, பன்னிரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மகளிர் கல்வியை போற்றுவது ஒரு முக்கியமான பிரச்சினையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, பெண்கள், ஆண்களுக்குஇணையாககல்விபெறவேண்டும் என்பது மட்டுமல்லாமல், 1986ஆம் ஆண்டு தேசிய கல்வி கொள்கையில் கூறியுள்ளதுபடி கல்வி மகளிரின் நிலைமைகளை முற்றிலும் மாற்றி அவர்களுக்கு தன்னம்பிக்கை அளித்து சமுதாயத்தில் அவர்களுடைய நிலைமையை உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையில் மகளிர் கல்வியை நாம் பார்க்க வேண்டும். கல்வியில் பெண்களுக்கான சம நிலைக்கான செயல் பாடுகள் என்பது தரம் மற்றும் சமத்துவம் சார்ந்தவைகளாகும். பாலினம் சார்ந்த பாட திட்டங்கள் கல்வி கற்பிக்கும் முறைகள், ஆசிரியர் பயிற்சி, கணிப்பு ஆகியவைகளில் பாலின விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் கூடுதலாக நாம் செய்ய வேண்டும்.

## கொள்கை உறுதி

### பெண்கள் கல்வி

பாரம்பரியமாக எல்லா சமூகங்களிலும் பெண்களைவிட ஆண்களுக்குத்தான் கல்வியில் வாய்ப்பு அதிகமாக அளிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட எல்லா நாடுகளிலும் ஏதோ ஒரு வகையான பாலின பாகுபாடு காணப் படுகிறது. ஒரு நாட்டின் உள் நாட்டு மொத்த உற்பத்திக்கும், அந்நாட்டில் மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால், எல்லா நாடுகளும் தங்களுடைய மனித வளங்களை முழுவதுமாக பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. கல்வி மற்றும் பாலினம் பற்றி நாம் விவாதிக்கும்போது, பாலின சமத்துவம் மற்றும் பாலினச் சமநிலை ஆகிய இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். காலப் போக்கில்தான் நாம் சற்று மிகுதியான செயல்களைச் செய்து, பாலின சமத்துவத்தை அடையமுடியும்.


## தேசிய கல்விக்கொள்கை 1986 (1992ல் திருத்தியமைக்கப்பட்ட வகையில்)

சரித்திர ரீதியாக, சுதந்திரத்திற்குபின் பல் வேறு கல்விக் கொள்கைகள், கல்வியில் சம

**சலேந்தர் ஷர்மா,** துணை தலைவர், கல்வி மற்றும் திறன் மேம்பாடு, IPE குளோபல்; லிமிடெட். IPE குளோபல்; லிமிடெட் ஒரு பன்னாட்டு மேம்பாடுசார் ஆலோசனை குழு. வளரும் நாடுகளில் சமத்துவம் சார்ந்த மேம்பாட்டிற்கும் நிலைத்து நிற்கும் வளர்ச்சிக்கும் தொழிற்நுட்ப உதவியையும், வழிமுறைகளையும் வழங்கும் அமைப்பு.

**Dr. ஷஷி ரஞ்சன் ஜா,** மேலாளர், கல்வி மற்றும் திறன் மேம்பாடு, IPE குளோபல் லிமிடெட்.

*நிலை பற்றி வலியுறுத்தி வந்துள்ளன. குறிப்பாக, 1986/1992 தேசிய கல்விக் கொள்கைகள் வேறுபாடுகளை களைவதற்கு முக்கியத்துவம் அளித்தன. பெண்களின் மதிப்பில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டுவர நாம் கல்வியை பயன்படுத்த வேண்டும். பெண்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் அதுவரை தேங்கியிருந்த வேறுபாடுகளை நீக்க முடியும். தொழிற்சார் கல்வி மற்றும் சிறப்புக் கல்விகளில் ஆண், பெண் பாகுபாடுகளை நீக்கவும் பாரம்பரியமல்லாத தொழில்களில் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிக்கவும் தற்போதுள்ள மற்றும் உருவாகிவரும் தொழிற்நுட்பத்தில் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவும், பாகுபாடற்ற தன்மையை தோற்றுவிக்க இந்த கொள்கை முயற்சி செய்யும். இந்தியாவில் நடுநிலைக் கல்வி முன்னேற்றத்தின் முக்கிய மைல் கல்லாக கல்விக்கான உரிமை சட்டத்தின் கீழ் 2009ல் குழந்தைகள் இலவசமாகவும், கட்டாயமாகவும் கல்வி பெறும் உரிமை சட்டம் விளங்கியது.*



சமநிலை சமத்துவம்

## *2016 புதிய கல்விக்கொள்கையின்படி நிலவும் சவால்கள் (தேசிய கல்விக் கொள்கை 2016க்கு சில தகவல்கள்)*

*2016 தேசியக் கல்விக் கொள்கையின் இடு தகவல்களின்படி இளைஞர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கான கல்வி விகிதத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையே பெரிய இடைவெளி இருப்பது ஒரு பெரிய சவாலாக கருதப்படுகிறது. இளைஞர்களின் கல்வி விகிதத்தில் இந்தியாவில் ஆண், பெண்களுக்கிடையேயான இடைவெளி மிக அதிகபட்சமாக 8.2 சதவிகிதமாக உள்ளது. இதில், 15லிருந்து 25 வயதுக்குட்பட்ட ஆண்களின் கல்வி விகிதம் 2011ல் 90 சதவிகிதமாக இருந்தது. அதே சமயம் பெண்களின் கல்வி விகிதம் 81.8 சதவிகிதமாக இருந்தது. வயது வந்தவர்களின் கல்வி அறிவு இடைவெளி 19.5 சதவிகிதமாக உள்ளது. ஆகவே, சிறுமியர் மற்றும் மகளிரின் கல்வி நிலைமைகளை மேம்படுத்த மிகப்பெரிய அளவிலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது.*

## கல்வியில் பெண்களின் பங்கேற்பை அதிகமாக்க திட்டங்கள்

*பெண்களுக்கு கல்வியளிக்கும் வாய்ப்பை விரிவுபடுத்த துரித நடவடிக்கைகளை எடுப்பதற்காக இந்திய அரசு, நடுநிலைப் பள்ளிகளில் பெண்களுக்கு கல்வி அளிக்கும் தேசிய திட்டம் மகிளா சாமக்யா, கஸ்தூர்பாய் காந்தி பாலிகா வித்யாலயா போன்ற திட்டங்களை துவக்கியுள்ளது. சமீபத்தில் இதனுடன் சப்லா மற்றும் மகளைக் காப்பாற்றுவோம், மகளை படிக்க வைப்போம் என்ற இரு பெரிய திட்டங்களை மத்திய அரசு துவக்கியுள்ளது. சப்லா என்பது மத்திய அரசு திட்டமாக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஏப்ரல் 1 2011ல் துவக்கப்பட்ட திட்டமாகும். இந்த திட்டத்தின்படி ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்தில் வரும் 11–18 வயது இளம் பெண்களுக்காக அனைத்து மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலுமிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட இருநூறு மாவட்டங்களில் செயல்படும்.*

*மகளைப் பாதுகாப்போம், மகளைப் படிக்க வைப்போம் திட்டத்தின்படி மகளிருக்கான நலத்திட்டங்களை மேம்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இந்த திட்டம், ரூ.100 கோடி முதலுடன் துவக்கப்பட்டது. ஆண், பெண் பிறப்பு விகிதம் குறைவாக உள்ளதை சரி செய்ய, அக்டோபர் 2014ல் மகளை பாதுகாப்போம், மகளை படிக்க வைப்போம் திட்டம் துவக்கப்பட்டது. அனைத்து மாநிலங்களிலும்,*

> **ஆணுக்கு கல்வி புகட்டினால் ஒருவனுக்கு கல்வி அளிக்கிறோம். ஒரு பெண்ணுக்கு கல்வி அளித்தால் ஒரு நாகரிகத்திற்கே கல்வி அளிக்கிறோம்.**
> **- மகாத்மா காந்தி**

யூனியன் பிரதேசங்களிலும் உள்ள தேர்ந் தெடுக்கப்பட்ட 100 மாவட்டங்களில் பல முனை தேசிய இயக்கமாக இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு அமைச்சகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல்வாழ்வு அமைச்சகம் மனித வள மேம் பாட்டு அமைச்சகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

## சமீப கால சாதனைகள், சோதனைகள் பற்றிய ஆய்வு

### கல்வி விகிதம்


உலகத்திலுள்ள 77 கோடியே 40 லட்சம் கல்வியற்ற வயது வந்தவர்கள் உள்ள நிலையில் இந்தியாவில் இதில் மூன்றில் ஒரு பங்காக 28 கோடியே 70 லட்சம் பேர் உள்ளனர்.[7] உலகத்திலுள்ள கல்வியற்றவர்களின் மூன்றில் இரண்டு பேர் பெண்கள். ஒரு கணிப்பின்படி 50 சதவிகித கல்வியறிவற்றவர்கள் பள்ளிக்குச் செல்லவே இல்லை. மீதமுள்ள 50 சதவிகிதத் தினர் தாமதமாக பள்ளியில் சேர்ந்தனர் அல்லது பள்ளியிலிருந்து விலகிவிட்டனர்.

2011 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 94 சதவிகிதத்துடன் (ஆண்கள் 96.1, பெண்கள் 92.1) கேரள மாநிலம் கல்வி சதவிகிதத்தில் முதல் இடத்தில் உள்ளது. அதற்கு அடுத்து லட்சத்தீவு, மிசோரம், கோவா, திரிபுரா மாநிலங்கள் உள்ளன. கல்வி விகிதத்தில் முதல் 10 இடங்களில் 6 யூனியன் பிரதேசங்களும் நான்கு மாநிலங்களும் (கேரளம், மிசோரம், கோவா மற்றும் திரிபுரா) பெண்கள் கல்வி விகிதத்திலும் அதே நான்கு மாநிலங்கள் முன்னணியில் உள்ளன. இதற்கு மாறாக பீகார் மாநிலம் பெண்கள் கல்வி விகிதத்தில் மிகக்குறைந்த (51.5) இடத்திலும் அதை அடுத்து இராஜஸ்தான், ஜார்கண்ட் மற்றும் ஜம்முகாஷ்மீர் மாநிலங்கள் உள்ளன.


### பாலின விகிதம்

அதிக பெண்கள் பள்ளியில் படிக்க வேண்டுமானால், முதலில் மொத்த மக்கட் தொகையில் பெண்கள் அதிகமாக இருக்க

மொத்த கல்வியறிவு இல்லாதவர்களில் இந்தியாவின் பங்கு





கல்வியறிவு இல்லாதவர்களில் பெண்களின் பங்கு




படம் 1

படம் 2 கல்வியறிவு சதவிகிதம் (இந்தியா)




வேண்டும். ஒட்டு மொத்த பாலின விகிதாச் சாரத்தில் இந்தியா மிக மோசமான 20 நாடுகளில் ஒன்றாக உள்ளது. இந்தியாவின் பாலின விகிதம் 1901ல் இருந்த 972லிருந்து 1951ல் 941 ஆகவும் 2011ல் 940 ஆகவும் குறைந்து விட்டது. இது 2001ல் இருந்த 933 விகிதத்தைவிட சற்று மேம்பட்டதாக இருந்தது. ஆனால், இதில் மோசமான நிலைமை என்ன வென்றால் 2011ல் 06 வயதினரிடையே பாலின விகிதாச்சாரம் எல்லா காலங்களிலும் மிகக்குறைவாக இருந்ததுதான். இதன்படி அடுத்த சில ஆண்டுகளில் பள்ளிகளில் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தை கள் குறைவாகவே இருப்பார்கள். 06 வயதின ரிடையே பாலின விகிதாச்சாரத்தில் முதல் இரண்டு இடங்களில் வடகிழக்கு மாநிலங்கள் உள்ளன (மிசோரம் 971, மேகாலயா 970). ஆனால் மறுபுறம் ‘முற்போக்கு (?)’ மாநிலங் களான ஹரியானா 830 மற்றும் பஞ்சாப் 846 எண்ணிக்கைகளுடன் மிகக்குறைந்த பாலின விகிதாச்சார மாநிலங்களாக உள்ளன.


### பள்ளியில் இல்லாத சிறுமிகள்

மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மேற்கொண்ட சமீபத்திய ஒரு ஆய்வின்படி மொத்த மக்கட் தொகையில் 60,10,000 (3%) குழந்தைகள் பள்ளிக்கு செல்லாமல் இருக் கிறார்கள்.

### பள்ளி செல்லும் குழந்தைகளின் சதவிகிதம்

தேசிய அளவிலான திட்டங்கள் செயல் படுத்தப்பட்டதை அடுத்து எல்லா மட்டங்

படம் 3 : ஆண், பெண் விகிதம் ஒப்பிட்ட பார்வை(ஆதாரம் : மக்கட்தொகை கணக்கெடுப்பு)




0-6 வயதினரின் ஆண் பெண் விகிதம்

ஒட்டு மொத்த ஆண் பெண் விகிதம்

| நிலை | % பெண்கள் (2014-15)[9] | | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஷெட்யூல்டு வகுப்பினர் | ஷெட்யூல்டு பழங்குடியினர் | பிற பின்தங்கிய வகுப்பினர் | இஸ்லாமியர் |
| ஆரம்ப | 48.34 | 48.5 | 48.37 | 48.6 | 49.79 |
| நடுநிலை | 47.46 | 47.6 | 48.4 | 47.17 | 51.74 |
| உயர்நிலை | 47.06 | 47.51 | 47.09 | 47.08 | 50.85 |

களிலும் பெண்கள்; பள்ளிக்குச் செல்வது குறிப்பாக சர்வ சிக்ஷா அப்யான் திட்டம் செயல்படுத்தப்பட்ட போது, உயர் நிலைப் பள்ளிகளில் சிறுமிகளின் சதவிகிதம் 2005–06ஆம் ஆண்டு 45.8 இருந்ததைக் காட்டிலும் 48.2 சதவிகிதமாக உயர்ந்தது.

2014–15 UDISE தகவலின்படி அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் சிறுமிகளின் சேர்ப்பு மிகவும் வேறுபட்டுள்ளது. இந்த வேறுபாட்டை எல்லா நிலைகளிலும் காணலாம் (ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை). ஆனால், படிப்பின் மட்டம் உயர உயர இந்த வேறுபாடும் உயர்ந்து கொண்டே போகிறது. ஆனாலும், கடந்த பத்து ஆண்டுகளில் உயர்நிலைப் பள்ளி களில் பெண்கள் படிக்கும் சதவிகிதம் சற்று உயர்ந்துள்ளது. உதாரணமாக, 2005–06ல் 8வது வகுப்பில் 45 சதவிகிதமாக இருந்தது 2013–14ல் 49 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதற்கு முக்கிய காரணமாக கடந்த பத்து ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி திட்டங்களைக் கூறலாம். அந்த திட்டங்களை பின்வருமாறு காணலாம்.


**பள்ளியிலிருந்து விடுபடுபவர்கள்**

அரசு, பெண்கள் கல்விக்கு பல திட்டங் களை மேற்கொண்டாலும், அவர்கள் அதிக அளவில் பள்ளிக் கல்வியிலிருந்து விலகுவது கவலைக்குரிய விஷயமாகவே இருந்து வருகிறது. 2014 மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச் சகத்தின் கணிப்புகளின்படி பள்ளியிலிருந்து விடுபட்ட குழந்தைகளில் 36.5% சிறுவர்கள், 37.5% சிறுமிகள். இந்த அறிக்கையின்படி சிறுமிகள் பள்ளியிலிருந்து விடுபடுவதற்கான ஐந்து முக்கிய காரணங்கள்:


- ஏழ்மை / பொருளாதார காரணங்கள் (23.9% சதவிகிதம்)
- குழந்தைக்கு படிப்பில் ஈடுபாடு இல்லை (17.5% சதவிகிதம்)
- குடும்ப வருமானத்திற்கு குழந்தையின் உதவி தேவை (11.6% சதவிகிதம்)
- குழந்தைக்கு உடல்நலக்குறைவோ, ஊனமோ உள்ளது (10.8%)
- வீட்டு வேலைக்கு குழந்தையின் தேவை (8.7%)

UDISE 2014-15 தகவல்களின் அடிப்படையில் குழந்தைகள் பள்ளியிலிருந்து விடுபடும் ஆண்டு சராசரி சதவிகிதத்தை கணக்கிடும்போது சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் இடையே எல்லா மட்டங்களிலும், அதிக வேறுபாடுகளை காண முடியவில்லை. ஆனால், உயர் நிலைப் பள்ளிக் கல்வியில் குழந்தைகள் கல்வியிலிருந்து விடுவடுவது, அதிக அளவில் காணப்படுகிறது. (சிறுவர்கள் 3.1% சிறுமிகள் 4.5%. இதைத்தான் நாம் கவனிக்க வேண்டும்.

படம் 4 அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பெண்கள்



படம் 5 வகுப்புசார் பெண்கள் சதவிகிதம்





பள்ளிக்கு செல்லும் தூரம் மிகவும் அதிகமாக உள்ளது, சிறுமிகளுக்கு உடல் ரிதியான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பன போன்ற சமுதாய ரிதியிலான காரணங்களை நாம் கவனிக்க வேண்டும்.

பள்ளிகளில் குறைந்தபட்ச உள் கட்டமைப்பு வசதிகளை அரசு உறுதி செய்ய வேண்டும். அப்போதுதான், சிறுமிகளும், சிறுவர்களும் போதிய உள் கட்டமைப்பு வசதிகள் இல்லாத காரணத்திற்காக பள்ளியிலிருந்து விடு வடுவதை குறைக்க முடியும். இந்த வகையில் நடுநிலைப் பள்ளிகளில், என்னவகையான குறைந்தபட்ச உள் கட்டமைப்பு வசதிகள் இருக்க வேண்டும் என்பதை, கல்விக்கான உரிமைச் சட்டம் தெளிவு படுத்தி உள்ளது. குடிநீர், சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் தனித்தனியாக கழிப்பறைகள், ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகளும், ஆசிரியர்களும், விளை யாட்டு மைதானம், புத்தக சாலை, சாய்தள படிக்கட்டுகள் ஆகியவைகள் இந்த குறைந்த பட்ச உள் கட்டமைப்பு வசதிகளாகும். இதில் முக்கியமாக, சிறுமிகளுக்கு தனியான கழி வறைகள் இருக்கும்போது அவர்கள் பள்ளிக் கல்வியிலிருந்து விலகுவது குறைகிறது. சிறுமிகள் கல்வியின் ஒரு முக்கிய அம்சமாக ஒரு பள்ளியில் பெண் ஆசிரியர்கள் உள்ளனர். *UDISE 2014-15* தகவல்களின்படி எல்லா பள்ளி களிலும் சேர்த்து 46.7 சதவிகிதம் பெண் ஆசிரியர்கள் உள்ளனர். எத்தனை பெண் ஆசிரியர்களை நாம் பள்ளிகளில் ஈடுபடுத்து கிறோம் என்பது மிகவும் முக்கியமானதாகும். கடந்த சில ஆண்டுகளாக நடுநிலைப் பள்ளி களில் பெண் ஆசிரியர்களின் சதவிகிதம் உயர்ந் துள்ளது. எந்தவொரு பிரிவிலும் ஏழ்மையான குடும்பத்திலுள்ள குழந்தைகள்தான் வசதிமிக்க குடும்பத்திலுள்ள குழந்தைகளைவிட மிகமோச மான நிலையில் உள்ளனர். சான்றுகளின்படி மிக வசதிபடைத்த ஷெட்யூல்டு ஜாதி குழந்தை கள் பிற பிரிவு ஏழ்மையான குழந்தைகளைவிட 20 சதவிகிதம் அதிகமாக நிகர வருகை சதவிகிதம் உள்ளது.

ஆரம்பக் கல்வி முடிப்பதில், பொருளா தார வசதிக்கேற்ப வேறுபாடுகள் காணப் படுகின்றன. இதில், ஏழைகளையும், பணக் காரர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஏழை மக்களிடையே ஆண்களைவிட

**படம் 6 ஆண்டுதோறும் பள்ளிக்கல்வி தொடராதவர்கள் எண்ணிக்கை**




பெண்கள் ஆரம்ப கல்வியை முடிக்காமல் இருப்பது அதிகமாக உள்ளது. இது, சிறுவர்களில் 18 புள்ளிகளாகவும், சிறுமிகளில் 27 புள்ளிகளாகவும் 2014ஆம் ஆண்டு இருந்தது.

இந்த ஏற்றத்தாழ்வு ஆரம்ப நடுநிலைப் பள்ளிக் கல்வியை முடிப்பது மட்டுமல்லாமல் உயர்நிலைக் கல்வி நிலைமையிலும் தொடர்கிறது. பத்தாவது வகுப்புத் தேர்வில், மாநிலங்களுக்கிடையே நிலைமைகளைப் பார்க்கும் போது, பாலின சார்ந்த வேறுபாடுகள் மிகுதியாக காணப்படுகின்றன. அஸ்ஸாம் மாநிலத்தில், மாநில கல்வி வாரிய பத்தாம் வகுப்புத் தேர்வில் இந்த பாலின வேறுபாடு மிகவும் அதிகமாகக் காணப்பட்டது. வளர்ச்சியில் பின் தங்கிய மாநிலங்களில் பெண்கள் பத்தாவது வகுப்பு தேர்வு பெறுவதில் பெரும் வேறுபாடு உள்ளது.


கல்வி கற்பதில் சில நல்ல சான்றுகள் உள்ளன. கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சில் மேற்கொண்ட பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான சமீபத்திய தேசிய சாதனை கணக்கெடுப்பின்படி பெண்கள், ஆண்களுக்கு இளைத்தவர்கள் அல்ல என்பது உறுதியாகிறது.

## முடிவுரை மற்றும் பரிந்துரைகள்





இந்தக் கட்டுரையில் சிறுவர்கள் பள்ளிக் கல்வியில் எந்த வகையில் பங்கு பெறுகிறார்கள் என்பதையும் இந்தியாவில் கல்வி விகிதங்கள் எப்படி உள்ளன. அவைகள் எவ்வாறு மாறி வருகின்றன என்பது பற்றியும் பார்த்தோம். கல்வியில் ஆண்கள், பெண்களுக்கிடையேயான வேறுபாடுகளைப் பார்த்தோம். நாம் ஏற்கனவே பார்த்ததுபடி கடந்த 20 ஆண்டுகளில் அடிப்படை கல்வியில் இந்தியாவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கட் தொகையில் சராசரி கல்வியறிவு உயர்ந்து வருகிறது. பள்ளியில் சேர்வது, நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலை பள்ளி அளவிற்கு உயர்ந்துள்ளது. ஆனால், ஆண் பெண் இருவருக்கும் கல்வியில் சமமான வாய்ப்பு ஏற்படுவதற்கு பெரிய சவால்கள் இன்னமும் உள்ளன.

- நடுநிலைப் பள்ளி அளவில் குழந்தைகள்



படம் 9 : பாலினம், வசிக்கும் இடம் மற்றும் சொத்துசார் பிரிவு ஆய்வில் உயர்நிலைப்பள்ளி கல்வியில் நிகர வருகை சதவிகிதம்





## பள்ளிக்கல்வி முடிப்பதில் ஏற்றத்தாழ்வுகள்

| | ஆரம்பக்கல்வி 2007 | | | ஆரம்பக்கல்வி 2014 | | | நடுநிலை பள்ளி 2007 | | | நடுநிலை பள்ளி 2014 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சொத்துசார் குழு | ஆண் | பெண் | ஆண், பெண் வித்தியாசம் | ஆண் | பெண் | ஆண், பெண் வித்தியாசம் | ஆண் | பெண் | ஆண், பெண் வித்தியாசம் | ஆண் | பெண் | ஆண், பெண் வித்தி யாசம் |
| Q1 | 72 | 54 | 18 | 77 | 67 | 10 | 46 | 27 | 19 | 77 | 65 | 12 |
| Q2 | 77 | 64 | 13 | 85 | 79 | 6 | 54 | 39 | 15 | 86 | 78 | 8 |
| Q3 | 81 | 71 | 11 | 88 | 83 | 5 | 60 | 48 | 12 | 89 | 83 | 6 |
| Q4 | 85 | 78 | 7 | 90 | 87 | 3 | 68 | 58 | 10 | 92 | 88 | 4 |
| Q5 | 92 | 87 | 5 | 95 | 94 | 1 | 81 | 76 | 5 | 96 | 94 | 2 |
| Overall | 83 | 73 | 10 | 87 | 82 | 5 | 64 | 53 | 11 | 88 | 82 | 6 |
| Difference (Q5-Q1) | 20 | 33 | | 18 | 27 | | 35 | 49 | | 19 | 29 | |

ஆதாரம் : கணக்குசார் 64வது (2007) மற்றும் 71வது (2014) தேசிய மாதிரி ஆய்வின் தகவலின் அடிப்படையில்

படம் 10 : வெற்றி விகிதத்தில் ஏற்றத்தாழ்வு : 10ம் வகுப்பு – பாலினம் மற்றும் மாநிலம்



பள்ளியில் சேருவது அதிகரித்திருந்தாலும் பெண்கள் அவர்களுக்கான வயதிற்கு குறைந்த வகுப்பிலேயே சேர்க்கப்படு கிறார்கள்.

- இறுதியாக நடுநிலைப் பள்ளிக் கல்வியை முடிக்கும் பெண் குழந்தைகள் நீண்ட வருடங்களுக்குப் பின்பே அதிக செல வோடு முடிக்கிறார்கள்.
- நடுநிலைப் பள்ளி அளவில் பல பெண் குழந்தைகள் மிக அதிக வயதிலும் சில குறைந்த வயதிலும் காணப்படுவதால், பாடம் கற்பிப்பது கடினமாக உள்ளது.
- நடுநிலைப் பள்ளி அளவில் குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பது அதிகரித்திருந்தாலும், அந்தக் கல்வியை முடிப்பதில் ஆண், பெண் குழந்தைகளுக்கிடையே அதிக வேறுபாடு இருப்பது கவலை அளிக்கிறது.

இந்தக் கட்டுரையில் ஆய்வு செய்துள்ளதுபடி நிகர வருகை சதவிகிதத்தைப் பார்க்கும் போது, ஆண், பெண்களுக்கிடையே மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. பெண் குழந்தைகளின் நிகர வருகை சதவிகிதம் ஆண் குழந்தைகளைவிட குறைவாகவே உள்ளது. சமுதாயத்தில் நலி வடைந்த வகுப்புக் குழந்தைகளைப் பார்க்கும் போது, இது இன்னமும் தீவிரமாக தெரி கிறது. ஜாதியும், பொருளாதார நிலைமையும் இந்த வேற்றுமையை ஊன்ற வைத்துள்ளது. இந்த வேறுபாடு, வெறும் ஆண், பெண் குழந்தைகளுக்கிடையே என்று மட்டும் பார்க்கப்படாமல், நலிவுற்ற மக்களைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் பல ஜாதியினருக் கிடையே உள்ள குழந்தைகளின் நிலைமை கள் என்றும் பார்க்க வேண்டும். கிராமப்புற பெண் குழந்தைகளைவிட நகர்ப்புற பெண் குழந்தைகளின் நிலைமை மேம்பாடாக இருக் கிறது. ஒட்டு மொத்தத்தில், ஆண் குழந்தை களைவிட பெண் குழந்தைகள் மோசமான நிலையில் உள்ளனர்.

குழந்தைகள் ஒவ்வொரு மட்டத்திலும் பள்ளிக்கல்வியை முடிப்பதில் மிகுந்த வேறு பாடுகள் காணப்படுகின்றன. பெண் குழந்தை கள், ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பின் தங்கியே உள்ளனர். குழந்தைகள் பள்ளிக் கல்வியை முடிப்பதில் குடும்பத்தின் நிதி வசதி முக்கிய காரணமாக உள்ளது. பெண் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவதாலும், இளம் வயதிலேயே திருமணம் செய்வதாலும் பெரிய சவால்கள் ஏற்படுகின்றன. இது மட்டு மல்லாமல், பெண்கள் படிக்கும் பள்ளிகளில் அதிக வசதிகள் இல்லாததும், பாதுகாப்பாக இல்லாததும் பிரச்சினைகளை பெரிதாக்கு கிறது. சிறு குழந்தைகளுக்கான மத்திய அரசின் கல்வி திட்டங்கள் வெற்றிகரமாக செயல்பட்டாலும், அவை எல்லோருக்கும் பயனளிக்கவில்லை. இந்த தடைகளை எல்லாம் கடந்து பள்ளியில் சேர்க்கப்பட்ட குழந்தைகள் அனைவரையும் முழுக் கல்வி பெறும்வரை தக்க வைக்க வேண்டும். பெண் களுக்கு கல்வியின் மூலம் அதிகாரம் அளிக்க அவர்களுக்கு சமமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். மத்திய மாநில அரசுகள், சமுதாயத்தில் பெண்களின் அந்தஸ்தை உயர்த்த மகளிர்சார் திட்டங்களை துவக்கி ஆண், பெண் இருவருக்கும் சம வாய்ப்பு அளிக்க முயற்சி செய்துள்ளனர். இதில் ஒரு முக்கிய திட்டமாக, ஒரிஸ்ஸாவின் பெண்களுக்கான ஊக்க திட்டங்கள், 2013–2016 என்பதைக் கூறலாம். இந்த திட்டத்தை செயல்படுத்தி 2 ஆண்டுகளுக்குள் நடுநிலை பள்ளி அளவில் பெண் குழந்தைகளின் வருகை சதவிகிதம் 75லிருந்து 84ஆக உயர்ந் துள்ளது. இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், வருகை சதவிகிதத்தை உயர்த்தி பெண்களுக்கு கல்வியை அளிப்பதாகும். இந்தக் கட்டுரையின் மையக் கருத்தாக நாம் கொள்ளவேண்டியது, கல்வி மேம்பாட்டு திட்டங்கள், அதிகமாக பணக்காரர்களுக்கே பயன்படுகிறது. ஆகவே, பாலின பாகுபாட்டை நீக்க ஏழை மக்களுக் கான கல்வி திட்டங்களை செயல்படுத்த வேண்டும். ●

# இந்திய சுதந்திரப் போராட்டத்தி பெண்களின் பங்கு

– டாக்டர் ஜோதி அட்வால்

*1920களில் இந்திய சுதந்திரத்துக்கான காந்திய இயக்கம் பெண்களைப் பெருமளவில் உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டது. வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் காந்திய டிகள் பெண்களின் நிலை குறித்த தனது சொல்லாடல்களை மிகத் திறமையாகக் கையாண்டார். 1920களின் பிற்பகுதியில் சுதந்திரப் போராட்டத்துக்கு ஒரு சமூக அடித்தளம் கிடைத்தது. காந்தியும் உள்ளூர் சீர்திருத்தவாதிகளும் சுதந்திரத்தோடு சேர்த்து குழந்தைத் திருமணம் மற்றும் விதவை மறு மணம் போன்ற சமூகப் பிரச்சனைகள் குறித்துப் பேசினர். "உருவாக இருக்கின்ற" இந்திய தேசத்தின் "நவீன அம்சங்கள்" தேசிய கற்பனாவாதத்தில் ஏற்கனவே துளிர்க்கத் தொடங்கிவிட்டது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட கல்வி சீர்திருத்தங்களாலும் சமூக மாற்றங்களாலும் பலவிதமான வாசிப்பு மற்றும் எழுத்துப் பழக்கம் மக்களிடையே ஏற்பட்டது. ஆனால் இதில் பெண்களின் பங்களிப்பு விகிதம் என்று பார்த்தல் குறைவு தான். கல்வியும் செய்தித்தாள்களின் வழியான அரசியல் விழிப்புணர்வும் படித்த மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தின. 19ஆம் நூற்றாண்டில் பெண்கள் தங்களுக்காக உருவாக்கிய சங்கங்கள் இந்தியா முழுவதும் தோன்றின. 1908ல் வங்காளத்தைச் சேர்ந்த கதை எழுத் தாளரும் கல்வியாளருமான ரொக்கையா ஷக்காவத் ஷுசைன் "சுல்தானாவின் கனவு" என்ற கதையை எழுதினார். இந்தச் சிறுகதை பெண்களுக்கான சொந்த அரசாட்சி முறை என்ற கருத்தை வாசகர்களுக்கு அறிமுகம் செய்தது. வங்காளத்தில் பல புரட்சிக்கர பெண்கள் குழுக்கள் உருவாகின. ரவீந்திரநாத் தாகூரின் தம்பி அல்லது தங்கை மகளான சரளாதேவி சௌதுராணி 1910ல் பாரத் ஸ்திரி மஹாமண்டல் என்ற அமைப்பைத் தொடங் கினார். அவர் அரசியல் போராட்டத்தோடு இந்து மதத்துக்கு புத்துயிரூட்டுதலையும் இணைத்தார். இந்துமதத் திருவிழாவான அஷ்டமி என்பதைக் கடந்த காலத்தின் வெற்றி நாயகர்களைக் கொண்டாடும் விதமாக பிராஷ்டமி என மாற்றினார்.*

*பெண்கள் பங்கேற்பின் இரண்டாவது காலகட்டத்தில் சுயாட்சி மற்றும் அரசியல் அமைப்பு வாதம் முக்கிய இடத்தை வகித்தன. இதுதொடர்பான கூட்டங்களில் மேற் குலக பெண்கள் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றினர். ஐரிஷ் மற்றும் ஆங்கிலக் கலப்பில் பிறந்த அன்னி பெசன்ட் (1847–1933) இந்திய தேசிய காங்கிரஸின் முதல் பெண் தலைவராக 1917ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரம்மஞானவாதியும் சமூகவாதியுமான பெசன்ட் லண்டனில் பயிற்சி பெற்றவராவார். ஐரிஷ் நாட்டு மாதிரியின் அடிப்படையில் அவர் சுயாட்சிக்கான பிரச்சாரத்தைத் தொடங் கினார். அவரது சக கூட்டாளியான ஐரிஷ் வாக்குரிமை பெற்ற மார்க்கரெட் கசின்ஸ் (1878–1954) இந்தியப் பெண்களுக்கான வாக்குரிமை தொடர்பான மசோதாவை உரு வாக்கியதோடு பெண்களுக்கான இந்தியக் கூட்டமைப்பையும் தொடங்கினார். 1917களில் சரோஜினி நாயுடு (1979–1949) முக்கியமான தேசியத் தலைவராக உருவானார். 1925ல் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் தலை வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது பெண்ணாக சரோஜினி நாயுடு விளங்கினார். 1905ல் வங்காளப் பிரிவினைக்கு எதிரான போராட்டத்தின் போது சரோஜினி நாயுடு இந்திய தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். 1915–1918ஆம் ஆண்டுகளின் காலகட்டத்தில் அவர் இந்தியாவின் பல பகுதிகளுக்கும் பயணித்து பெண்களுக்கான அதிகாரம் மற்றும் தேசியவாதம் குறித்துப் பேசினார்.*

---

**டாக்டர் ஜோதி அட்வால்,** புதுதில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இணைப்பேராசிரியராக பணிபுரிகின்றார்.

பெண்களுக்கான இந்தியக் கூட்டமைப்பை உருவாக்குவதிலும் அவர் இணைந்து பணி யாற்றினார். லண்டனுக்குச் சென்ற பெண்கள் வாக்குரிமைக்கான குழுவிலும் அவர் இடம் பெற்றிருந்தார். மூன்றாம் காலகட்டத்தில் முதல் உலகப் போரின் முடிவும் 1919ல் நிகழ்ந்த ஜாலியன்வாலாபாக் படுகொலையும் தேச மக்களின் மனநிலையை மாற்றின. சுதந்திரம் குறித்த கேள்வியில் இந்தியாவின் அனைத்துப் பகுதி மக்களும் ஒன்றுமையுணர்வுடன் சேர்ந்திருந்தனர். 1919ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பிரிட்டிஷ் அரசு பொதுமக்கள் கூடுவது / போராட்டம் நடத்துவதற்கு எதி ராக ரௌலட் சட்டத்தைப் பிறப்பித்தது. சிவில் உரிமைகள் ரத்து செய்யப்பட்டன. அதே ஆண்டு ஏப்ரல் 13ஆம் தேதி காந்தி சந்தியாகிரகம் என்ற அமைதிவழிப் போராட் டத்திலும் ஒத்துழையாமை இயக்கத்திலும் கலந்து கொள்ளமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தார். அமைதியான இந்தப் போராட் டத்தில் அமிர்தசரஸ் (பஞ்சாப்) மக்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றனர். ராஷ்ட்ரிய ஸ்திரீ சங்கங்கள் போன்று தனித்து இயங்கிய பெண்கள் அமைப்புகள் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியுடன் இணைக்கப்பட்டன. வங் காளத்தைத் தாண்டியும் ஒத்துழையாமை இயக் கம் விரிவடைந்தது. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பெண்கள் இதில் பங்கேற் றார்கள். இந்து–முஸ்லீம் ஒற்றுமைக்கான அடை யாளமாகவும் இந்த இயக்கம் மாறியது.

அகமதாபாத்தில் அலி சகோதரர்களின் தாயானா பீஅம்மா ஆண்களுடன் இணைந்து மறியலில் ஈடுபடுமாறு 6,000 பெண்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அழைப்பு விடுத்தார். புறக்கணிக்கப்பட்ட/விளிம்புநிலை சமுதாயங்களின் பெண்களுக்கும் காந்தி அழைப்பு விடுத்தார். ஆந்திரப் பிரதேசத்தில் துடிப்புமிக்க துர்காபாய் காந்தியின் பேச்சைக் கேட்க ஆயிரத்திற்கும் அதிகமான தேவதாசி களை (பாரம்பரியமாக இவர்கள் கோவில் சார்ந்த விலைமாதர்களாகக் கருதப்பட்டனர்) ஒருங்கிணைத்தார். இவர்கள் ரூ20,000க்கான நன்கொடையை தங்க நகைகளாகச் சேகரித் தனர். அடுத்ததாக அதிக அளவில் இந்து விதவைகள் அவரிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். சத்தியாகிரகம் தொடர்பாக எந்தவிதமான பயிற்சியும் தேவைப்படாத பிரிவைச் சார்ந்த பெண்களாக அவர்கள் இருந்தார்கள். என்றாலும் அவர்கள்தான் மிகப் பொருத்தமான பங்கேற்பாளர்களாகவும் இருந்தனர். காந்திக்கு இவர்களே சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர்களாகத் தோன்றினர். ஒரு விதவையின் சொந்த துறவுநிலை என்பது அரசியல் கருத்துருவாக மாற்றப்படலாம். காந்தியால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் விதவைகளை பங்கெடுக்க வைக்க இயலாமல் போனாலும்கூட அவர் விதவைப்பருவம் என்ற கருத்தாக்கத்தின்மீது கவனம் செலுத்தினார். இவ்வாறாக அரசியல் மயமாக்கப்பட்ட இந்து விதவைப் பருவத்தை பொதுமக்களின் மனசாட்சியை தட்டி எழுப்ப காந்தி பயன்படுத்தினார். எனவே பின்காலனித்துவ இந்தியாவில் போராடும் ஒரு விதவைத்தாய் காலனித்துவத்துக்கு எதி ராக இருந்த கடந்த காலத்துக்கான குறியீடா கவும் வளமான எதிர்கால தேசத்துக்கான குறியீடாகவும் தோன்றுகின்றார் (ஜோதி அட்வால் எழுதி தில்லி பிரிமஸ் 2016ல் வெளியிட்ட "நிஜ மற்றும் கற்பனை விதவைகள்: காலனிய காலத்து வடஇந்தியாவில் பாலின உறவுகள்" என்ற நூலைப் பார்க்கவும்).

தேசிய இயக்கத்தின் அடுத்த கட்டமானது, அதிக அளவு பெண்கள் பங்கேற்பினையும் அவர்களின் போராட்ட ஆக்கிரமிப்பையும் எடுத்துக்காட்டியது. 1920களுக்குப் பின்பு உருவான அரசியல் ஸ்திரமற்ற சூழலில் "மதர் இந்தியா" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகத்தை இரண்டு ஆண்டுகள் இந்தியாவுக்கு வருகை புரிந்த அமெரிக்கரான கேத்தரீன் மாயோ எழுதி இருந்தார். இந்து ஆண்கள் குறித்த தனது கடும் கண்டனங்களை இவர் தனது புத்தகத்தில் எழுதியதோடு குடும்பத்துக்குள்ளேயே பெண்கள் அடிமை நிலையில் இருப்பதையும் சுட்டிக்காட்டி எழுதி னார். (மிருணாளினி சின்ஹா எழுதி டியூக் பல்கலைக்கழக அச்சகம் 2006ல் வெளியிட்ட "இந்தியத் தாயின் காட்சிகள்" என்ற நூலைப் பார்க்கவும்). இத்தகைய நிகழ்வுகளின் முக்கிய

அம்சம் எதுவென்றால் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் “இந்து குடும்பம்” என்ற வெளி பொது விசாரணைக்கு திறந்து விடப் பட்டதுவே ஆகும். தேசியவாதிகளும் சீர் திருத்தவாதிகளும் முன்னெடுத்த தேசிய வாத பிரச்சாரங்கள் குடும்பங்கள் பற்றி கவனம் கொள்ள நிர்ப்பந்தித்தன. வன்முறை இல்லாத குடும்ப வெளியை உருவாக்க அவை வற்புறுத்தின. புத்தகம் குறித்து கடுமையான மறுப்புக் கருத்துகள் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்தன. தேசிய அங்கீகாரத்துக்கு இது இந்திய ஆண்களையும் பெண்களையும் ஒருங்கிணைத்தது. 1930களின் மற்றொரு முக்கிய வளர்ச்சி எதுவெனில் சிவில் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்டதுவே ஆகும். உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உப்பு மீது வரிகள் விதிக்கப்பட்டதற்கு எதிராக இந்த இயக்கம் தொடங்கப்பட்டது. சபர்மதி நதிக் கரையோரமாக 24 நாட்கள் நீண்ட நெடிய நடைப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. இப் போது பேரணிகள், புறக்கணிப்புகள் மற்றும் பிராபத் பெரீஸ் (அதிகாலையில் தேசபக்திப் பாடல்களைப் பாடுதல்)போன்றசெயல்களைச் செய்ய பெண் தன்னார்வாலர்கள் போதுமான பயிற்சியைப் பெற்றிருந்தனர்.

தங்களது கூட்டமைப்புக்குள்ளேயே பெண் கள் தேசபக்த குழுக்களை உருவாக்கினார்கள். இவை “தேச சேவக சங்கங்கள்” எனப் பட்டன. பெண்கள் கைதாக விரும்பினர். வன்முறையற்ற எதிர்ப்பை வெளிப்படுத்த அமைதியான பேரணிகளை பெண்கள் நடத்தினர். ஆனாலும் சில தனிப்பட்ட பெண்கள் புரட்சிகர குழுக்களில் சேர்ந்தனர். தனிப்பட்ட பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கொலை செய்வதற்காக புரட்சியாளர்களுக்கு இத்தகைய பெண்கள் உதவினர்.

1930களில் சிறையை நிரப்பிய பெண்களில் குறிப்பிடத்தக்கவர்கள்: சரோஜினி நாயுடு, முத்துலட்சுமி ரெட்டி, மார்க்கரைட் கசின்ஸ், மேலாதேவி சட்டோபாத்யாய் போன்றோர் ஆவர்.

”தாராளவாத குடும்பங்கள் மற்றும் கட்டுப்பெட்டியான குடும்பங்கள், நகர மையங்கள் மற்றும் ஊரக மாவட்டங்கள் என அனைத்துப் பகுதிகளில் இருந்தும் திருமணமாகாத மற்றும் திருமணமான, இளம் வயது மற்றும் முதிர்ந்த வயது என அனைத்து வயதுகளிலும் உள்ள பெண்கள் காலனிய ஆட்சிக்கு எதிராக முன்வந்து சுதந்திரப் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். (தில்லி குரோனிக்கல் புக்ஸ் 2005ல் வெளியிட்டுள்ள காலனிய இந்தியாவில் பெண்கள்: அரசியல், மருத்துவம் மற்றும் வரலாற்று வரைவியல்” என்ற நூலில் ஜெரால்டின் ஃபோர்ப்ஸ் எழுதியுள்ள கண்ணியத்தின் அரசியல்: இந்திய தேசிய காங்கிரசில் இந்தியப் பெண்கள்” என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

ஆண்கள் கைது செய்யப்படும் தருணங்களில் பெண்கள் கூட்டமைப்புகள் ஒத்துழையாமை இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றதோடு கூட்டங்களையும் ஏற்பாடு செய்து நடத்தின. இதனோடுகூட பெண்கள் காந்திய வழியிலான ஆக்கப்பூர்வமான தொழிலான ராட்டையில் நூல் நூற்பதையும் செய்தனர். மேலும் உண்ணாவிரதம் மூலம் அகிம்சை வழியிலான போராட்டத்திலும் ஈடுபட்டனர். 1930களில் இவ்வாறு போராட்டத்தில் பங்கு வகித்த பெண்கள் பற்றிய குறிப்புகளும் வாழ்க்கை வரலாறுகளும் நிறைய உள்ளன. உதாரணமாக 1930களில் லக்னோவில் நடைபெற்ற மாநாட்டை அரசாங்கம் சட்டத்துக்குப் புறம்பானது என அறிவித்தது. இந்தி மொழியில் புகழ்பெற்ற நாவலாசிரியரான பிரேம்சந்த்தின் மனைவி ஷிவ்ராணி தேவி தனது வாழ்க்கை வரலாற்றில் காவல்துறை வாகனத்தில் பெண்கள் உட்கார்ந்து கொண்டு மகாத்மாகாந்தியைப் புகழ்ந்து அவர்கள் கோஷங்கள் எழுப்பினர். அதேபோன்று பாரத் மாதாகிஜே என்றும் கோஷம் (இந்தியத் தாயை வாழ்த்துவோம்) எழுப்பினர். காவல்துறை வாகனத்தில் ஒரு ஆய்வாளர் மற்றும் ஏழு கான்ஸ்டபிள்கள் என காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். எல்லாப் பெண்களும் தேசியப் பாடல்களைப் பாடிக்கொண்டு இருந்தனர். ஆய்வாளர் இறங்கிச் சென்றபிறகு தங்களுக்கு அருகில்

அமர்ந்திருந்த கான்ஸ்டபிள்களின் கண்களில் கண்ணீர் கசிவதை அப்பெண்கள் கண்டனர் என எழுதுகின்றார். ஷிவ்ராணியைக் கைது செய்வதற்கு முன்பே ஆய்வாளர் சுமார் 50 பெண்களைக் கைது செய்திருந்தார். ஆனால் அவர்களைச் சிறைக்கு அழைத்துச் செல்லவில்லை. மாறாக நகரத்திற்கு வெகு தொலைவில் உள்ள புதிய ஒரு இடத்தில் பெண்கள் இறக்கிவிடப்பட்டனர். மகிளா ஆசிரமத்தின் பொதுக்கூட்டத்தில், சுமார் 12,000 பேர் கூடியிருந்த கூட்டத்தில் தான் கைது செய்யப்படுவோம் என்று தெரிந்தே ஷிவ்ராணி உணர்ச்சிக் கொப்பளிக்கும் உரையை ஆற்றினார். அந்நிய நாட்டு துணியை பகீஷ்கரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக நவம்பர் 1931ல் ஷிவ்ராணி ஏழு பெண்களுடன் சேர்த்து கைது செய்யப்பட்டார் (மே 511, 2007 தேதியிட்ட எக்கனாமிக் அன்ட் பொலிடிக்கல் வீக்லியில் ஜோதி அட்வால் எழுதியுள்ள "பிரேம்சந்த்தின் மீள்வருகை:நட்புறவு, சீர்திருத்தம், தேசம் ஆகியவை குறித்து ஷிவ்ராணி தேவி" என்ற கட்டுரையைப் பார்க்கவும்). ஷிவ்ராணி தேவி ஒத்துழையாமை இயக்கத்திலும் ஈடுபட்டு இருந்தார். பல்வேறு அளவுகளில் பெண்களின் தேசியவாத பிரக்ஞை தூண்டப்பட்டபிறகு, அரசியல் சுதந்திரத்தை அடைய அவர்கள் பல்வேறு முறையியல்களை பரிசோதித்துப் பார்க்கத் தொடங்கினர்.

இந்துஸ்தான் சோசியலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் என்கின்ற மற்றொரு முக்கிய மான தேசபக்தி அமைப்புக்கு துர்காவதி தேவி என்றழைக்கப்படும் துர்க்கா பாய் (1907–1999) பங்காற்றினார். அவரும் அவரது கணவருமான பகவதிசரண் வோரா இருவரும் இணைந்து இந்துஸ்தான் சோசியலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் உறுப்பினர்கள் ஆவர். சான்டர்ஸைக் கொன்றபிறகு பகத்திங் மாறுவேடத்தில் தப்பியோடுவதற்காக மேற் கொண்ட ரயில் பயணத்தில் இந்த துர்க்கா பாயும் உடன் பயணித்தார்.

புரட்சிகரச் செயல்பாட்டில் பெண்களின் பங்கேற்புக்கு உதாரணமாக அடுத்து வரும் நிகழ்வு என்பது 1930களில் நிகழ்ந்த சிட்ட காங்க் ஆயுதக்கிடங்கில் நடைபெற்ற திடீர் சோதனையாகும். கல்பனாதத் (1913–1995) இந்தியக் குடியரசுப் படையின் (இன்டியன் ரிபப்ளிக் ஆர்மி) சத்தகிராம் கிளையில் சேர்ந் தார். மே 1931ல் சூரிய சென் என்பவரால் நடத்தப்பெற்ற ஆயுதம்தாங்கிய போராட்டக் குழுவாக இது இருந்தது. சிட்டகாங்கில் உள்ள ஐரோப்பிய கிளப்பைத் தாக்குவதற்காக 1931ல் இவர் பிரிடிலாலா வந்தேதாருடன் சேர்ந்தார். தாக்குதலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு அந்தப் பகுதியை உளவு பார்க்கும்போது அவர் கைது செய்யப்பட்டார். பிணையில் அவர் விடுவிக்கப்பட்ட பிறகு தலைமறை வானார். பிப்ரவரி 17, 1933ல் அவர்கள் தலைமறைவாக இருந்த பகுதியை காவல் துறை சுற்றி வளைத்தது. சூரிய சென் கைது செய்யப்பட்டார். ஆனால் கல்பனா எப்படியோ தப்பிவிட்டார். சிட்டகாங்க் ஆயுதக் கிடங்கு போராட்ட வழக்கில் இரண் டாவது துணை விசாரணையின்போது கல்பனாவுக்கு தீவாந்திரத் தண்டனை வழங் கப்பட்டது. அவர் 1939ல் விடுதலை செய்யப் பட்டார்.

1930களில் காந்திய இயக்கத்தின் முதன்மைத் தலைவர்களில் ஒருவராக கமலாதேவி சட்டோபாத்யாயா (1903–1988) உருவானார். குறிப்பாக உப்புச்சத்தியாக்கிரகத்தில் அவர் முக்கியமான தலைவராக வெளிப்பட்டார். பிறகு சுதந்திர இந்தியாவில், இந்திய கைவினைப்பொருட்கள், கைத்தறி, நாடக அரங்கம் ஆகியவற்றில் விருப்பம் உள்ளவராக அவர் செயல்பட்டார். 1955ல் இந்திய அரசு அவருக்கு பத்மபூஷன் விருது வழங்கியது. 1987ல் இந்தியாவில் வழங்கப்படும் இரண்டாவது உயரிய சிவில் விருதான பத்மவிபூஷன் விருது இவருக்கு வழங்கப்பட்டது. இவர் சமுதாயத் தலைமைக்காக 1966ல் ராமன் மகசேசே விருதினையும் பெற்றுள்ளார். ரத்ன சத்ஸ்யா என்ற சங்கித நாடக அகாதெமியின் விருதும் இவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இசை, நாட்டியம் மற்றும் நாடகத்துக்கான இந்தியா வின் தேசிய அகாதெமியான சங்கீத நாடக அகாதெமியின் வாழ்நாள் சாதனையாளர்

விருதான "ரத்ன சத்ஸ்யா" 1974ல் இவருக்கு வழங்கப்பட்டது.

இதற்கு மாறாக, சரோஜினி நாயுடு அரசியில் தளத்தில் அதிகமாகப் பங்கேற்றார். 1925ல் கான்பூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸின் வருடாந்திர கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்தார். 1929ல் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற கிழக்கு ஆப்பிரிக்க இந்திய காங்கிரஸின் மாநாட்டுக்கும் தலைமை வகித்தார். இந்தியாவில் பிளேக் நோய் தாக்கிய காலகட்டத்தில் இவர் ஆற்றிய சேவைக்காக பிரிட்டிஷ் அரசு கைசர்இஇந்த் பதக்க விருதை வழங்கியது. 1930களில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகத்தில் குஜராத்தின் தர்சனா உப்பு நிலையத்தில் போராட்டம் நடத்திய பெண்களில் ஒருவராக இவரும் இருந்துள்ளார். தர்சனாவில் பிரிட்டிஷ் ஆணைக்கு இணங்க வீரர்கள் சத்தியாகிரகிகளை அடித்துத் துன்புறுத்தினர். 1931ல் காந்தி மற்றும் மதன் மோகன் மாளவியாவுடன் இவரும் வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்டார். சிவில் ஒத்துழையாமை இயக்கத்தில் இவர் முக்கிய பங்காற்றி உள்ளார். காந்தி மற்றும் பிற தலைவர்களுடன் சேர்ந்து இவரும் சிறை சென்றுள்ளார். 1942ல் நடைபெற்ற "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தின் போது இவர் மீண்டும் கைது செய்யப்பட்டார். பிறகு ஆக்ரா மற்றும் ஊத் ஒருங்கிணைந்த சமஸ்தானத்தின் முதல் பெண் கவர்னராக 1947 முதல் 1949வரை பதவி வகித்தார்.

மற்றொரு தேசியத் தலைவரான அருணா ஆசாஃப் அலி (1909–1996) காங்கிரஸ் அமைப்புக்குள் அந்தஸ்தான நிலையைப் பெற்றார். வெளியுலகத்திலும் அவருக்கு நல்ல பெயர் கிடைத்தது. 1942ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் கோவாலிய குளக்கரை மைதானத்தில் தேசிய காங்கிரஸ் கொடியை ஏற்றிய அவரது செயலை பலரும் நினைவில் கொண்டனர். 1958ல் தில்லியின் முதல் மேயராக அவர் நியமிக்கப்பட்டார். அவரது மறைவுக்குப் பிறகு 1997ல் அவருக்கு இந்தியாவின் உயரிய சிவில் விருதான பாரத்ரத்னா விருது வழங்கப்பட்டது. அசாஃப் அலியைத் திருமணம் செய்து கொண்ட பிறகு அவர் காங்கிரஸ் கட்சியில் தீவிர உறுப்பினராகச் செயல்பட்டார். உப்புச் சத்தியாகிரகத்தின் போது பொதுப் பேரணிகளில் அவர் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசிய நாடோடி என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார். 1931ல் ஏற்பட்ட காந்திஇர்வின் ஒப்பந்தத்தின் கீழ் அனைத்து அரசயில் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் படி அவரும் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் விடுவிக்கப்படவில்லை. அருணா ஆசாஃப் அலி விடுவிக்கப்படும்வரை தாங்களும் சிறையை விட்டு வெளியில் போகமாட்டோம் என சக பெண் கைதிகள் உறுதியாக இருந்தனர். மோகன் தாஸ்கரம்சந்த் காந்தி தலையிட்ட பிறகே அவர்கள் வெளியேறினர். பொதுமக்களின் போராட்டமே அவரை சிறையில் இருந்து விடுவித்தது. 1932ல் திஹார் சிறையில் அவர் கைதியாக அடைக்கப்பட்டார். அரசியல் கைதிகளை மோசமாக நடத்துவதற்கு எதிராக அவர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். அவருடைய முயற்சியால் திஹார் சிறையில் நிலைமைகள் மாற்றம் அடைந்தன. ஆனால் அவர் அம்பாலாவுக்கு மாற்றப்பட்டு அங்கு தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்து விடுதலையான பிறகு அவர் அரசியல் ரீதியாகத் தீவிரமாகச் செயல்படவில்லை. ஆகஸ்ட் 8, 1942 அன்று அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை பம்பாய் மாநாட்டில் நிறைவேற்றியது.

தொகுத்துச் சொல்வதென்றால், தேசிய இயக்கத்துக்குள்ளாக இந்தியப் பெண்கள் பங்கேற்ற அளவும் நற்பெயரும் இந்தியத்தாயின் குறியீட்டில் இருந்து பெற்றதாகும். தேசிய பிரச்சாரங்களை முன்னெடுத்தவர்கள் பெரும்பாலும் உயர்வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். அண்மைக் காலங்களில் தலித் மற்றும் பழங்குடியினப் பெண்கள் தாங்களும் தேசத்தின் வரலாற்றில் பங்கேற்றதாக உரிமை கோருகின்றனர். அத்தகைய பல வரலாறுகள் இனிமேல்தான் எழுதப்பட வேண்டும். ●

# பெண்களின் பொருளாதார அதிகாரம்

– இலா ஆர்.பட்

**சு**தந்திரத்துக்காக இந்தியா போராடிக் கொண்டிருந்த, சுதந்திர நாடாக மாறிக் கொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில்தான் நான் வளர்ந்தேன். இளைஞர்களான நாங்கள் தேசத்தை மறுகட்டுமானம் செய்வோம்; ஒவ்வொரு இந்தியரும் சுதந்திரத்தை அனுபவிக்கச் செய்யும் வகையில் நமது வாழ்க்கையை மறுவடிவமைப்பு செய்வோம் என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டோம். மகாத்மா காந்தி இதற்கான வழியை எங்களுக்குக் காட்டினார். அரசியல் சுதந்திரத்திற்குச் சமமான முக்கியத்துவம் தனிநபர் சுத்தத்துக்கும் இருக்க வேண்டும் என அவர் நினைத்தார். கழிப்பறைகளில் சுத்தம், கிராமக் குளங்கள் சுத்தமாக இருத்தல் ஆகியன ஆன்மீக விடுதலையைப் போன்று முக்கியமானவை என அவர் கருதினார். மக்களின் பார்வையில் இருந்து பொருளாதாரத்தைப் பார்க்க நாங்கள் கற்றுக் கொண்டோம். எனக்கும் சேவா அமைப்புக்கும் *(SEWA)* அவருடைய சிந்தனைகளே ஆதாரங்களாக அமைந்தன.

மகாத்மாவின் நான்கு சிந்தனைகள் எங்களுக்கு மிகவும் முக்கியமானவையாக இருந்தன.

1. எளிமை ஏனெனில் சிக்கல் சேரச் சேர அது முன்னேற்றத்துக்கு வழிவகுக்காது என நாங்கள் புரிந்து கொண்டு இருந்தோம்.

2. அகிம்சை அடிப்படையில் வன்முறையானது சுதந்திரம் என்பதோடு ஒத்திசைவாக இருக்காது.

3. தொழிலாளருக்கான கண்ணியம், உழைப்பின் புனிதம் - உழைப்பு என்பன இயற்கையின் சட்டம். இன்றைய பொருளாதார நெருக்கடிக்களுக்கு காரணம் இந்த இயற்கை விதியில் இருந்து விலகியது தான்.



4. மனித மதிப்பீடுகள் ஒரு நபரின் மனிதத் தன்மையை சீர்குலைக்கும் எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

மனித மதிப்பீடுகள் என்ற இந்த நான்கு தூண்களின் அடிப்படையில்தான் இந்தியாவின் பொருளாதாரத்தைக் கட்டமைக்க வேண்டும் என்று எங்களுக்கு வழிகாட்டப்பட்டுள்ளது.

### எளிமை, அகிம்சை, உழைப்பின் புனிதம்

சிந்தனையின் மையமாக மனிதம் இருக்கின்ற காரணத்தினால் சேவாவில் இருக்கின்ற நாங்கள் படிப்படியாக முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த முறையில்தான் வளர்ச்சி இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டோம். வளர்ச்சியைப் புரிந்து கொள்ள, குறிப்பாக அதன் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிப் புரிந்து கொள்ள எங்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் எங்களது சொந்த சுயத்தின், சமூகத்தின், உலகத்தின் தாக்கத்தின் அடிப்படையில் ஒன்றுக் கொன்று சக தொடர்புடையதாக எடுத்துக்

**இலா ஆர்.பட்,** அகமதாபாத்தில் உள்ள சேவா அமைப்பின் சுயவேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள பெண்கள் கூட்டமைப்பின் நிறுவனர் ஆவார்.

கொள்கின்றோம். இதனை நாங்கள் ஆக்கப் பூர்வமான கட்டமைப்பு என்கின்றோம். இதன்மூலம் பொறுப்புள்ள உலக குடிமக்களாக ஆகின்றோம். அத்தகைய உள் தொடர்புகள் எங்களது சேவாவின் அடிப்படையாகவும் சேவா இயக்கத்துக்கு அடிப்படையாகவும் அமைகின்றன. எனது இதயத்துக்கு மிகவும் பிடித்தமானதாகஇருப்பதுவேலை.வேலையை மனிதவாழ்வின் மையமாகவைத்துப்பார்க்கவே நான் விரும்புகிறேன்: "கர்மா". வேலைதான், அதிலும் ஆக்கப்பூர்வமான வேலைதான் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இட்டுச் செல் லும். ஏழைப் பெண்களுடன் பணிபுரியும் போது நாங்கள் பார்த்திருக்கிறோம் அவர்கள் வாழ்வுக்கு வேலைதான் அச்சாணியாக உள்ளது. அவர்களது வாழ்வுக்கு அர்த்தத்தைத் தருவதும் வேலைதான். வேலை ஒரு தனி நபருக்கான அடையாளத்தை ஏற்படுத்தித் தருகின்றது. சரக்குகள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யக்கூடிய வாழ்வாதாரத்தை வேலை தருகின்றது. இதன்மூலம் அது சமு தாயத்தையும், தேசத்தையும் கட்டமைக் கின்றது. இந்தச் சமநிலையை வறுமை உடைத்துப் போட்டு விடுகின்றது. தனிநபர் நிலையில், சமுதாயம் சுற்றுச்சூழல் (அதாவது இயற்கையில்) என ஒவ்வொரு நிலையிலும் நாம் சுரண்டலைப் பார்க்கிறோம். எங்கும் சுரண்டல் என்பது நிறைந்துள்ளது.

வறுமையில் ஒவ்வொரு படிநிலையிலும் வர்க்கம், சாதி, நிறம், மதம், நிலவுரிமை, பாலினம், மொழி ஆகியவற்றின் அடிப் படையில் வேறுபடுத்துதலை நாம் உருவாக்கிக் கொள்கின்றோம். இதன் விளைவாக நாம் அனைத்து வகையிலும் பாதிப்புக்கு ஆளாகக் கூடியவர்களாகி விடுகின்றோம். பொருளா தாரம், சமூகம், மனநிலை மற்றும் ஆன்மீகம் என அனைத்து வகைகளிலும் தங்களுடைய விசுவாசத்தை மக்கள் இழந்து விடுகின்றார்கள். தவறாக வழிநடத்தப்படும் விசுவாசத்துக்கு அவர்கள் ஆட்படுகின்றார்கள்.வறுமைஎன்பது சமூகத்தின் சம்மதத்துடன் வன்முறையைத் தூண்டக்கூடியது ஆகும். வறுமையையும் சுதந்திரத்தைப் பறிகொடுப்பதையும் தனித் தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது. ஏழ்மையிலும் ஏழையாக உள்ள குடிமக்கள் தங்களது உரிமையை அனுபவிக்கும் நிலை இருந்தால் ஒரு நாடு சுதந்திரத்தால் மகிழ்ச்சி யடைய முடியும். ஏழைகள், பெண்கள், பணிபுரிதல் ஆகியவற்றில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் எடுக்கப் பட்ட முடிவாக இது உள்ளது. எனவே பெண் கள் தலைமைப் பொறுப்பு வகிப்பதில் நாம் ஒரு பெரிய மாற்றத்தைப் பார்க்கின்றோம்.

சேவாவில் நாங்கள் யாருக்காகப் பணி புரிந்து கொண்டிருக்கின்றோமோ அந்தப் பெண்கள் மிகவும் பாதிப்புக்கு ஆளாகக் கூடியவர்கள். ஆனால் அவர்கள் ஒன்றாக இருந்தால் அதுவே அவர்களுக்கு வலிமை யாக உள்ளது. வேலையின் அடிப்படையில் நாங்கள் சந்திக்கிறோம்; நெட்வொர்க்குகளை உருவாக்குகிறோம். எங்கள் வேலையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வர்த்தகர்கள், ஒப்பந்ததாரர்கள், நமது அரசாங்கம், சர்வ தேச சமுதாயம், "அமைப்பு" மற்றும் "கட்டமைப்புகள்" ஆகியவற்றின் சுரண்டல் களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள சங்கங் களைத் தொடங்குகின்றோம். சேவாவில், எங்களது நிதித் தேவைகளை சேமிக்க, கடன் கொடுக்க, கடன் பெற, சொத்துக்களை உரு வாக்க, மூலவளங்களை அணுகிப் பெற்று பயன்படுத்த,வாழ்வின் லௌகீகத்தேவைகளை மேம்படுத்த என தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு வங்கியை உருவாக்குகின்றோம். நாங்கள் மிக நெருக்கமாக ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குகின்றோம். நமது நாட்டின் உற்பத்திச் செயல் முறைகள் ஒருங் கிணைய வேண்டும் என்பதற்காக இவற்றைத் தொடங்குகின்றோம். எங்களது பேறுகாலத் தேவைகள், சுகாதாரம், ஆயுள் காப்பீட்டுக்காக சமூகப் பாதுகாப்பு நெட்வொர்க்கை உருவாக்கு கின்றோம். உலகம் முழுவதும் பெண் விவசாயி கள், கைவினைத்திறன் மிக்க பெண்களுக்கான வர்த்தக மேம்பாட்டு நெட்வொர்க் மூலம் உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகள் என்ற

இடைவெளியை நிரப்ப முயல்கின்றோம். நமது திறன்களை மேம்படுத்திக் கொள்ள, நமது உறவுகளை நன்கு பராமரித்துக் கொள்ள, வெளியுலகில் தாக்கத்தை ஏற்படுத்த நாங்கள் பள்ளிகளை உருவாக்கி வருகின்றோம்.

சேவா என்பது ஒரு செயல்திட்டம் அன்று. அது ஒரு நிறுவனமும் அன்று. மேலும் அது பொருளாதாரம் அல்லது பணம் குறித்ததும் அன்று. இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையில் சமநிலையைத் மீட்டெடுப்பது பற்றியதாக அது உள்ளது. இது தற்சார்பு குறித்ததாகும். தனித்தும் மற்றும் அனைவரும் ஒன்று சேர்ந்தும் முடிவுகள் எடுப்பது பற்றியதாகும். அதுதான் அதிகாரம் பெறுதலுக்கான பாதையாகும்.

உலக அளவில், மில்லினியம் வளர்ச்சி இலக்கு என்பது என்னுடைய அனுபவத்தில் பல சமுதாயத்துக்கு அந்நியப்பட்ட விஷயமாகவே உள்ளது. அது தொலைநோக்குப் பார்வை அல்ல. ஆனால் அது தொடர்பியலின் ஒரு வழியாகும். மக்களின் ஒரு அங்கமாக வளர்ச்சிக்கான இலக்குகள் அமைவதற்கு வேறு ஒரு வகைப்பட்ட மொழிக்கான தேவை நமக்கு இருக்கிறது என நான் நினைக்கின்றேன். அதிகாரத்தின் மொழியாக வளர்ச்சிக்கான மொழி இப்போது உள்ளது. அது அதிகாரம் அற்றவர்களுக்கானது அன்று. வறுமை என்பது அதிகாரம் அற்ற ஒரு நிலையாகும். வறுமை என்பது நோய்க்கான அறிகுறி போன்றது. முடிவு எடுத்தலில் அல்லது மூலவளங்களைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாடு ஏதும் இல்லாத நபர்களின் அறிகுறியாக வறுமை உள்ளது. வறுமையின் அதிகாரம் அற்ற தன்மை பங்கேற்பு அல்லது ஆலோசனை மூலம் ஓரளவிற்குத்தான் மறுபூர்த்தி ஆகும். வாழ்க்கை முடிவுகளின் மீதான உண்மையான கட்டுப்பாடு பற்றியதாக அது உள்ளது. அதிகாரம் அற்ற வடிவமாக வறுமையை நாம் பார்க்கத் தொடங்கிவிட்ட பிறகு, அதனை நாம் ஒரு முறையியலாக அணுகத் தொடங்குகின்றோம். அது தீர்க்கப் படக் கூடியதாகவும் தென்படுகின்றது. சமுதாயங்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு அதிகாரம் நிச்சயம் திருப்பித்தரப்பட வேண்டும். வேலை, வாழ்வாதாரம், ஆரோக்கியம், கல்வி, நகரமயமாதல், அகதிகள், அமைதி மற்றும் எதிர்காலம் போன்றவை குறித்து அவர்களே முடிவெடுக்க வேண்டும். நாடுகளின் அத்தகைய பிரகடனங்களில் விடுபட்டுப்போன வார்த்தை எதுவெனில் “சமுதாயம்” என்பதாகும். பொருளாதாரம் மற்றும் பொருளியல் இரண்டும் மக்களால் கோரப்பட வேண்டும். இல்லையென்றால் வளர்ச்சியும் வாழ்வாதாரமும் இணையானதாகவும் வாழ்வின் முரண்பட்ட வடிவங்களாகவும் மாறிவிடும்.

**என்னுடைய வேண்டுகோளைக் கீழே தருகின்றேன்:**

முதலாவது, எந்த ஒரு பொருளாதார சீர்திருத்தம் ஆனாலும் ஏழைப் பெண்கள் மையநிலையில் வைக்கப்பட வேண்டும். குறிப்பாக உணவு, நீர், உடை, வீட்டுவசதி, ஆரம்ப சுகாதாரம், கல்வி, வங்கி முதலான முக்கியமான வேலைவாய்ப்புப் பிரிவுகளில் ஏழைப்பெண்கள் மைய இடம் பெற வேண்டும். இரண்டாவது, வறுமையை எதிர்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சீர்திருத்தத்திலும் “வேலை” மையமாக இருக்க வேண்டும் என்பதை அங்கீகரித்தல். மூன்றாவது, ஏழைகளால் தொடங்கப்படும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் லாபகரமான அளவில் வளர்வதற்கான வாய்ப்பு உள்ளவற்றில் போதுமான முதலீடு செய்யப்பட வேண்டும். நான்காவது, பணி புரியும் ஏழைகளுக்காக முழுமையான சமூகக் காப்புறுதித்திட்டங்களை உருவாக்கிப் பரவலாக்க வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் பொருளாதார அமைப்பானது சமூக அமைப்போடு மிக நெருக்கமாக இணைந்துள்ளது என்பதை நாம் புரிந்துகொண்டாக வேண்டும். ஐந்தாவது, சுயவேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள பெண்களின் திறனை உள்ளூர், சர்வதேசப் பெரும்போக்கு



சந்தைகளில் இணைக்க வேண்டும்.

என்னுடைய கோரிக்கை மிதமான பொருளாதாரத்துக்குத்தான். இதன் மூலம் நான் அர்த்தப்படுத்துவது என்னவென்றால் பேணி வளர்த்தெடுக்கும் பொருளாதாரத்தையே ஆகும். ஒருவரின் சுயத்தை, அவரின் சமுதாயத்தை அவரின் பிரபஞ்சத்தை பேணி வளர்த்தெடுத்தல் என்பதே ஆகும். யார் இதைச் செய்வது? என்னுடைய அனுபவத்தில் ஒரு சமுதாயத்தை மீள் கட்டமைப்பு செய்வதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் பெண்கள்தான். பெண்கள் மீது கவனம் செலுத்துங்கள். நீங்கள் நட்பு அணிகளைக் கண்டடைவீர்கள். அவர்கள் நிலையான சமுதாயத்தை விரும்புகின்றார்கள். தனது குடும்பத்துக்கான வேர்களைப் பெண்கள் விரும்புகின்றார்கள். ஒரு பெண்ணில் நீங்கள் ஒரு வேலையாள், சேவைகளை அளிப்பவர், பாதுகாவலர், கல்வியாளர், நெட்வொர்க்கர் என அனைவரையும் காணலாம். உறவுகளின் உருவாக்கக் களமாகப் பெண் இருக்கிறாள். அவளுக்குள் முதன்மையாக நீங்கள் ஒரு படைப் பாளியையும் பாதுகாவலாளியையும் பார்க்க முடியும். நமது சமாதான செயல்முறைகளின் ஒருங்கிணைந்த ஒரு அங்கமாக பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் நான் பார்க்கிறேன். பெண்கள் ஆக்கப்பூர்வமான, படைப்பூக்கமுள்ள நீடித்த தீர்வுகளை மன்றத் தில் முன் வைப்பார்கள்.

மேலும் மையத்தில் பெண்கள் இருந்தால், அவர்களின் ஆக்கப்பூர்வமான வேலை சமூகத்தை ஒருங்கிணைக்கும் நூலிழையாக விளங்கும். உங்களுக்கு வேலை இருக்கும் போது, நிலையான சமூகத்தைப் பராமரிப்பதற்காக உங்களுக்கு ஊக்கத்தொகை கிடைக்கும். நீங்கள் எதிர்காலத்தை மட்டும் சிந்தித்துப் பார்க்கவில்லை. நீங்கள் எதிர்காலத்துக்காகத் திட்டமிடவும் செய்கின்றீர்கள். பாதிப்புக்கு ஆளாகும் நிலைமையை நீங்கள் சொத்துக்கள் சேர்ப்பதன் மூலம் குறைக்கின்றீர்கள். அடுத்த தலைமுறைக்காக நீங்கள் முதலீடு செய்யலாம். உயிர்வாழ வேண்டும் என்பதற்காக மட்டுமே வாழ்க்கை என இனியும் இருக்காது. மிகச்சிறந்த எதிர்காலத்திற்கு முதலீடு செய்தல் என்பதற் காகத்தான் அது இருக்கும். வேலை என்பது அமைதியை உருவாக்குகின்றது. சமுதாயத்தை கட்டமைக்கின்றது. ஒருவரின் வாழ்க்கைக்கு அர்த்தத்தையும் கண்ணியத்தையும் வேலை தருகின்றது.

நான் ஏற்கனவே கூறியது போன்று, அதிகபட்சமான முக்கியத்துவத்தை நான் வேலைக்குத்தான் தருவேன். வேலை என்றவுடன் நாம் தொழிற்சாலை பணிகளை அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டாம். அதே போன்று இனிப்புக்கடை வேலை என நினைத்துக் கொள்ள வேண்டாம். ஒரு தொழிற்சாலையில் மேலாளருக்கு அடிமையாக ஒரு நபரை மாற்றக்கூடிய தரமற்ற மலிவான வேலையை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண் டாம். இது மற்றொரு வகையான சுரண்ட லாகும். வேலை என்பதற்கு நாம் உணவு உற்பத்தி மற்றும் குடிநீர் பெறுதல் என்றே அர்த்தப்படுத்துகிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் தமக்குள் வைத்திருக் கின்ற வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடிப்பு, வீடு கட்டுதல், ஜவுளி, ஆடை தயாரிப்பு போன்ற துறைகளில் பாரம் பரியமான தற்கால வழக்கில் உள்ள திறன் களை மேம்படுத்திக் கொள்ளுதல் என்பது இதற்கு அர்த்தமாகும். இந்த வேலைதான் மக்களுக்கு உணவளிக்கின்றது. இது மனிதருக் கான உறவை அவருக்காக மீட்டெடுக்கின்றது; மனிதர்களுக்கான உறவுகள், பூமி, சுற்றுச்சூழல், நம்மை படைத்த மாபெரும் ஆன்மா ஆகிய

வற்றுக்கான உறவுகளையும் மீட்டெடுக் கின்றது.

வகைப்படுத்தப்படாத சரக்குளை விற்பதற் கானவர்த்தகவாய்ப்புகளைக்கண்டறிவதுதான் இன்று நமக்கு முன்பு உள்ள சவாலாகும். மரங் களை வெட்டுவதைவிட மரங்களை வளர்த்து அதிக லாபம் பெறும் வழிமுறைகளை நாம் கண்டறிய வேண்டும். புதியதாக உற்பத்தி செய்வதைவிட மறுசுழற்சியில் லாபம் ஈட்ட முயற்சிக்க வேண்டும். தனிநபர் சொத்துகளை உருவாக்குவதோடு சமுதாய உரிமையுள்ள சொத்துக்களை உருவாக்கவும் நாம் ஊக்கப் படுத்த வேண்டும். நியாயமான வாய்ப்பு இருந்தால் கூட்டுறவு என்பதும் நம்மை லாபத்தை நோக்கி அழைத்துச் செல்லும். இது ஆரோக்கியமான போட்டியாகும். நமது சிந்தனைகளில் மாற்றம் ஏற்படும்போது நமது சொற்களிலும் மாற்றத்தை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. என்னுடைய அனுபவத்தில், சேவா வங்கி அதன் இலக்கை அடைவதில் வெற்றி பெற்றுள்ளது. ஏனெனில் ஆயிரக்கணக்கான சேமிப்புக் கணக்குகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங் கப்பட்டுள்ளன. மிகப் பெரிய சொத்துக் களுடன் ஒரு தேசிய வங்கியாக மாறுவதை விட மாவட்ட அளவிலான வங்கியாக இது இருக்கின்றது.

பெண்கள் மாற்றங்களை உருவாக்கி வரு வதை நான் பார்க்கிறேன். பெண்களின் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை வர வேண்டும். ஏனெனில் இது ஒன்றுதான் தற்போது எஞ்சி இருக்கின்ற நம்பிக்கை ஆகும். அனைவரையும் உள்ளடக்கிய நியாயமான சமுதாயத்தையும் நிலைத்த சுற்றுச்சூழலையும் உருவாக்க வேண்டுமென்றால் இதுதான் தேவையாகும். மலிவாகக் கிடைக்கின்ற, அதிலும் எப்போதும் கிடைக்கின்ற மூலவளங் களாகப் பெண்கள் நீண்டகாலமாகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றார்கள். ஆனால், பெண் கள் உலகத்தின் சொத்து என்பதை உலகம் உணரச் செய்ய வேண்டும். பெண்கள் நல்ல நேரங்களிலும் கெடுதலான நேரங்களிலும் எதையும் தாங்குகின்ற நிரந்தர ஷாக் அப்சர்வர்கள் இல்லை. எதையும் தாங்கிக் கொள்பவர்களாக பெண்கள் சித்தரிக்கப் படாமல் பங்குதாரர்களாக சித்தரிக்கப்பட வேண்டும். பெண்களின் பயணத்தில் இலக்கு கள் உள்ளன; அதில் மதிப்பீடுகளும் உள்ளன. செயல்முறையில் இருந்து கற்றுக்கொள்வதும் இருக்கின்றது. இந்தச் செயல்முறை அதனளவில் அதிகாரம் அளிப்பதாக உள்ளது. பெண்மை அதற்கென தனித்த முறையில் காலத்தை உணர்கின்றது. செய்யும் வேலையை முடிக்க எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். பத்துலட்சம் மக்களைச் சென்றடைய சேவாவுக்கு 30 ஆண்டுக்காலம் தேவைப்பட்டுள்ளது. குழுவினர் அனை வரையும் அல்லது சமுதாயத்தை பெண்கள் முழுமையாகப் பார்க்கின்றனர். குழு அல் லது செயல்முறை தாமதமானாலும்கூட, விடுபட்டவர்கள் வந்து சேர்வதற்காக பெண்கள் காத்திருந்து முழுமை பெற்ற பிறகே செயல்படுகின்றனர். ஆதிக்கத்துக்கு மாறாக அனைவரையும் உள்ளடக்குதல், இறுதி இலக்கைவிட செயல்முறைக்கு முக்கியத்துவம், தனிநபரைவிட குழு, பிரிவினைக்குப் பதில் ஒருங்கிணைப்பு என்பவையே பெண்மையின் குறிக்கோள்கள் ஆகும். நான் கூறும் இச் செயல்கள் சேவா சகோதரிகளுடனான எனது தொடர்ச்சியான அனுபவங்களில் இருந்து நான் கற்றுக் கொண்டவை ஆகும்.

## இன்றைக்கு இது எவ்விதம் பொருத்தமாக உள்ளது?

இன்றைய உலகத்துக்கு அதிக அளவில் பெண்களின் தலைமைத்துவம் தேவைப்படு கின்றது. ஏனெனில் நமது காலகட்டத்தின் மாபெரும் சவாலான பணிகளை நாம் இப்போது எதிர் கொண்டுள்ளோம். கூடுத லான எண்ணிக்கையில் பெண் தலைவர்கள் என்பதாகமட்டும்பெண்மைத்தலைமைத்துவம் தேவைப்படவில்லை. தங்களுக்குள் உள்ள பெண்மையை மதிக்கக் கற்றுக்கொள்ளும் ஆண்களும் தேவை என்பதுமாகும். ●

# மகளிருக்கு அதிகாரமளித்தல் - கனவு நனவாகுமா?

– முனைவர் இரா. வெங்கடேஷ்,

*“பெண்களை முன்னேற்றாத நாடு வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியாது.”*

– சுவாமி விவேகானந்தர்

பொதுவாக அதிகாரப்படுத்துதல் என்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட நிகழ்வாகும். ‘அதிகாரப்படுத்துதல்’ என்றால் சமூகத்தில் அதிகாரமற்றவர்களை அதிகாரப்படுத்துவது என்பது தான் சாதாரணப் பொருளாகும். அதிகாரப்படுத்துதல் என்ற சொல் இன்று, நேற்று உருவானதல்ல. விடுதலைப் போராட்ட காலந்தொட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றது. ஆனால் இந்தியாவில் ஏறத்தாழ 1980களில் தான் பெண்களை அதிகாரப்படுத்துதல் என்பது பிரபலமடைந்தது.

“அதிகாரமற்றவர்களுக்கும், தனிமைப் படுத்தப்பட்டவர்களுக்கும் இந்நாட்டின் குடிமக்களாகத் தங்கள் பங்கை ஆற்றுவதற்குரிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டு அவர்களின் வாழ்வியல் தேவைகள் நிறைவுபெறும்போது தான் அதிகாரப்படுத்துதல் என்பது அதன் உண்மையான பொருளையும் முக்கியத் துவத்தையும் பெறுகின்றது” என்ற மறைந்த குடியரசுத் தலைவர் திரு.மு.சு. நாராயணன் அவர்களின் கூற்று நினைவு கூறத் தக்கது.

மேற்சொன்ன கூற்று மெய்ப்பட வேண்டுமானால் அதிகாரமளித்தல் என்பது

(1) சமூகம்

(2) பொருளாதாரம்

(3) அரசியல்

ஆகிய மூன்று நிலைகளையும் உள்ளடக்கியதாகக் கருதப்படுகின்றது.

ஐ.நா. அவை 2001ம் ஆண்டை மகளிர் அதிகாரப்படுத்தல் ஆண்டாகக் கொண்டாடியது. அதே ஆண்டு இந்தியாவில் தேசிய



மகளிர் அதிகாரமளித்தல் கொள்கை உருவாக்கப்பட்டது. பெண்களுக்குச் சம உரிமைகள் வழங்க வேண்டும் என்று ஐ.நா. சாசனத்தில் கையெழுத்திட்டுள்ளது இந்தியா. இந்த ஒப்பந்தத்தில் பெண்களின் வாழ்க்கைத் தர உயர்வையும், சமூக மேம்பாட்டினையும் உறுதி செய்யும் சட்டங்கள் இயற்றுவது உட்பட பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலான உறுதிப்பாட்டிற்குப் பின்பும் பெண்கள் அதிகாரப்படுத்துதல் பற்றிய ஒரு உணர்வுப் பூர்வமான கண்ணோட்டமும், அதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றமும் இன்றி நிர்கதியாய் நிற்கின்றோம். காரணம் புரிதலின்மையா? விழிப்புணர்வின்மையா? மனமின்மையா? பெண்களை அதிகாரப் படுத்துதல் என்ற கருத்தியலில் முதலில் அதிகாரப்படுத்துதல் என்றால் என்ன? அதற்கான வழிமுறைகள் யாவை? அதன் அவசியம் தற்போது தேவையா? மக்களாட்சி முறையில் இத்தகைய செயல்பாடுகள் சாத்தியமா? என்பது பற்றிய புரிதல் அவசியமாகின்றது.

தொன்றுதொட்டு பெண்களின் மீதான சமூகப் பார்வை என்ன? பெண்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றார்கள்? பெண்களின் உரிமைக் குரல் எங்ஙனம் அடக்கப்படுகிறது? பெண்கள் எப்படி தங்கள் நலன்களைக் காத்துக்

---

**முனைவர் இரா.வெங்கடேஷ்,** உதவிப் பேராசிரியர், அண்ணா பொதுவாழ்வியல் மையம், சென்னைப்பல்கலைக்கழகம்.

கொள்ள வேண்டும்? அதற்கான மேம்பாட்டு நடவடிக்கைகள் என்ன? சமத்துவமின்மை,சமூக அநீதிகளை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் என்ன? உண்மையிலேயே பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்வு பெற்று அதிகாரப் படுத்தப்பட்டுள்ளார்களா? காலத்திற்கேற்ற நல்ல மாற்றங்களை சிந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் உள்ளனரா? சமுதாயத்தில் மேம்பாடடைந்த பெண்கள் நலிவுற்ற பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவுகின்றனரா? அதிகாரப்படுத்துவதால் சமூக மேம்பாட்டிற்குப் பெண்களின் பங்களிப்பு எந்த அளவில் இருக்கும்? போன்றவை விடை தெரியா வினாக்களாகவே உள்ளன. ஆனால் உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், ஒருங்கிணைந்த நிலைத்த வளர்ச்சி ஆகியவற்றின் காலமான இன்று தங்களது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கே போராடும் பெண்களின் வாழ்நிலையைக் கருத்தில் கொண்டாக வேண்டும். விடுதலை பெற்று 68 ஆண்டுகளுக்குப் பின்னும் சமூகத்தில் சரிபாதியாய் திகழும் பெண்களை சரிநிகர் சமானமாய் அதிகாரப்படுத்துதல் குறித்து நம்மை நாமே கேள்வி கேட்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் பெண்களை அதிகாரப்படுத்துதல் என்பது காலத்தின் கட்டாயமாகும். எனவே இம்மூன்று நிலைகளில் படிப்படியாகத் தொடர்ந்து அதிகாரப்படுத்துதல் நிகழ்த்தப்படவேண்டும். அதிகாரப்படுத்துதல் சமூகத்தில் எழுந்துள்ள நடைமுறைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பெண்களுக்கு எந்த அளவில் துணை செய்யும் என்பது பற்றிய விவாதம் தேவைப் படுகின்றது.

### சமூக அதிகாரமளித்தல்

இந்தியச் சமுதாயமானது தொடக்க காலந் தொட்டு ஒரு ஆணாதிக்கச் சமுதாயமாகவே பரவலாக அறியப்படுகின்றது. வியத்தகு அறிவியல் வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம், பல்துறை மேம்பாடு என அனைத்திலும் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தாலும் மக்களின் எண்ண ஓட்டத்தில், மனநிலையில் அதற்கேற்ப மாற்றம் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. பெண்கள், ஆண்களுக்குச் சற்றும் சளைத்தவர்கள் இல்லை என்று பல்வேறு நிலைகளில் நிரூபிக்கப்பட்டிருந்தாலும் சமுதாயக் கட்டமைப்பின்படி அவர்களது உரிமைகள் மறுக்கப்படுவதும், சமத்துவமின்மை நிலைபெறுவதும், பாரபட்சமான போக்குகள் தொடர்வதும் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. இதனால் சமுதாயத்தின் விளிம்பில் பாலினப் பாகுபாட்டினால் பெண்கள் பரிதவித்து நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சமத்துவம் அற்ற இந்தச் சமுதாய அவலத்திலிருந்து பெண்களை மீட்காமல் அவர்களை அதிகாரப் படுத்துதல் என்பது கடினமான ஒன்றாகும். சமூக அதிகாரமளித்தல் என்பது பாதுகாப்பான சூழலில் பெண்களுக்குச் சமூக அங்கிகாரத்தினை வழங்குவதும் உறுதிப் படுத்துவதுமாகும். அந்த வகையில் மத்திய, மாநில அரசுகள் எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் மட்டுமல்ல பெண்கள் நலனுக்கான திட்டங்களின் தன்மையை மேம்படுத்திட பாலின பட்ஜெட் முறையை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றது. “நிர்பயா நிதி” என்ற பெயரில் ரூ. 1000 கோடி பெண்களின் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அரசின் திட்டங்களுக்கான பயனாளிகளில் குறைந்தது 33 சதவீதத்தினர் பெண்கள் மற்றும் குழந்தைகளாக இருக்க வேண்டும் என்பது திட்ட இலக்காக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. பெண்களின் நிலை உயர்த்தப் பட்டு சம தகுதி, சம பங்களிப்பு அளிக்கப்பட வேண்டும். அடித்தட்டுப் பெண்களை மையப்படுத்துகின்ற சமூகமாக மாற்ற முயற்சி எடுத்தல் இன்றைய தேவையாக உள்ளது. சாதி, மத, இன கலாச்சார ரீதியான வேறுபாடுகள் களையப்பட வேண்டும். சமூக அறநெறிகளிலிருந்து மாறுபட்டுச் செல்கின்ற போக்கும் தென்படுகின்றது. கலாச்சார, பண்பாட்டுக் கூறுகள் எழுச்சி பெறவேண்டும். அதிகாரமற்றவர்களாய் பெண்கள் இருப்பதால் சமூகம் இழந்தது என்ன? என்பதைச் சிந்திக்கும் எண்ணப் போக்கு உருவாக வேண்டும். அப்போது தான் பெண்களின் மீதான சமூகப் பார்வை ஏற்றம் பெறும். சமூக அதிகாரமளித்தல் பெண்களை அதிகாரப் படுத்துவதற்கான களமாக உருவாக்கப்பட

வேண்டும். அத்தகைய உயர் பொறுப்பும், கடமையும் பெண்களுக்கு மட்டுமல்ல நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது என்று உணரப் பட வேண்டும்.

### பொருளாதார அதிகாரமளித்தல்

பெண்களை அதிகாரப்படுத்தி வலிமை சேர்க்கும் உத்திகளில் சிறந்ததாகக் கருதப் படுவது அவர்களின் பொருளாதார நிலையை மேம்படச் செய்வதாகும்.

பெண்களின் பொருளாதார மேம்பாடு என்பது இன்னும் நனவாகாத கனவாகவே இருந்து வருகின்றது. பெண்கள் பொருளா தாரத்தில் பிறரைச் சார்ந்தே இருக்க வேண்டியுள்ளது. பொருளாதார ரீதியிலான தடைகளிலிருந்து விடுபட்டு தற்சார்புடையவர் களாக அவர்கள் வலுப்பெற வேண்டியது அவசியமாகின்றது. பெண்கள் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விடுதலை பெறாமல் சமூக மாற்றத்திற்கும் நாட்டின் வளர்ச் சிக்கும் குறிப்பிடத் தகுந்த பங்களிப்பைச் செலுத்த முடியாது. பெண்களை அதிகாரப் படுத்துவதற்கு எத்தனையோ சிறப்பான செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தாலும் அவற்றால் எதிர்பார்த்த பலனை அடைய முடியவில்லை. பெண்களுக்கான பொருளாதார விடுதலை என்பது சொத்தில் சம உரிமை அளிப்பதாலோ அல்லது மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியினாலோ கிடைத்து விடாது. மாறாக, வாழ்க்கைச் சூழலும், அரசின் திட்டங்களும் வாழ்க்கைத்தர மேம்பாட்டின் அடையாளமாக காட்டப்பட்டு பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், உயர்த்தப்பட்ட நிலையைத் தக்க வைப்பதற்குமான இலக்கு நோக்கி பயணித்து பொருளாதாரத் தற்சார் புடையவர்களாக மாற்ற வேண்டும். அப் பொழுது தான் பொருளாதாரத்தில் அடுத்தவர்களைச் சாராமல் விடுதலை பெற்றவர்களாய் அதிகாரப்படுத்துவதற்கான தகுதி படைத்தவர்களாய் பெண்கள் உயர முடியும். பொருளாதார ரீதியில் ஆண் பெண் இடையிலான ஏற்றத் தாழ்வு மிக அதிகமாக உள்ளது. பெண்களின் பங்கேற்பு மற்றும் செயல்பாடு என்பது அனைத்து நிலைகளிலும் மறுக்கப்பட்ட ஒன்றாக இன்றும் நிலவுவதால் ஏறத்தாழ 51 சதவீதம் ஆண்கள் பணிக்குச் செல்லும் சூழலில் பணியாற்றத் தகுதியுள்ளவர்களில் வெறும் 25 சதவீத பெண்கள் மட்டுமே பணிக்குச் செல்கின்றனர். பெண்களிடையே பரவலாகத் தன்னம்பிக்கை அதிகமாக இருப்பதால் சாதிக்க நினைக்கும் துறைகளிலெல்லாம் சவால்களை எளிதாகச் சந்திக்கின்றனர். ஆனால் சில சமயங்களில் பொருளாதார நிலை பெரும் தடையாக அமைந்து விடுகின்றது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள், திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் முயற்சிகள் பெரும்பாலும் அடித்தட்டு ஏழைப் பெண்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்குதல், கூட்டாக நிர்வகித்தல், முடிவெடுத்தல் போன்ற வற்றிற்கான அதிகாரங்களை அடிப்படை நிலையிலேயே வழங்குகின்றது. இதன் மூலம் பொருளாதாரம் சார்ந்த செயல்கள் நிலைத்த செயல்களாக மாறுவதுடன் நீண்டகால நோக்கில் மேம்பாட்டின் பலன்களை அனை வருக்கும் கொண்டு செல்ல முடியும். இது அதிகாரப்படுத்துதலுக்கான முதன்மைப் படி நிலையாகக் கருதப்படுகின்றது.

### அரசியல் அதிகாரமளித்தல்

பெண்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பெரும்பாலும் சமூக, பொருளாதார விடு தலை அடிப்படையாக இருந்தாலும் அரசியல் விடுதலை பற்றிய சிந்தனையும் முக்கியத் துவம் பெறுகின்றது. பெண்களை அதிகாரப் படுத்துவதற்கான அடுத்த படிநிலையாக அரசியல் விடுதலை சமூக நோக்கர்களால் கருதப்படுகின்றது. எனவே தான் 1990களில் இருந்து பெண்களின் முன்னேற்றத்தில் குறிப்பிடத் தக்க மாற்றத்தை உருவாக்கும் வகையில் அரசியல் விடுதலை முன்னெடுக் கப்பட்டது. சமூக, பொருளாதார விடுதலை ஓரளவு கிடைத்துவிடும் சூழலில் அரசியல் விடுதலையின்றி பெண்களை அதிகாரப் படுத்துதல் என்பது முழுமை பெறாது.

சமதகுதியுடன், பொருளாதார சுய சார் பாளர்களாகப் பெண்கள் வெற்றிகரமாகச் செயல்படும் சூழலில் பொது அமைப்புகள், அரசியல் அமைப்புகள், முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட அமைப்புகள் ஆகிய வற்றில் முடிவுகளைத் தீர்மானிப்பவர்களாக பெண்களின் நிலை உயரும் பட்சத்தில்

அரசியல் விடுதலை கிடைத்துவிடும். வெறும் வாக்கு வங்கிகளாக மட்டுமே அறியப்பட்ட பெண்கள் இன்று மக்கள் பிரதிநிதிகளாகவும், தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 1990களின் தொடக்கத்தில் உருவான இந்நிலை அதிகாரப் படுத்தலுக்கான வாய்ப்புகளை அதிக அளவில் ஏற்படுத்துவதற்கான கருவியாக கருதப்பட்டது. தொடர்ந்து 1992ல் நடைமுறைப்படுத்தப்பட்ட 73 மற்றும் 74ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனநாயக அமைப்புகளில் பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தை சட்டத் தன்மையுடன் உறுதிப்படுத்தின. அதன் காரணமாக இன்று நாடு முழுவதும் 33 சதவீதப் பெண்கள், (குறிப்பாக ஒரு சில மாநிலங்களில் 50 சதவீதம்) உள்ளாட்சி அமைப்புகளில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொண்டு பரிபாலனம் செய்து வருகின்றனர். இந்நடவடிக்கை மூலம் உள்ளூர் அளவில் பெண்களுக்கு அரசியல் மற்றும் பொருளாதார சுய நிர்ணய உரிமை முழுமை பெறும் என்பதில் ஐயமில்லை.

அரசியலில் இத்தகைய முற்போக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் அடிமட்ட நிலையில் பெண்கள் உண்மையிலேயே அதி காரப்படுத்தப்பட்டுள்ளனரா? மேலோட்ட மாக நிர்வாக அமைப்புகளில் பங்கு பெற் றாலும் அவர்கள் முடிவெடுக்கும் சூழலில் உள்ளனரா? போதிய விழிப்புணர்வு பெற்று தற்போது தீர்மானிக்கும் சக்தியாக அவர்கள் மாறிட எண்ணும் போது ஏன் முடிய வில்லை?

“மகளிருக்கு அதிகாரமளித்தல் இயக்கம்” 2011ம் ஆண்டு முதல் செயல்பட்டாலும் இட ஒதுக்கீடு மற்றும் உள் ஒதுக்கீடு அரசியலால் பெண்களின் அரசியல் அதிகாரமளித்தல் முழுமை பெறவில்லை. காரணம் அரசியல் விடுதலை என்பது இன்னும் குறிப்பிட்ட ஒரு சிலரின் பிடியில்தான் உள்ளது. அதிகாரப் படுத்துவதற்கான நடவடிக்கைகளும் உத்தி களும் பெரும்பாலும் அரசியல் சார்ந்தே முன் னெடுக்கப்படுவதால் பெண்களின் அரசியல் அதிகாரமளித்தல் அவசியமாகின்றது.

பெண்களின் நலனைக் காக்கவும், பெண் களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், பெண்களுக்கெதிரான அனைத்து முரண் பாடான அம்சங்களையும் நீக்குகின்ற வகையில் எண்ணற்ற சட்டங்களும், திட்டங்களும் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளன. இவைகளால் நீண்ட, நிலைத்த மாற்றம் ஏற்பட்டுள்ளதா என் றால் அது ஆய்விற்குட்பட்டதாகும். ஆனால் பெண்களின் முன்னேற்றத்தில் உண்மையான ஒரு மாற்றத்தை முழு அளவில் உருவாக் கிட முயன்றும் முடிந்த வரை இருந்த நிலை யிலிருந்து வேறுபட்டு சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் பெண்கள் ஓரளவிற்கு ஏற்றம் கண்டு உண்மையான வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்து வருகின்றார்கள் என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் 73ஆவது மற்றும் 74ஆவது அரசியல் திருத்தங்களாகும்.

அதிகாரப்படுத்துதல் என்பது கொள்கை அளவில் அரசால் இன்று முன்னிலைப் படுத்தப்பட்டாலும் தங்களின் அன்றாட வாழ்வைத் தக்க வைத்துக் கொள்ளப் போராடி வரும் பெண்களுக்குச் சம வாய்ப்பு அளிப்பது குறித்துச் சிந்திக்காமல் அதிகாரப்படுத்துவது அர்த்தமற்றதாகிவிடும். எனவே பாலினச் சமத்துவத்தை ஏற்படுத்துதல், நிர்வாக மற்றும் பொருளாதாரச் செயல்பாடுகளில் சம பங்கேற்பு, பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு போன்றவற்றை முன்னெடுக்கும் வகையில் விழிப்புணர்வுக் குழுக்களை உரு வாக்கிச் செயல்படுத்திட வேண்டும்.

பெண்கள் அதிகாரப்படுத்தப்பட்டால் அது உலக அரங்கில் மேலும் இந்தியாவை அதிகாரப்படுத்திட வழிவகுக்கும். அத்திசையில் எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும். பெண்களின் நிலை சமூக, பொருளாதார, அரசியல் மதிப்புகளின் கீழ் இயங்காத வரை யிலும், தனிப்பட்ட உரிமைகள் ஒருமித்த உணர்வுடன் மதிக்கப்படாத வரையிலும் அதிகாரப்படுத்துதல் என்பது வெறும் கொள்கை வரைவுத் திட்டமாக இருக்குமே தவிர சமத்துவ மேம்பாட்டினை உருவாக்கிட வழிவகை செய்யாது. பொது நல நோக்கில் மனித நேயத்தையும், மதிப்புகளையும் வேர் களாகக் கொண்ட அதிகாரப்படுத்துதல் தான் ஆரோக்கியமானது. அதை நோக்கிய பயணம் இன்றியமையாதது. ●

# இந்தியக் கண்ணோட்டத்தில் பெண்களுக்கு அதிகாரம்

– கமலா பாசின்

**வ**ளர்ச்சி, குடும்பங்கள், சமூகங்கள் தேசங்களின் நல்வாழ்வு ஆகியவற்றிற்கு பாலின சமத்துவமும் பெண்களுக்கு அதிகார மளித்தலும் மிக அவசியம் என்பதை இன்றைய தினம் பெரும்பாலான நாடுகள் கருதத் தொடங்கிவிட்டன. மக்கள் தொகையில் ஐம்பது சதவிகிதம் உள்ள மகளிரும் பெண்களும் மதிக்கப்படாமலும், சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் இல்லாவிடில் எந்த தேசமும், சமுகங்களும், குடும்பமும் முன்னேறவோ மகிழ்ச்சியாக இருக்கவோ முடியாது.

இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பெரும்பாலான நாடுகளிலும் பெண்களுக்கு எதிரான பாரபட்சமான போக்கு கடைப்பிடிக்கப் படுவதுடன் அனைத்து மட்டங்களிலும் முடிவுகள் எடுக்கும் சமயங்களில் பெண்கள் ஒதுக்கிவைக்கப்பட்டு அவர்களுக்கு உரிய அதிகாரம் மறுக்கப்படுகிறது. பெண்களைவிட ஆண்கள் உயர்ந்தவர்கள் எனக் கருதுவதும் ஆதாரங்கள், முடிவுகளை எடுப்பது, சித்தாந்தம் ஆகியவற்றில் ஆண்களுக்குத்தான் அதிகக் கட்டுப்பாடு உள்ளது என்ற ஆணாதிக்க போக்கு நிலவுவதும் இதற்கு முக்கிய காரணமாகும். பெண்களுக்கு எதிரான ஆணாதிக்க வன்முறை என்பது இந்த அமைப்பின் ஒரு பகுதியாகவே உள்ளது. **வன்முறை அல்லது வன்முறை தொடர்பான அச்சத்தின் மூலமாகவே பெண்கள் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். மூன்றில் ஒரு பெண் வன்முறை தாக்குதல்களை அனுபவிப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது. இந்தக் கணக்கின் படி 100 கோடிக்கும் அதிகமான பெண்கள் வன்முறைக்கு ஆளாகின்றனர். இது உலகில் நடந்து கொண்டிருக்கும் மிகப்பெரிய போராகத் திகழ்வதுடன், இவை குடும்ப அளவிலேயே நடக்கின்றன என்பதுதான் கொடுமையிலும் கொடுமை.**

அனைத்து படிநிலைகளின் கீழ் நிலையில் இந்தியப் பெண்கள்

இந்தியாவில் பெண்கள் நிலையை பொதுமைப் படுத்துவது மிகவும் கடினமாகும். அவர்களிடையே பெரும் வேறுபாடுகள் இருப்பதே இதற்குக் காரணமாகும். அவர்கள் வெவ்வேறு பிரிவுகள், சாதிகள், மதங்கள், சமூகங்களைச் சேர்ந்தவர்கள். இருந்தபோதிலும் அவர்களில் பெரும்பாலானவர்கள் ஆணாதிக்கக் கட்டமைப்புகள் மற்றும் சித்தாந்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பாலின வேற்றுமைகளையும், அடிபணிய வேண்டிய நிலையையும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். சமுதாயம் மற்றும் மனித வளர்ச்சிக் குறியீடுகளில் அவர்கள் ஆண்களை விட பிந்தங்கிய நிலைலேயே உள்ளனர். உலகின் பாலின விகிதாச்சாரத்தில் இந்தியாவின் நிலை மிக மோசமானதாகவே உள்ளது. பெண்களின் வாழ்க்கை எதிர்பார்ப்பு ஆண்களை விட குறைவாகவே இருப்பதுடன் பெண்களின் சுகாதார, ஊட்டச்சத்து மற்றும் கல்வி நிலைகள் ஆண்களைவிட மிகக் குறைவானதாகவே உள்ளன. குறைந்த திறன் தேவைப்படும். குறைந்த ஊதியம் அளிக்கப்படும் பணிகளில் மட்டும் பெண்கள் கவனம் செலுத்துகின்றனர். அவர்களுக்கு ஆண்களை விட குறைவான ஊதியம் வழங்கப்படுவதுடன் உற்பத்தி ஆதாரங்கள், சொத்துக்களுக்கு உரிமையோ கட்டுப்பாடோ கொண்டிருப்பதில்லை. பெண்களைத் தலைவர்களாக கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் இவர்கள் நமது நாடுகளில்

---

**கமலா பாசின்,** 'சங்கத்' எனும் பெண்ணிய அமைப்பில் பணியாற்றி வருபவர்.

மிகவும் ஏழ்மையான நிலையில் உள்ளனர். அரசியல் மற்றும் சமுதாயம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் பெண்களின் பங்களிப்பு பூஜ்யமாகவே உள்ளது. நாடாளுமன்றதில் பெண்களின் பங்கேற்பு அதிகபட்சமாக 10 சதவிகிதமாகத்தான் இருந்துள்ளது. நீதி தொடர்பான அதிகாரங்களில் இருந்தும் அவர்கள் விலக்கியே வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்வை நிர்வகிக்கும் சமூக, பொருளாதார சட்டங்களில் மிகக் குறைவான அளவே கருத்து கொண்டுள்ளதால் அவர்கள் இன்னமும் அடிமைகளாகவே இருக்கும் நிலை தொடர்கிறது.

முற்றிலும் இல்லாவிட்டாலும் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் பெண்கள் அனுகூலமற்ற, கடுமையான, அச்சம் நிறைந்த வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டுள்ளனர். புறக்கணிப்பு. பாரபட்சம் ஆகியவற்றின் சுமை, வீட்டு வேலைகளின் சுமை, உடன்பிறந்தவர்களை கவனித்துக் கொள்ளும் சுமை, வீட்டுக்கு வெளியே உள்ள வேலைகளின் சுமை ஆகியவற்றை எப்போதும் சுமந்து கொண்டே இருக்கின்றனர். கருவிலேயே கலைக்கப்படும் அச்சம், விஷம் கொடுத்துக் கொல்லப்படும் அச்சம், புறக்கணிக்கப்பட்டும் உயிர் இழக்கவும் அனுமதிக்கப்படும் அச்சம், போதுமான அன்பு, கவனம், ஊட்டச்சத்து, சுகாதார பராமரிப்பு, கல்வி கிடைக்காத அச்சம் என பல்வேறு அச்சங்களில் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நமது மகள்களும் தொடுதல் தொடங்கி கற்பழிப்பு வரை பல்வேறு பாலியல் துன்புறுத்தல் அச்சத்துடன் வாழ்கின்றனர். கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ள போதிலும் மோசமான கற்பழிப்புகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. திருமணத்திற்குப் பிறகு அவர்கள் தனிமை, தவறான பார்வை, மன மற்றும் உடல் கொடுமைகளை எதிர்கொள்ளும் அச்சத்துடனேயே வாழ்கின்றனர்.

மகளிர் இயக்கங்கள் உருவாக்கிய அழுத்தம் அரசும், சமுதாய அமைப்புகளும் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக மகளிர் விவகாரங்களில் ஒரு நேர்மறையான மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அதிகாரமளித்தல் ஒரு சக்திவாய்ந்த அரசியல் நடைமுறை

**பாலின சமத்துவத்தை நோக்கி முன்னேறுவதற்கு நாம் அதிகாரமளிக்கப்படாத பாலினங்களாகிய மகளிர் மற்றும் பெண்களுக்கு நாம் அதிகாரம் அளிக்க வேண்டும். யாருக்கு நாம் அதிகாரம் அளிக்க வேண்டும் என்றாலும் அதற்கு முன்னதாக அவர்களை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். அதிகாரம் என்பது சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் செயல்படுவதற்கான திறன் அல்லது இயலுமை ஆகும். அது மற்றவர்களை கட்டுப்படுத்துவதற்கு அல்லது மற்றவர்களிடையே செல்வாக்கு பெறுவதாகும். அதிகாரம் என்பதற்கு சுயாட்சி, சுதந்திரம், நமது விருப்பங்களைத் தேர்வு செய்வது, செல்வாக்கு கொண்டிருப்பதாகும்.**

மற்றவரின் மீதான கட்டுப்பாடு, நமது பங்கிற்கும் அதிகமான கட்டுப்பாடு என்பது அதிகாரமளித்தலின் பொருளாகாது. அதற்கு ஒருவரது பேராசையை கட்டுப்படுத்துவது, வன்முறை, வளர்ச்சிக்குத் தேவையான அதிகாரம், ஆற்றுதல், அடுத்தவர் மீதான கவனிப்பு, நீதிக்கு எதிராக போராடுவத்றகான அதிகாரம், அற்நெறி, உள் வளர்ச்சிக்கான அதிகாரம் மூலம் ஞானம் மற்றும் இரக்கம் பெறுவதே அதிகாரம் ஆகும்.

பெண்களை ஒதுக்கி வைக்கும் கட்டமைப்புகள் மற்றும் சித்தாந்தங்களை மாற்றும் திறனை பெண்களுக்கு அளிப்பதற்கான ஒரு தொடர்ச்சியான நடைமுறையே பெண்களுக்கு அதிகாரம் என்பதற்கான போராட்டம். அவர்கள் சுய மரியாதை, கண்ணியம் ஆகியவற்றை அளித்து அவர்கள் தங்கள் சொந்த நிலை மற்றும் சமூக நிலையை மாற்ற உதவும் ஒரு நடைமுறையாகும்.

பெண்களுக்கும் மற்றும் ஆண்களுக்கும் இடையே தற்போது உள்ள உறவை மாற்றுவதை பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது நோக்க மாகக் கொண்டது என்பதால் இது ஒரு அரசியல் நடைமுறையாகும்.

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் இலக்கு சமூகத்தில் உள்ள அனைத்து படிநிலை களிலும் பாலின உறவுகள் மாறவேண்டும்,

பெண்களுக்கான அதிகாரம் என்பது இயற் கைக்கான அதிகாரம், அனைத்து ஒடுக்கப் பட்ட மக்கள் மற்றும் நாடுகளுக்கான அதி காரம் ஆகியவற்றில் இருந்து தனித்து இருக்க முடியாது,இருக்கவும் கூடாது.பெண்களுக்கான போராட்டங்கள், இயக்கங்கள் அமைதி இயக்கங்கள், சூழல் இயக்கங்கள், தொழிலாளர், விவசாயிகள் இயக்கங்கள், மனித உரிமை இயக்கங்கள், சமுதாயத்தின் ஜனநாயகமாக்குதல் மற்றும் பரவலாக்குதல் இயக்கங்களுடன் நெருக்கமான இணைப்பு கொண்டிருக்க வேண்டும். இந்த வெவ்வேறு இயக்கங்கள் இதே போராட்டத்தின் மறுபட்ட அம்சங்கள், ஒரே கனவு காணும் வெவ்வேறு பிரிவுகள் என்பதால் இவற்றுக்கு இடையே பலமான இணைப்புகள் மற்றும் உறவு இருக்க வேண்டும்.

பெண்களுக்கான அதிகாரம் குறித்து பேசும் போது, நாம் பெண்ணிய சிந்தனை, சித்தாந்தம், சமத்துவம், நீதி, ஜனநாயகம் மற்றும் நீடித்திருத்தல் குறித்தும் பேச வேண்டும் என் நான் நம்புகிறேன். பெண்களின் நிலைப்பாடு எதுவாக இருந்தாலும் நாம் அவர்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை என்பது இதன் பொருள். பெண் சர்வாதிகாரிகள், பெண்ணாதிக்கவாதிகள், சாதி மற்றும் ஆணாதிக்கத்தை ஊக்குவிப்போர் ஆகியோருக்கு அவர்கள் பெண் என்பதற் காகவே அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என நாம் கோரவில்லை. பெண்களும் ஆதிக்கசக்திகளாகவும், அதிகாரம் செலுத்து வோராகவும் இருப்பார்கள் என்பதையும், சில ஆண்கள் ஆணாதிக்கம் மற்றும் படிநிலை முறைகளுக்கு எதிராகப் போராடுபவர்களாக உள்ளனர் என்பதையும் நாம் அங்கீகரிக்கிறோம். அனைத்து ஆண்களும், பெண்களும் வாழ வும், வளரவும், பங்கேற்கவும் சம வாய்ப்புகள் கொண்ட சமூகத்திற்காகவே நமது போராட் டம்.

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது வலிமையாகவும் பரவலாகவும், மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் இருக்க வேண்டும் என்றால் அது அனைத்து மட்டங்களிலும் அனைத்து பிரிவுகளிலும் இருக்க வேண்டும். கீழ்மட்ட அளவில் செயல்படுவோர், நடுத்தர அளவில் செயல்படுவோர், அரசில் இடம் பெற்றுள்ள பெண்கள், ஊடகத்தில் உள்ள பெண்கள், பெண் அரசியல்வாதிகள், பெண் கல்வியாளர்கள், பெண் கலைஞர்கள், பெண் தொழில்முனைவோர் உள்ளிட்டோரிடையே ஒரு இணைப்பு தேவைப்படுகிறது. **கீழ் மட்டத் திலும், உயர் மட்டத்திலும் பணிபுரிவோர் இடையே இணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அனைத்து மட்டங்களிலும் உள்ள ஆண்களிட மிருந்தும் நமக்கு ஆதரவும் நமக்குத் தேவைப் படும்.**

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது என் பது ஒரு ஒற்றை வழி நடைமுறை அல்ல. இதனால் சிலர் மற்றவர்களிடம் சென்று தங் களது சக்தியைக் காட்டக்கூடும். நாமும் அதி காரம் பெற்று மற்றவர்களுக்கும் அதிகாரம் அளிக்கும் இரட்டை வழி நடைமுறை இது. இது நம் அனைவருக்கும் ஒரு தொடரும் பயணம்.

பெண்களுக்கு அதிகாரம் என்பது பல பரி மாணங்களையும் ஒன்றிணைப்பதாக இருக்க வேண்டும். இந்த நடைமுறையில் சேரும் சில அம்சங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன:

பெண்களுக்கான அதிகாரத்தை சமுதாயம் காணும் வகையில் ஆக்குவது, அதாவது பெண்கள் வெறும் குழந்தைகளைப் பெற்றுத் தருபவர்களாகவும், இல்லத்தரசிகளாகவும்

மட்டும் இல்லாமல் விவசாயிகளாக, தொழிலாளர்களாக, கைவினைஞர்களாக, நிபுணர்களாகவும் உள்ளனர். அவர்கள் உற்பத்தியிலும் ஈடுபடுத்தப்பட்டு ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் அவர்களுக்கு பங்களிப்பு அதிகமாகவே இருந்துள்ளது. அவர்கள் வாழ்க்கையை தயாரிப்பவர்களாகவும் இயற்கை ஆதாரங்களின் நிர்வாகிகளாகவும் உள்ளனர்.

**பெண்களிடையே உள்ள அறிவாற்றல், திறன், தகுதிகளை குறிப்பாக வேளாண்மை, சுகாதாரம், கைவினைகளில் பெண்களும் சமுதாயமும் அங்கீகரிக்கச் செய்வது.**

பெண்களுக்கு சுய மரியாதையையும் சுய நம்பிக்கையையும் அளிக்கும் சூழ்நிலையை உருவாக்குதல்.

பெண்களும், பெண் குழந்தைகளும் தங்களது முழு திறனை தெரிந்து கொவதற்கும், தங்கள் விருப்பங்களைத் தேர்வு செய்யவும் வாய்ப்புகள் அளிக்கப்படுவதுடன் அவர்கள் மீது சில பாரம்பரியமான பணிகளையும் பங்களிப்புகளையும் மட்டும் அளிக்கக்கூடாது. அவர்கள் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்காமல் அதிகாரம் பெறும் வகையில் அவர்களுக்கு கல்வி அளிக்கப்பட வேண்டும்.

யாரை எப்போது திருமணம் செய்வது, குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமா, எப்போது பெற்றுக் கொள்ள வேண்டும், எப்போது, எங்கு படிக்க வேண்டும் போன்ற தங்களது சொந்த வாழ்க்கை குறித்து பெண்கள் முடிவு எடுப்பதற்கான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். குடும்ப விஷயங்கள், சமூக, தேசிய விவகாரங்களிலும் அவர்கள் முடிவு எடுக்க அனுமதிக்கப்பட வேண்டும். அனைத்து மட்டங்களிலும் அரசியல் பங்களிப்பு அவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

பெண்கள் மற்றும் மகளிரின் நியாயமான தேவைகள், குடும்பத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவர்களின் நிலை, அவர்களது உரிமைகள், பொறுப்புகள் குறித்து ஆண்கள், பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட வேண்டும்.

தங்களது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் மற்றும் சுகாதாரத்திலும் பாதுகாப்பிலும் அவர்களது சிறப்புத் தேவகளை அவர்கள் எதிர் கொள்வதற்கான வசதிகளும் ஆதாரங்களும் அளிக்கப்பட வேண்டும்.

உற்பத்தி, சொத்து ஆகிய ஆதாரங்களைப் பெண்கள் அணுகுதல், வருவாயில் கட்டுப்பாடு ஆகியவற்றைப் பெண்கள் பெற உதவி.

**சிறப்பு கவனமும் முயற்சிகளும் தேவைப் படும் விவகாரங்கள்**

பெண்கள் அதிகாரம் பெற சில முக்கியமான பகுதிகள் உள்ளன என்பதையும் இவற்றில் இதுவரை போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுவது மிகவும் முக்கியமாகும். இவற்றை மிகுந்த கவனத்துடன் பார்ப்பதுடன் இவற்றுக்காக தீவிர யுக்திகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதும் மிகவும் முக்கியமானதாகும்.

பெண்களின் தாழ்ந்த நிலைக்கு அவர்களுக்கு சொத்துக்கள், உற்பத்தி ஆதாரங்கள் மீதும் உரிய கட்டுப்பாடு இல்லை என்பது முக்கிய காரணமாகும். இதனாலேயே பெண்கள் எப்போதும் பாதுகாப்பற்றவர்களாகவே கருதுகின்றனர். *"A Field of One's Own: Gender and Land Rights in South Asia"* என்ற தனது நூலில் பினா அகர்வால், சொத்துக்களின் உரிமை மற்றும் கட்டுப்பாட்டில் உள்ள பாலின இடைவெளி மட்டுமே பெண்களின் பொருளாதார நிலை, சமூக அந்தஸ்து மற்றும் அதிகாரம் பெறுதல் ஆகியவற்றை பாதிக்கிறது என குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரம் குறித்து அனைத்து மட்டங்களிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

லாபகரமான வேலையை அணுக முடியாமல் இருப்பது இன்னொரு முக்கிய பிரச்சனையாகும். பணத்தைக் கொண்டு வருபவர்கள் மீது அதிக அழுத்தம் சுமத்தப் படும்போது, படித்து திறன் பெற்று பணம் சம்பாதிப்பதிலும் லாயகரமான வேலைகளைப் பெறுவதிலும் பெண்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுகிறது. பெண்களின் வீட்டுப் பணிகள் உரிய முறையில் மதிக்கப்படுவதில்லை என்பதுடன் அவர்கள் பணம் கொண்டுவரா விட்டால அவர்கள் மதிப்பிழந்தவர்களாக கருதப்படுவதுடன் சுமையாகவும் கருதப் படுகின்றனர். பேராசிரியர் அமர்த்தியா சென் மற்றும் பேராசிரியர் ஜீன் டிக்ரூஸ் ஆகியோர் நடத்திய ஒரு ஆராய்ச்சியில் வெளி வேலைகளில் அதிக ஈடுபாடும் ஊதிய வேலை வாய்ப்பும் குடும்பங்களுக்குள் பெண்களுக்கு எதிர்ப்பை குறைக்கிறது என்ற முடிவுக்கு வந்தனர். எனவே ஆதாயம் தரும் பொருளாதார நடவடிக்கைகள் உலகின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் இடர்பாடுகளைப் போக்க ஒரு முக்கிய அம்சம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்தியாவில் பெண்களின் வருவாய் உருவாக்கத்திற்காக நிறைய பேசியுள்ள போதிலும் இவை பெண்களுக்கு உதவத் தவறிவிட்டன. பெண்களுக்கான ஊதியம் உயர்த்தப்படாமல் அவர்களின் பணிச் சுமை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விஷயம் குறித்து கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும்.

வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுதல், குழந்தைகள் வளர்ப்பு என்பது கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு பிரச்சனையாகும். ஏனெனில் இங்கு தான் பெண்கள் அதிக சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இதில் பெண்கள் அதிக நேரத்தை செலவிட வேண்டியிருப்பதால் தங்களின் வளர்ச்சிக்காக படிப்பதற்கான நேரமோ வாய்ப்புகளோ கிடைப்பதில்லை. பெண்களுக்கு சமத்துவம், அதிகாரம் அளிப்பது ஆகியவற்றில் இது ஒரு பெரிய தடையாக உள்ளது. குடும்பத்தில் உள்ள மற்றவர் இந்தப் பணிகளை பகிர்ந்து கொள்ளும் போது தான் பெண்களின் சுமை குறையும். பெண்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளவும், தங்களுக்கான வளர்ச்சி விருப்பங்களை பூர்த்தி செய்துகொள்ளவும் குடும்பத்தில் உள்ள சிறுவர்களும் ஆண்களும் இந்தச் சுமைகளை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

பாலியல் மீதான பெண்களின் கட்டுப்பாடு ஆய்வு செய்யப்பட வேண்டிய, புரிந்து கொள்ள வேண்டிய மற்றும் கவனிக்கப்பட வேண்டிய இன்னொரு பிரச்சனையாகும். சிறிய வயதில் திருமணம், பர்தா கட்டுப்பாடுகள் பெண்களின் பாலியலைக் கட்டுப்படுத்தும் போக்குகள், சிறுமிகள் பெண்களின் சுதந்திரம் சுயாட்சியை பெரிதும் பாதிக்கிறது.

கவனம் கொடுக்கப்பட வேண்டிய இன்னொரு விஷயம் சித்தாந்தம் ஆகும். இது தற்போது உள்ள ஆணாதிக்க பழக்க வழக்க கட்டமைப்புகளை நியாயப்படுத்தி வருகிறது. ஊடகம் என்பது சித்தாந்ததை உருவாக்கும்ஒரு வலிமையான சக்தியாக உள்ளபோதிலும் அது எந்த அளவுக்கு ஆபாசமாகவும் பெண்களுக்கு எதிரானதாகவும் உள்ளது என்பது நமக்குத் தெரியும். ஊடகத்தின் பெண்கள் தொடர்பான நோக்கத்தை மாற்ற குறிப்பிடத்தக்க அளவுக்குப் பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது என்ற போதிலும் துரதிருஷ்டவசமாக நிலைமை தொடர்ந்து மோசமாகவே உள்ளது.

ஆணாதிக்க சிந்தாத்தை உருவாக்குவதாக மதமும் திகழ்ந்து கொண்டு இருக்கிறது. மத நூல்களும் மற்றும் இதிகாசங்களும் கலாச்சார பழக்க வழக்கங்களும் ஆண்கள் உயர்ந்தவர்கள் என்பதை பிரச்சாரம் செய்வதுடன் அதனை நியாயப்படுத்துகின்றன. இதுவும் எதிர்க்கப்பட வேண்டும் என்பதுடன் இதற்காக முன்பே பெருமளவு பணிகள் செய்யப்பட்டுள்ளன. **இது ஒரே இரவில் மாற்றக்கூடியது இல்லை**

**என்றபோதிலும் இது பற்றி நாம் ஒன்றும் செய்யாமல் இருந்தால் எந்த மாற்றமும் ஏற் படாது.** சாதி வகுப்பு, பாலின வேறுபாடுகளை நியாயப்படுத்தும் மதங்களை தற்போதைய நாட்களில் அப்படியே ஏற்றுக்கொள்ள முடி யாது. அரசியல் சட்டத்திற்கு எதிராக சென்று பெண்களுக்கு அடிப்படை உரிமைகளை மறுக்கும் மதங்கள் எதிர்க்கப்பட வேண்டும். இந்த உணர்வுப்பூர்வமான பணியை நாம் எப் போது, எவ்வாறு செய்யப்போகிறோம் என்பது குறித்து ஆலோசனை நடத்தி கவனத்துடன் திட்டமிட்டு உணர்வுகள் பாதிக்கப்படாமல் இருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

### பெண்களுக்கான அதிகாரத்திற்கான கல்வி

**பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான ஒரு மிக முக்கியமான அம்சமாக பெண்களுக்கு கல்வி புகட்டுதல் அமைந்துள்ளது. கல்வியின் உள்ளடக்கமும் முறைகளும் பெண்களுக்கு ஆதரவானதாக இருக்க வேண்டும்.**

### நமக்குத் தேவையான கல்வி முறை

**பெண்கள் ஆணாதிக்கத்தை எதிர்ப் பதற்கான அறிவாற்றலைப் பெறும் வகையில் அவர்களது கல்வி இருக்கும் வகையில் நாம் நமது முயற்சிகளை பலப்படுத்தி பெருக்க வேண்டும். உலகத்தினைப் புரிந்து கொள்ளும் வகையில் மட்டும் நமது கல்வி இருக்காமல் உலகத்தின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் கல்வி இருக்க வேண்டும். இந்தக் கல்வியானது பெண்கள் தேவையான மதிப் பீட்டுத் திறன்களைப் பெறும் வகையில், வாழ்க்கை சவால்களைப் புரிந்து கொள்ளும் வகையில் இருக்க வேண்டும்.**

பெண்களுக்கான கல்வி என்பது அனை வரும் பங்கேற்பதாக இருக்க வேண்டு. பெண்கள் தங்களது செயல்திட்டத்தை தாங் களே தயாரித்துக் கொள்ளும் வகையில் இருக்க வேண்டும். அவர்கள் தங்களையே முன்னிலைப்படுத்திக் கொள்ளும் வகை யிலும் நம்பிக்கையை அளிப்பதாகவும் பெண் கள் தங்களை படைப்பாளிகளாகவும் சக்தி வாய்ந்தவர்களாகவும் தங்களை மேம்படுத்திக் கொள்ளவும் செய்ய வேண்டும்.

அவர்கள் தங்களது திறன்கள், அறிவாற்றல் ஆகியவற்றைத் தேடி அவற்றைக் கையகப் படுத்திக் கொள்வதுடன் நீதி, சமத்துவம், நேர்மை, உண்மை ஆகியவற்றைப் பெறும் வகையில் கல்வி இருக்க வேண்டும். பல்வேறு கட்டங்களில் அவர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களில் அவர்கள் சக்திபெற்ற வர்களாக மாறும் வகையில் கல்வி இருக்க வேண்டும்.

பெண்கள் போட்டியாளர்க்ளாக மாறாமல் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கும் வகை யிலான கல்வி தேவை. பல்வேறு கட்டங்களில் அவர்கள் சங்கங்கள் அமைப்பவர்களாகவும் இணைப்புகளை ஏற்படுத்துபவர்களாகவும் இருப்பதற்கு உதவுவதாக கல்வி இருக்க வேண்டும்.

பெண்களுக்கான அதிகாரம் என்பது மனித மதிப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். அப்போதுதான் அதிக சமத்துவம், நீதி, அமைதி ஆகியவை நம்மைச் சுற்றி இருக்கும்.

பெண்கள் அதிகாரம் பெறுவது என்பது ஆண்களுக்கும் நன்மை அளிப்பதாக இருக்கும் என்பதையும் அது குடும்பங்கள், தேசங் களுக்கும் நன்மை அளிக்கும் என்பதை ஆண் களும் புரிந்து கொண்டால் மட்டுமே அந்த அதிகாரம் விரைவாக கிடைக்கும். இதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

***தரமான ஆண்கள்***
***சமத்துவம் குறித்து அஞ்சுபவர்கள் அல்ல.***

# பெண் கல்வியே பெண்ணுரிமை

– திருமதி. வாசுகி கருணாநிதி

கல்வி மனித இனத்திற்கே உரிய சிறப்பான ஒன்று. ஆண் பெண் வேறுபாடின்றி இரு பாலாரும் உலகில் சிறந்து வாழ வழிகாட்டுவது கல்வி ஒன்றே!

## பெண் கல்வி:

பெண் கல்வியின் சிறப்பினை வரலாற்று கண்கொண்டு நோக்கினால் வேத காலத்தில் பெண்கள் கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்கினர். வேத பாடங்கள் இயற்றவும் மதச் சடங்குகளில் பங்கேற்கவும், குடும்பப் பொருளாதார சிக்கல்களில் முடிவெடுக்கவும், தங்களின் வாழ்க்கைத் துணைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், மறுமணம் செய்யவும் என அனைத்து நிலைகளிலும் பெண்டிர் நிலை மேன்மையுற்றே இருந்தது.

பின் வந்த புத்தமதம் பெண்களுக்கு சமஉரிமை அளித்தது. ஆனால் பிற்கால வேத காலத்தில் *(Late Vedic Period)* குடும்ப – சொத்துகள், நிர்வாகம், கல்வி, மதச் சடங்குகள் என அனைத்திலும் ஆண்களின் ஆதிக்கம் மேலோங்கி பெண்கள், பலவீனமானவர்கள், அசுத்தப்பட்ட ஆன்மாக்கள் என பெண்களின் சமூக நிலை ஒடுக்கப்பட்டு அவல நிலைக்கு வந்தது.

மத்தியகால இந்தியாவில் பெண்களின் நிலை இன்னும் மோசமாகியது. பெண்களை உடல் ரீதியாக மட்டுமே பார்க்கவும், அவர்களின் அறிவுக் கூர்மை, நிர்வாகத் திறமைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

## ஆங்கிலேய ஆதிக்கம்

இந்தியா அடிமை தேசமாக ஆங்கிலேயரிடம் இருந்த போதும், அந்த அடிமைகளின் அடிமையாக ஒடுக்கப்பட்டோரும், பெண்களும் இருந்தனர். தங்களின் சுகபோக வாழ்க்கைக்காக இரு பிரிவினரும் அடிமைப்படுத்தப்பட்டனர்.

## பெண் சிசுக் கொலை

பெண் குழந்தைகள் குடும்பத்திற்குப் பெரும் சுமை என்கின்ற எண்ணம் சமூகத்தில் புரையோடிப் போயிருந்ததால் பிறக்கும் குழந்தை பெண் என்றால் அவை கொல்லப்பட்டன.

## குழந்தைத் திருமணம்:

பெண் குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்பட்டதால் கல்வி கற்கும் பதின் பருவத்திலேயே *(Teen Age)* திருமணம் செய்து கொடுக்கப்பட்டனர். மன ரீதியாகவும் உடல்ரீதியாகவும் திருமணத்திற்குத் தயாராக இல்லாத நிலையில் திருமணங்கள் நடந்ததால், வீட்டு வேலை, விவசாய வேலை, ஆடு மாடுகள் பராமரிப்பு, பெண் குழந்தையின் பதின் வயதில் அவளுக்கே குழந்தை என பன்முகப் பணிப்பளுவினால் வாழ்க்கையே பெண்களுக்கு நரகமாயிற்று, உயிர்ப் பலிகளும் ஏராளமாயிருந்தன.

இந்த விழிப்புணர்வின்மைக்குக் கல்வியின்மையே முழு காரணமாயிற்று.

## கொத்தடிமை முறை

உயர்சாதியினரும், பண்ணை அதிபர்களும் தங்களுக்கு நிரந்தரமாய் பணி செய்ய ஆட்கள் தேவைப்படும் என்னும் நோக்கில் வாழ வேறு வழியின்றியும் வேறு வகையில் பணவரவு இன்றியும் இருக்கும் ஒடுக்கப்பட்டோரிடம் சிறு சிறு தொகைகளைத் தேவைப்படும் போது கொடுத்து வட்டியைக் கூட்டிக் கொண்டே போய், குடும்பத்லைவன், மனைவி, குழந்தைகள் என மொத்த குடும்பமும் தங்கள் வாடிநநாள் முழுவதும் கல்வி கற்கவும், வேறு மதிப்புள்ள பணிகளுக்குச் செல்லவும் முடியாமல் கொத்தடிமைகளாக்கப் பட்டனர்.

விவசாயம் தான் பிரதான தொழில் என்பதால் பண்ணை வேலைகட்கும், வீட்டு வேலைகளுக்கும் பெண்களின் தேவை அதிகமாயிருந்ததால் பெண் கல்வி என்பது எட்டாக் கனியாகவே இருந்தது.

## மூத்த பெண் குழந்தையே தாய்

ஒரு குடும்பத்தின் மூத்த குழந்தை பெண் குழந்தையாயிருப்பின் குடும்ப கட்டுப்பாடு

**திருமதி. வாசுகி கருணாநிதி,** M.A., M.Phil (Ph.D), Retd A.O, தென்னக ரெயில்வே சென்னை.

இல்லாததால் அடுத்தடுத்துத் தன் தாய்க்குப் பிறக்கும் குழந்தைகள் அனைவருக்கும் அந்த மூத்த பெண் குழந்தையே தாயாயிருந்து கவனிக்க வேண்டிய சூழலில் பெண் கல்வி எட்டாக் கனியாக ஆக்கப்பட்டது.!

### சதி என்னும் உடன் கட்டை ஏறுதல்

பெண் குழந்தைகட்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டதாலும், மறுமணம் மறுக்கும் தன்மையாலும் பாதுகாப்பற்ற தன்மையில் இருந்தமையாலும், இளம் விதவைகள் அதிகமானதாலும் கணவன் இறந்தவுடன் அவனுடைய சிதையிலேயே மனைவியையும் எரித்தோ, உடன் உயிருடன் புதைத்தோ கொன்று வந்தனர். பெண்ணானவள் உடன்கட்டை ஏறமறுத்தாலும், அவளை கட்டாயப்படுத்தி உடன் கட்டை ஏற்றினர்.

### பலதார மணம்

ஒரு குடும்பத்தில் உள்ள பல ஆண்களுக்கு ஒரு பெண்ணே மனைவி என்னும் கொடிய வழக்கமும் உருவாகியது.

### கல்வித் தந்தையர்கள்

இந்தியக் கல்வியின் புரட்சியாளரான கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் என்னும் பெயரில் புயல் ஒன்று புறப்பட்டது. ருஷ்யாவைச் சேர்ந்த ஹெலினா பெட் ரோவ்னா பிளாவட்ஸ்கி அவர்களுடன் இணைந்து தியோசபிகல் சொசைட்டி *(Theosophical Society)* என்ற அமைப்பினை நியூயார்க்கில் நவம்பர் 11, 1875ஆம் ஆண்டு நிறுவினர். இதன் இந்திய கிளையை 1879ல் பம்பாயில் நிறுவினர். பின் அதன் தலைமை செயலகத்தைச் சென்னைக்கு 1882ஆம் ஆண்டில் பம்பாயில் இருந்து மாற்றினர்.

சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்குக் ‘கல்வி’ மட்டுமே நிரந்தரத் தீர்வாக அமையும் என ஆல்காட் நம்பினார்.

ரெவரண்ட் ஜான் ரெத்தினம், அயோத்தி தாஸ் பண்டிதர், இரட்டை மலை சீனிவாசன் போன்ற ஒடுக்கப்பட்ட மக்கள் தலைவர்களுடனான நட்பு, கல்வித் துறையின் நல்ல தொடக்கங்களுக்குத் தூண்டு கோலாக இருந்தது.

08.06.1898 ஆம் ஆண்டு ‘தன்னேரில்லாத விண்ணப்பம்’ *(A Unique Petition)* என்ற பெயரில் பண்டிதர் அயோத்திதாசர் ஆங்கிலத்தில் எழுதிய விண்ணப்பமே இதற்குக் காரணமாக இருந்தது.**

இந்தியரின் கல்வி நிலையை, ஒடுக்கப் பட்டோர், பெண்களின் கல்வி இழிநிலையை மாற்ற 1894ஆம் ஆண்டு “பஞ்சமர் இலவச பள்ளி”களை – சென்னை அடையாரில் தொடங்கினர். அதன் செயல்பாடுகளை *The Poor Pariah* என்னும் நூலாகப் பதிப்பித்தார். ஆண்கள், பெண்களுக்குமான இரு பாலார் பள்ளியாக இது இயங்கியது.

‘இந்தப் பள்ளிகள் இன்றும் நூற்றாண்டுகளைக் கடந்தும் செயல்பட்டு வருகின்றன.

‘இந்தியாவில் காணப்படும் அனைத்து சமூக ஒழுங்கீனங்களுக்கும் ஏற்ற சஞ்சீவி மருந்து கல்வி ஒன்றே என்று ஆல்காட் அறிவித்தார்.

### இந்தியாவில் பெண்கல்வியும் முன்னேற்றம்:

இந்திய கல்வி, சமூக, பெண்கள் முன்னேற்றங்களின் முன்னோடி ராஜாராம் மோகன்ராய், பிரம்ம சமாஜத்தைத் தோன்றுவித்தவர். ‘சதி’ என்னும் உடன் கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தவர். சதி, பலதார மணம், குழந்தைத்திருமணம் ஆகியவற்றை எதிர்த்தவர். பெண்கள் மறுமணத்தை ஆதரித்தவர். 4.12.1829 ஆண்டு பெண்டிங் பிரபு சதி முறையை ஒழித்து, அந்த நடவடிக்கையில் ஈடுபடுவோர் திட்டமிட்ட கொலைக் குற்றம் சாட்டப்படுவர் என சட்டமியற்றினார்.

அயோத்தி தாஸ பண்டிதர், விபின் சந்திரர், மகாத்மா சோதிபாய் பூலே போன்றோரும் பெண்கல்விக்கு அடித்தளம் அமைத்தனர்.

அருள்திரு. ஆண்ட்ரூ, அருள்திரு கௌடி, அருள்திரு. ஜான் ரெத்தினம், பெருந்தலைவர், எம்.சி.இராஜா, சுவாமி சகஜானந்தர், ஆகியோரின் கல்விப் பணிகளும் குறிப்பிடத்தக்கன.

கல்வி ஒன்றே பெண்களின் இழிநிலையைத் துடைத் தெரியும் என உணர்ந்த மத்திய / மாநில அரசாங்கங்கள் என்னென்ன வழிகளில் முயற்சி செய்கின்றது அரசின் திட்டங்கள் என்னென்ன என பார்க்கலாம்.

### தொட்டில் குழந்தை திட்டம்

பெண் குழந்தை பிறந்தால் அதை சிசுக் கொலை செய்வதிலிருந்து காக்க அரசு காப்

பகங்களில் ஒப்படைத்து விட்டால் அரசாங்கமே பொறுப்பெடுத்துக் கொள்ளும்.

பெண்கல்வியை மிகத் தீவிரமாகச் செயல் படுத்த மாநில மத்திய அரசுகள் பல சட்டங்களையும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றன.

**திட்டங்கள்**

**1988 –ல்** *NLM – National Literacy Mission 2002*ல் *Article 21A* சட்ட திருத்தம்.

***6 வயதிலிருந்து 14 வயது வரை கட்டாயக் கல்வி***

*Article 41 - Right to Work*

*Article 45 - Free Education*

*Article 46 - SC, ST and weaker persons Education*

*RTE Act 2009 - Right To Education Free and compulsary*

*Education Specially for Female.*

*Article 29 - Minority Children's Education*

*Article 30 - To Start Educational Istitution to minority.*

*Article 14 - Equality before law*

*Article 15 - Right to worship*

*Article 17 - Against Untouchability*

*Article 24 - Against Child Labour*

*CSS – Centrally Sponsored Schemes in School Education*

*Important Schemes*

*1. Operation Balck Board*

*2. Teachers Education*

*3. Education Guarantee Schemes ? Alternative and Innovative*

*Education (EGS & AIE)*

*4. Mid day meals Scheme*

*5. Sarva Shiksha Abhiyan (SSA)*

*6. Kasthuri Bai Gandhi Balika Vidyalaya (KGBV)*

*7. Shiksha Karmi*

*8. Mahila Samakshya*

*9. District Primary Education Programme (DPEP)*

*10. National Programmes for Educational of Girls at Elementary level (NPEGEL)*

*11. Lok Jambish*

*12. Janshala Programme*

*13. Padhe Bitiya Bhada Bitiya*

*14. Ladali Scheme*

## The National Commission of Women 1990

இட ஒதுக்கிடு முக்கியமாக *Aritcle 73, 74* சட்டதிருத்தம் **1993**ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்டது.

உள்ளாட்சித்துறை, பஞ்சாயத்துகள், முனிசி பாலிட்டிகள் அனைத்திலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**பெண்கள் சுய உதவிக் குழுக்கள்**

'முதலடிதான் முக்கியம்' – என்கிறது பிரெஞ்சு பழமொழி, அத்தகைய முதலடிதான் பெண்கள் சுய உதவிக் குழுக்கள், அடிப்படைக் கணக்குகள், தற்போது கணிணி இயக்கம், கணக்கு எளிய அளவில் போடுதல், இவற்றுடன் தொழில் அறியும் தொழிற்கல்வி இவற்றை முதலீடாகக் கொண்டு பெண்கள் பெரிய அளவில் சாதிக்கத் தொடங்கியுள்ளனர். இந்தச் சுய உதவிக் குழுக்கள் மூலம்.

திரு.ஹென்றி ஸ்டீல் ஆல்காட் பின் வருமாறு பாடுகிறார்.

கல்வி என்றும் மூன்றெழுத்து மந்திரம் பெண்களிடையே செய்யும் மாயம் அளவிடற் கரியது. கல்வி கற்று பயனடைவோம். தன்னம் பிக்கையும் சுயமரியாதையும் பெறுவோம்.

**குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல (பெண்டிர்க்கு)**
**மாந்தர்க்கு கல்வியழகே அழகு!**

**சான்று நூல்கள்**

1. *Uniqu Petition* – அயோத்தி தாஸப் பண்டிதர்.
2. தலித் மக்களும் கல்வியும் தொகுப் பாசிரியர்.
   *வே. அலெக்ஸ், தமிழில் – ஆ. சுந்தரம்*
3. நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல்.

## குடியரசுத் தலைவர் மாளிகை குறித்து அண்மையில் வெளியிடப்பட்ட நூல்கள்

**(i) A Work of Beauty: The Architecture and landscape of the Rashtrapati Bhavan**



குடியரசுத் தலைவர் மாளிகையின் கட்டிடக்கலை மற்றும் எழில்மிக்க தோட்டங்கள் ஆகியவை குறித்து விரிவான இந்த புத்தகம் விளக்குகிறது. பிரிட்டிஷ் இந்தியாவின் தலைநகரம் 1911–ஆம் ஆண்டு கொல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாற்றப்பட்ட பிறகு அரசு இல்லம் என்ற பெயரில் இந்தக் கட்டிடம் கட்டப்பட்டது முதல் இதன் வரலாற்றை இந்த புத்தகம் விளக்குகிறது.

**(ii) First Garden of the Republic: Nature in the President's Estate**

இந்தியக் குடியரசின் முதல் தோட்டம் என்ற பொருள்படும் தலைப்பு கொண்ட இந்த புத்தகம் குடியரசுத் தலைவரின் தோட்டத்தில் ஒவ்வொரு பருவத்திலும் வளரும் தாவரங்கள் குறித்து விளக்கப்பட்டிருக்கிறது. இந்த தோட்ட வாழ்விடத்தை மனிதர்கள் எவ்வாறு உருவாக்கி பராமரிக்கிறார்கள், தாவரங்களும், விலங்குகளும் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டு குடியரசுத் தலைவர் தோட்டத்தில் வளர்கின்றன, இந்த உயிரினங்களும், வாழ்விடமும் இப்போது எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் ஆகியவை குறித்தும் இந்த நூலில் விளக்கப்பட்டிருகிறது.





**(iii) Around India's First Table: Dining and Entertaining at the Rashtrapati Bhavan**



குடியரசுத் தலைவர் மாளிகையின் ஸ்டேட்லி உணவருந்தும் அறையில் பிரிட்டிஷ் வைஸ்ராய்கள் இருந்த காலத்தில் பிரெஞ்ச் உணவு பரிமாறப்பட்டதில் தொடங்கி, இந்தியா விடுதலை அடைந்த காலத்தில் படிப்படியாக மேல்நாட்டு உணவு முறையிலிருந்து இந்திய உணவுமுறைக்கு மாறியது வரையிலான உணவு படைத்தல் மற்றும் பொழுதுபோக்கு குறித்து இந்த புத்தகம் விளக்குகிறது. வெற்றிகரமான உணவு இராஜதந்திரத்திற்கான இடமாக இந்தியாவின் முதலாவது உணவருந்து மேஜை எவ்வாறு மாறியது என்பது குறித்த பின்னணி தகவல்களையும் வாசகர்களுக்கு இந்த புத்தகம் வழங்குகிறது.

**(iv) Arts and Interiors of the Rashtrapati Bhavan**

பரந்து விரிந்த குடியரசுத் தலைவர் மாளிகையின் ஆடம்பரமான உட்புறங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஓவியங்கள் குறித்து இந்த புத்தகம் விரிவாக விளக்கு கிறது. பர்னிச்சர்கள் மற்றும் பெயிண்டிங்குகளின் வரலாறு குறித்த விளக்கங்களும் இதில் அடக்கம். துணிகள், சுவர் ஓவியங்கள், தரை விரிப்புகள், அரிய பழங்கால ஆவணங்கள் ஆகியவை குறித்த சுவையான தகவல்களும் இந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன. இந்த புத்தகத்தை படிக்கும்போது ஒரு பிரம்மாண்ட உலகில் நுழையும் உணர்வு ஏற்படுவதுடன், குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள உட்புற அலங்காரம் குறித்த அனைத்து அம்சங்களையும் அறிந்து கொள்ள முடியும்.



**(v) Discover the Magnificent World of the Rashtrapati Bhavan**




குடியரசுத் தலைவர் மாளிகை எவ்வாறு கட்டப்பட்டது, அதில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள், நாட்டின் வாழ்வில் அது சந்தித்த நிகழ்வுகள், அங்கு வாழ்ந்து பணியாற்றிய தலைவர்கள் ஆகியவை குறித்து சுவையான கதைகள், மனதுக்கு இதமான உண்மை கள், வர்ணனை மிகுந்த அத்தியாயங்கள் ஆகியவற்றுடன் இந்த சிறிய புத்தகம் விளக்குகிறது. இந்த புத்தகத்தின் நோக்கமே இந்த உண்மைகளை குழந்தைகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்பது தான்.

# பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்: அரசாங்கத்தின் தெளிவான பார்வை

– லீனா நாயர்

இந்திய அரசிலமைப்புச் சட்டத்தின் முகப் புரை, அடிப்படை உரிமைகள், அடிப்படைக் கடமைகள், வழிகாட்டு நெறிமுறைகள் ஆகிய பகுதிகளில் பாலினச் சமநிலை என்பது போற்றி வைக்கப்பட்டுள்ளது. அரசியல் சட்டம் பெண்களுக்கு சமஉரிமைகளை வழங்குவதோடு மட்டுமின்றி, பெண்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கும் அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கிறது. சமத்துவம், பெண்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும், குழந்தைகளைப் பேணவும் என பல முயற்சி கள் மேற்கொள்ளப்படுவருகின்றன. நாட்டின் மக்கள் தொகையில் 70 விழுக்காடு பெண் களும், குழந்தைகளுமாக உள்ளனர். பெண் களின் வாழ்க்கையில் சாதகமான தாக்கங் களை ஏற்படுத்தி தெளிவாக தெரியக்கூடிய வகையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற் காக பலவிதமான சட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. சட்டத்திருத்தங்கள் செய்யப் பட்டுள்ளன. பலவிதமான திட்டங்களும் கொள்கைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்பது பலதளங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒருசிக்கலான விஷயம். பெண்களின் பொருளா தார நிலை, சமூக நிலை மாற்றங்களுக்காக அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முக்கியமான தலையீடுகள் மீது இந்தக் கட்டுரை கவனம் செலுத்துகிறது. உடல்நலம், கல்வி, பாதுகாப்பு, தீங்கின்மை ஆகியவற்றில் பெண்களின் நிலைமை மேம்படும் பொதுதான் அதிகாரம் அளித்தல் எனும் வழிமுறை வெற்றிகாணும்.

**உடல்நலம்:**

ஏற்றுக்கொள்ளக்கூடிய செலவில் தரமான உடல்நலச் சேவையை, எண்ணிக்கையில் அதிக மாக இருக்கும் இந்திய மக்களுக்கு அதிலும் குறிப்பாக ஏழைகள், அனுகூலமற்றவர்கள் ஆகியோருக்கும் வழங்குவது என்பது இந்திய அரசுக்கு அச்சுறுத்தல் தரும் ஒரு சவாலாக இருக்கிறது. 2005 முதல் செயல்பட்டு வரும் தேசிய ஊரக நலத்திட்டம் (NHRM), தேசிய நலத்திட்டம் என்று இப்போது பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சிறப்பான கட்டமைப்பு களை ஏற்படுத்தி நலச்சேவைகளை வழங்குதல்; மருந்துகள், உபகரணங்கள், மருத்துவப்பணி பணியாளர்கள் போன்றவை ஊரகப் பகுதி களில் வெவ்வேறு மட்டங்களிலும் இருக்கும் படி செய்து அதன்மூலம் நலச்சேவை மேம்படு வதை உறுதிப்படுத்துதல் என்ற இலக்கை நோக்கி இந்தத் திட்டம் நகர்ந்து வருகிறது.

உயிர் பிழைத்திருத்தலுக்கான ஒரு ஆரம்பத் தேவை உடல்நலம். எனவே, உடல்நலச் சேவைகள் தொடர்ச்சியாக கிடைத்துவரச் செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. பெண்களிடம் காணப்படும் சத்துக்குறைவு இந்தியாவில் பெரிய சவால். இந்தியப் பெண் களில் மூன்றில் ஒரு பங்கினர் (35.6%) குறைவான உடல் எடை கொண்டவர்களாக உள்ளனர். மூன்று பெண்கள் இருந்தால் அவர்களில் ஒரு வருக்கு சத்தான உணவு இல்லை. இரண்டு பெண்களில் ஒருவர் ரத்த சோகை கொண்ட வர்களாக உள்ளனர். பெண்கள், குழந்தை கள் மேம்பாட்டுச் சேவைத்திட்டம் (ICDS) பரவலாக்கப்பட்டு ஊட்டச்சத்து குறைப்பாடு பிரச்னையை எதிர்கொண்டு வருகிறது. குழந்தைகள் நலம், குழந்தைகளின் வளர்ச்சி

**லீனா நாயர்,** IAS அதிகாரி, இந்திய அரசின் பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகச் செயலாளர்.

ஆகியவற்றிற்கான தனித்தன்மை உடைய, மிகப் பெரிய திட்டமாக இது இருக்கிறது. நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், வட்டாரங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 14 லட்சம் அங்கன்வாடி மையங்கள் அமைக்கப்பட்டு தாய்மார்களாக ஆகக்கூடிய 1.9 கோடி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், 6 வயதுக்கு உட்பட்ட 8.4 கோடி குழந்தைகள் ஆகியோரின் உட்டச்சத்துச் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊரகப் பகுதிகளில் கிராமிய நலவாழ்வு, ஊட்டச்சத்து தினங்கள் அனுசரிக்கப்படுகின்றன.

கருவுற்ற பெண்களின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும் வகையில் (MMR) பலவிதமான தலையீடுகள் அரசாங்கத்தால் செய்யப்படுகின்றன. இவற்றுள் முக்கியமான சில: ஜனனி சுரக்ஷா யோஜ்னா எனப்படும் பிரசவ மையங்களை மேம்படுத்தும் முயற்சிகள், ஜனனி சிசு சுரக்ஷா கார்யகிரம் எனப்படும் திட்டத்தின்கீழ் சிசேரியன் அறுவை சிகிச்சை வசதிகளை மேம்படுத்தும் முயற்சிகள், தாய்–சேய் பாதுகாப்பு அட்டைகளை வழங்கி அவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளைக் கண்காணித்தல், பிறப்புக்கு முந்தைய, பிறப்புக்கும் பிந்தைய சேவைகான தடுப்பூசி போடுதல் தாய்மார்களின் இறப்பு விகிதங்களைக் கண்டறிந்து பொருத்தமான நிலைகளில் சரி பார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தரமான மகப்பேறு சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய முக்கியமான சேவைகள் இவையாகும். இத்தகைய முயற்சிகள் அனைத்தையும் செயல்படுத்துவது பாராட்டத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 212 என்ற அளவில் இருந்த தாய்மார்களின் இறப்பு விகிதம் 2007–09, 2010–12இல் 178ஆக குறைந்துள்ளது. பதிவுத்துறைத் தலைவரின் மாதிரிப்பதிவுகள் அறிக்கை (RGI-SRS) இதைத் தெரிவிக்கிறது.

சமீபத்தில் NFHS-4 (2015-16) தரவுகள் 13 மாநிலங்களில் வெளியாகியுள்ளது. கர்ப்பகாலத்திலும், குழந்தை பிறப்பின்போதும் சிறப்பான கவனம் தரப்பட்டால் தாய்மார்களின் இறப்பு விகிதம் குறைகிறது என்பதை இவை காட்டுகின்றன. குழந்தைகள் உயிர் பிழைப்பதும் அதிகமாகின்றது. அதிகமான பெண்கள் இப்போது குழந்தை பெறுகின்றனர். கடந்த 10 ஆண்டுகளை விடவும் இரண்டு மடங்கிற்கு அதிகமாக இந்த விகிதம் அதிகரித்துள்ளது. தேசிய நலக் கொள்கை 2015இன் வரைவு பெண்களின் உடல் நலத் தேவைகளைப் பற்றி பேசுகிறது. பேறுகாலப் பெண்களின் நலனும், குழந்தைகள் நலனும் இதில் அதிகமாக பேசப்படுகிறது. ஆடவர்களுக்கு கருத்தடை, கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துவது ஆகிய இலக்குகளை அதிகரிப்பதற்கான தேவை இருப்பதை இது குறிப்பிடுகிறது.

**கல்வி:**

பெண்களின் அந்தஸ்து உயர்வதற்கு கல்வி மிக முக்கியமான தேவை. தரமான கல்வியை வழங்குவதற்கும், பொருத்தமான திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கும் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் நிலைக்கல்விகளில் பலவிதமான திட்டங்கள் இந்திய அரசினால் செயல்படுத்தப்படுகின்றன. கல்வி உரிமைச் சட்டம் 2009 (RTE ACT) ஏப்ரல் 2010இல் சட்டமாக்கப்பட்டது. இலவச கட்டாயக் கல்வியை அனைத்து குழந்தைகளும் பெறுவது இதன்மூலம் உரிமையாக்கப்பட்டுள்ளது. சர்வசிக்ஷா அபியான் என்ற முன்னோடித் திட்டம் உருவாக்கப்பட்டு தொடக்கக்கல்வியிலும், உயர் தொடக்கக்கல்வியிலும் அனைவருக்கும் வாய்ப்பு கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஊரகப் பகுதிகளிலும், நகரங்களிலும் பள்ளிகளில் பெண் குழந்தைகள் சேர்க்கை கடந்த சில ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்துள்ளது. இடைநிற்றல் விகிதம் குறைந்துள்ளது. தேசிய அளவில் பாலின சமத்துவக்குறியீடு தொடக்கக் கல்வியில் 1.0, உயர் தொடக்கக் கல்வியில் 0.95 என்ற விகிதத்தில் உள்ளது. தரமான கல்வி வழங்கப்படுவதற்கு இன்னும் ஏராளமான காரியங்கள் செய்யப்பட்டாக வேண்டும். SSAவின் தேசிய அளவிலான உள் திட்டமான Padhe Bharat-Badhe-Bharat. முதல்

வகுப்பிலும் இரண்டாவது வகுப்பிலும் உலகத் தரத்திற்கிணையான எழுத்தறிவு, கணக்கறிவை வழங்கிடும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் 200 நாட்களுக்கு, 800 பாட வேளைகளுக்கு கற்றல், கற்பித்தலை வழங்குவதை இது உறுதிப்படுத்துகிறது. வித்யாஞ்சலி (பள்ளித்தன்னார்வலர் திட்டம்) SSA-யின் கீழ்வரும் இன்னொரு முன்முயற்சியாகும். அரசு நாடு முழுவதும் நடத்தி வரும் தொடக்கப் பள்ளிகளில் சமுதாயம், தனியார் துறை பங்களிப்புடன் நடைபெறக்கூடிய முன்முயற்சி இது. தேவைப்படும் பள்ளிகளுக்கு தன்னார்வச் சேவையை வழங்க முன்வரும் தன்னார்வலர்களை ஒன்றிணைப்பதற்காக இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

SSA திட்டத்தினால் ஏற்பட்ட வளர்ச்சிகளின் விளைவாக, நாட்டில் இடைநிலைக்கல்விக்கான தேவை அதிகரித்தது. இடைநிலைக் கல்விக்கு 14 முதல் 18 வயதுடைய குழந்தைகள் அனைவரும் சேர்வதை ஊக்குவிக்கவும், அதன் தரத்தை மேம்படுத்தவும் ராஷ்டிரிய மத்யமிக் சிக்ஷா அபியான் (RMSA) என்ற திட்டம் 2009 முதல் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இந்த முயற்சியின் பயனாக பெண்களின் கல்வி அறிவு விகிதம் 2001 முதல் 2011 வரை 65.38 விழுக்காட்டிலிருந்து 74.04 விழுக்காடாக அதிகரித்துள்ளது. மத்திய கல்வி வாரியம் பெண் குழந்தைகளுக்கான Uddan என்ற சிறப்பு திட்டத்தை கொணர்ந்திருக்கிறது. கல்விக்கான நிதி உதவியும், நம்பிக்கை உரைகளும் வழங்கும் திட்டமாகும் இது. பொறியியல் கல்லூரிகளில் பெண்களின் சேர்க்கை விகிதம் குறைந்திருப்பதை இது எதிர்கொள்கிறது. கணிதமும், அறிவியலும் சீனியர் செகண்டரி பள்ளி அளவில் கற்பிக்கப்படுவதையும், கற்பனையும் மேம்படுத்தும் நோக்கமுடையது இந்தத் திட்டம். அனைவருக்கும் இணைய வழியிலான இலவச சேவைகளை இது தருகிறது.

ராஷ்டிரிய உச்சத்தார் சிக்ஷா அபியான் (RUSA) திட்டம் உயர்கல்வியின் முழுமையான வளர்ச்சிக் காக செயல்படுத்தப்படுகிறது. இணையதள நுழைவாயில் ஒன்றை அரசு இதற்காக புதிதாக உருவாக்கி உள்ளது. (www.vidyalakshmi.co.in). உடற்பயிற்சி பயில விரும்பும் மாணவர்களுக்கு பிரதம மந்திரியின் வித்யாலஷ்மி கார்யகிரம் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதை இது உறுதி செய்கிறது. இந்த வகை சேவையில் இது ஒரு முதல் முயற்சி.

இந்தியாவில் பெண்கள் பலதுறைகளில் செல்வாக்கு மிகுந்த பதவிகளில் இருந்த போதிலும், உயர்கல்வியில் புதிய உச்சங்களைத் தொட்டபோதிலும் பாலினப் பாகுபாடு இன்னமும் இருக்கவே செய்கிறது. பெண்களையும் அவர்களின் உரிமைகளையும் மதிக்கக்கூடிய நேர்மறையான சமுதாய நெறிகளை உருவாக்கிட உதவும் வகையில் நாடு முழுவதும் கல்லூரிகளில் நற்செயலுக்குப் போராடும் மாணவர்களை உருவாக்க பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு துணைநிற்கிறது. அனைத்து பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள், கல்லூரி முதல்வர்கள் ஆகியோருக்கு இது தொடர்பான சுற்றறிக்கைகளை UGC அனுப்பியுள்ளது. இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

### பாதுகாப்பு:

பாலின சமத்துவத்தை உறுதி செய்வதும், பாலின வேறுபாடுகளையும் பெண்களுக்கு எதிரான வன்முறையை எதிர்த்துப் போராடுவதும் நம்முடைய சமுதாய வளர்ச்சிக்கு உதவக்கூடியசெயல்களாலும்.பெண்கள்,பெண் குழந்தைகளுக்கு எதிரான அனைத்துவிதமான வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவர அரசு உறுதிபூண்டுள்ளது. இதற்கென சட்டங்களையும் இயற்றியுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாக இருப்பதும், வன்முறைகள் நடைபெறாமல் தடுப்பதற்கு காவல் துறைக்கும், பிறமுகமைகளுக்கும் பொருத்தமான வசதிகளை செய்துதருவதும் அரசின் அணுகுமுறையில் வெளிப்படுகிறது. கற்பழிப்பு, பாலுறவுக் குற்றங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களின் குரல்களைக் கேட்கவும்,

அவர்கள் நீதியை நாடவும் அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுவருகிறது.

**இதற்கான சட்டங்களில் சில:**

கிரிமினல் சட்டத் (திருத்தம்) 2013 கற்பழிப்புக் குற்றங்களுக்கு மிகக் கடுமையான தண்டனை தரவும், பாலுறவுக் குற்றங்கள், பெண்வதை ஆகியவற்றின் வரையறைகளை விரிவுபடுத்தவும் வகை செய்கிறது. அமில வீச்சு, பாலுறவு வதை, பின் தொடர்தல், கேலி பேசுதல், ஆடைகளைக் களைதல் போன்ற குற்றங்கள் இந்திய குற்றவியல் சட்டப்பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தச்சட்டம் குடிமைப்பணி அதிகாரிகளுக்கு கூடுதல் பொறுப்பை அளிக்கிறது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி செய்து தரப்படவேண்டும் என்பதை உள்ளிட்ட பல பொறுப்புகள் அதிகாரிகளுக்கு உண்டு. பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கு பாலியல் தொல்லை (தடுப்பு, விலக்கு, குறைதீர்த்தல்) சட்டம் 2013 பெண்களுக்கு பணி இடங்களில் பாதுகாப்பிற்கு வழி செய்கிறது. இந்தச் சட்டங்களோடு முன்பே நடைமுறையில் இருக்கும் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005, குழந்தைத் திருமணத் தடுப்புச்சட்டம் 2006, குழந்தைகளுக்க்கு எதிரான பாலுறவுக் குற்றங்கள் தடுப்புச்சட்டம் 2012 ஆகியவையும் பெண்களுக்கு துணை நிற்கின்றன. கருவில் இருக்கும் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிவதைத் தடுக்கும் சட்டம் 1994, இளம் சிறார் நீதிச் சட்டம் 2015 ஆகியவையும் அமலில் உள்ளன. பேறுகால ஆதாயங்கள் சட்டம் 2016 பணிபுரியும் பெண்களுக்கான பேறுகால விடுப்பை 12லிருந்து 16 வாரங்களாக அதிகரித்துள்ளது.

தடுப்பு,பாதுகாப்பு,மறுவாழ்வு ஆகியவற்றில் உதவிட நிர்பயா நிதியை அரசு உருவாக்கியுள்ளது. 2000 கோடி ரூபாய் தேவைப்படும் 15 கருத்துருக்கள் இதுவரை உருவாக்கப்பட்டுள்ளன. வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு மருத்துவ வசதி, காவல் உதவி, சட்ட உதவி, நீதிமன்றத்தில் வழக்கை நிர்வகித்தல், உளவியல் – சமூகக் கலந்தாய்வு, தற்காலிக வசிப்பிடம் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் கிடைப்பதற்கு வழி செய்வது ஆகியவை இதில் அடங்கும். பெண்களுக்கான அவசர / சாதாரண உதவிகள் 24 மணி நேரமும் கிடைப்பதற்கு உதவி மையங்களை அமைப்பது, பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கு அனைத்து காவல் மாவட்டங்களிலும் புலனாய்வு அலகுகளை அமைப்பது, ரயில் பெட்டிகளில் CCTV காமிராக்கள் பொருத்துவது, தேசிய அவசர உதவி அமைப்பு, பாதிக்கப்பட்டோருக்கான மத்திய நிதி உதவி மையம், பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான இணைய வழிக் குற்றங்களைத் தடுப்பது ஆகியவற்றிற்கும் வழிவகைகள் செய்யப்படும்.

காவல்துறையில் பெண் காவலர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு 33 விழுக்காடு ஒதுக்கீடு மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் செய்யப்பட்டுள்ளது. காவல் துறைக்கு பாலின சமத்துவம் பற்றிய உணர்வை மிகுவிப்பதற்கு பயிற்ச்சித்திட்டங்கள், செயல்பாடுகள் பற்றிய கண்காணிப்பு ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இவை மட்டுமின்றி, காவல்துறை உடனடியாக செயல்படவும், சமூகத்திட்டங்களில் பாலின பிரச்னைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவும் வழி செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கும் காவல்துறைக்குமான பிணைப்பை ஏற்படுத்துவதற்காக பெண் சேவையாளர்கள் மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் நியமிக்கப்படுவார்கள். பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை, குழந்தைத் திருமணம், வரதட்சனைக் கொடுமை ஆகிய குற்றங்கள் நிகழ்வதை அருகில் இருக்கும் காவல் நிலையத்திற்கு தெரிவிப்பது இவர்களது பணி.

**நிதி பாதுகாப்பு:**

இத்தனை சவால்களுக்கும் இடையில், பல லட்சக்கணக்கான இந்தியப் பெண்கள் பழைய தடைகளைத் தகர்த்தெறிந்து தங்களின் வாழ்க்கையை தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் விதத்தில் செயல்பட்டு வருகி

ன்றனர். மகாத்மாகாந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம், தேசிய ஊரக பிழைப்புறுதித்திட்டம் *(NRCM)* போன்ற திட்டங்கள் வாழ்க்கைப் பாதுகாப்பை ஊரக மகளிருக்கு வழங்குவதோடு, அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஊரக சொத்துக்களையும் உருவாக்குகிறது. ராஷ்டிரிய மகிளா கோஷ் திட்டம் ஏழைப் பெண்களுக்கானது. தொடர்ச்சியாக நிதி உதவி அளித்து அவர் களுக்கு சந்தையுடனான இணைப்பை அது உறுதி செய்கிறது. பெண் தொழில் முனைவோர், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் ஆகியவற்றை ஊக்குவிக்க மகிளா இ ஹாட் *(Mahila E-Haat)* திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பெண் தொழில் முனைவோருக்கு தொழில் தொடங்க உதவுகிறது. டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படும் ஒரு திட்டம் இணையச் சந்தைத் திட்டம். பெண்கள் உலகச் சந்தையை அணுகவும், தொழில் சமூகம், பிற தொழில் முனைவோருடன் தொடர்பு கொள்ளவும் இது உதவுகிறது. பெண்களையும் சேர்த்துக்கொண்டு செயல்படும் பொருளாதார நடவடிக்கை என் பது அரசின் முன்னுரிமைத் திட்டமாகும். பிரதம மந்திரியின் ஜன்தன் யோஜ்னா லட்சக்கணக்கான பெண்கள் வங்கிக் கணக்கு துவங்கவும், வறுமையின் சுமையிலிருந்து மீளவும் உதவுகிறது. கேட்ஸ் அறக்கட்டளையின் 3வது ஆண்டு அளவீட்டு அறிக்கையின்படி 47% பெண்கள் ஜன்தன் யோஜ்னாவில் கணக்கு ஆரம்பித்துள்ளனர். பெண்களின் திறன்மேம்பாடும், பெண்களை வேலைகளுக்கு தகுதி படைத்தவர்களாக ஆக்குதல் ஆகியவற்றிற்காக பெண்கள் பணிபுரியக்கூடிய துறைகள் *PMKVY* திட்டத்தின்கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன. பாங்கு உடைய வேலை களைப்பெற்று பெண்கள் வறுமையில் இருந்து வெளியேற இது உதவும். பெண் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக சுகன்யா சம்ருதி யோஜ்னா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஜூன் 2016 வரை 87 லட்சம் கணக்குகள் நாடு முழுவதும் தொடங்கப்பட்டுள்ளன.

## முடிவுரை:

பன்முகத் தன்மை கொண்ட மிகப்பெரிய குடியாட்சி தேசமான நமது நாட்டில் முக்கிய மான முன்னெடுப்புகள் பல மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதில் ஐயமில்லை. ஆயினும், பெண்களுக்கு சமவாய்ப்புகளைத் தருவதில் ஆண் வழி சமூகத்தின் மனப்பாங்கு மறுப்பு தெரிவிப்பதால் ஊட்டச்சத்து, கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றிலும் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதிலும் சவால்கள் நிறைந்துள்ளன. பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் செயல் தொடர்ச்சியான ஒரு செயல்பாடு ஆகும். பெண்களுக்கான தேசியத் திட்டத்தில் இது முன்மொழியப்பட்டுள்ளது. உடல்நலம், கல்வி, பொருளாதாரம், நிர்வாகம், முடிவுகள் எடுத்தல், உள்கட்டமைப்பு, பாது காப்பான குடிநீர், சுற்றுப்புற சுகாதாரம், ஊடகம், விளையாட்டு, சமூகப்பாதுகாப்பு, ஆதரவுச் சேவைகள், சுற்றுச்சூழல், உலகம் வெப்பமயமாதல் போன்றவற்றை உள்ளடக்கிய ஏழு முன்னுரிமை பகுதிகள் அடையாளம் காணப்பட்டு வரைவுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளன. இணைய தளம், சமூக ஊடகங்கள் ஆகியவற்றை பெண்களுக்கு பாது காப்பானதாக மாற்றுவது, பராமரிப்பு வேலை களை பெண்களோடு ஆண்களும் சேர்ந்து செய்ய வழிகாண்பது, அரசியல் சட்டம் வகுத்துத் தந்துள்ள நெறிமுறைகளின் படி தனிநபர் சட்டங்களை மறு ஆய்வு செய்வது, தனித்துவாழும் பெண்களின் தேவைகளை அறிவது, செயற்கைக் கருவூட்டலை கைக் கொள்ளும் பெண்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்துவது, தொழில் முனைவுச் செயல் களில் பெண்களுக்கு சாதகமான சூழலை உருவாக்குவது ஆகியவை புதிதாக எழக் கூடிய சமூகப் பிரச்னைகள். இவற்றை எதிர் கொள்வதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது.

இத்தகைய நோக்கங்களை அடைவது என்பது சம்பந்தப்பட்ட அனைவரின் கூட்டு முயற்சியினால் தான் சாத்தியப்படும். சிவில் சமூகமும் தனியார்துறையும்கூட இதில் ஈடுபட வேண்டும். ●

# பெண்களின் பல்வேறுவகைப்பட்ட வாழ்வியல் செயல்கள்: சமூகக்கட்டமைப்பிற்கான தேவை

– தேவகி ஜெயின்

சமூகக் கொள்கைத் திட்டங்கள் என்று கருதப்படுகிற அல்லது பெண்களின் நலவாழ்வு, கல்வி, பிற தேவைகளுக்கான வகைகளில் சமூக ஆதரவு தருவதாகக் கருதப்படுகிற திட்டங்கள் ஏழைப் பெண்களின் தேவைகள் என்ன? அவர்களுக்குப் பயன் தரத்தக்க வகையிலான திட்டங்கள் என்னென்ன? என்ற பார்வையில் உற்று நோக்கப்படவேண்டும் என்று இந்தக் கட்டுரையில் விவாதிக்கப்படுகிறது. இங்கு முன்வைக்கப்படும் வாதங்கள் இவைதாம். அனுகூலம் அற்ற வகையில் இருக்கக் கூடிய வர்களில் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய, மிகத் தொலைவான, பின்தங்கிய பகுதி களில் வாழக்கூடிய பெண்களை குடும்பம், சுற்றுப்புறம் ஆகியவற்றின் இன்றியமையாத முகவர்களாகவும் ஆக்க வளம் உடையவர் களாகவும் ஏற்றுக்கொள்வது தான் அவர் களின் சமூகத் தேவைகளை எதிர்கொள்ளும் பாங்கிற்கான முன்நிபந்தனையாக இருக்க வேண்டும் என்பதே இங்கு முன்வைக்கப்படும் வாதமாக இருக்கிறது.

தங்களது வாழ்விலும், பிறர் வாழ்க்கையிலும் மாற்றங்களைக் கொண்டுவரக்கூடிய முகவர் களாக ஆண்களை விடவும் பெண்களை குடும்பங்களிலும், சமுதாயத்திலும் ஏற்றுக் கொள்வதுதான் சமூகக் கொள்கைத் திட்டங் களுக்கு மிக முக்கியமான அடிநாதமாக இருக்க வேண்டும்.

சமூகக் கொள்கைத் திட்டங்கள் பெண் களை ஏதோ ஒரு வகையில் பலவீனமானவர் களாகவும், ஆதரவு தேவைப்படுகிறவர்களாகவும் அடிக்கடி யூகித்துக் கொள்கிறது. தங்களைத் தாங்களே காத்துக் கொள்ள இயலாதவர் களாகவும், ஆடவர்களுக்கு கீழ்ப்படிதல் உடையவர்களாகவும் பெண்களை அது பார்க்கிறது. ஆனால் யதார்த்தத்தில் பார்க்கும் போது, பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருக்கக்கூடிய குடும்பங் களில், ஏழைகள் திரண்டிருக்கும் பகுதிகளில், வறுமை மேலோங்கி நிற்கும் இடங்களில் இதற்கு எதிரான நிலைமைகளைத்தான் நம் மால் பார்க்கமுடிகிறது.

இத்தகைய குடும்பங்களில் தண்ணீர், உணவு, எரிபொருள், பராமரிப்பு போன்ற அடிப்படைத் தேவைகள் மட்டுமல்லாமல் பெரும்பாலான நிர்வாகச்செயல்கள் பெண் களால் தான் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இத்தகைய குடும்பங்கள் பலவற்றில் பணமோ, பொருள்களோ அனைத்தையும் சேகரிக்கக்கூடிய பணிகளில் பெண்கள் தான் முயற்சிகளை முன்னெடுக்கின்றனர். மிகவும் கடுமையான பஞ்சம், வறட்சி போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களில், வழக்கமாகக் கிடைக்கக்கூடிய உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் சூழல்களில் கிழங்குகளைத் தோண்டி எடுத்து வருவதிலும், பெர்ரி பழங்களைப் பறித்து வருவதிலும், வீட்டில் இருப்பவர்களின் பசியைப் போக்குவதிலும் பெண்கள்தான் பெரும் பங்காற்றுகின்றனர்.

குடும்பங்களின் வாழ்வாதாரத்திலும், சமூகத்திலும் பெண்களின் இன்றியமையாத இத்தகைய பங்களிப்புகள் மிக முக்கியமான அடிப்படையாக அமைகின்றன. இதன் மீது தான் சமுதாய ஆதரவுத் திட்டங்கள் கட் டமைக்கப்பட வேண்டும். நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியாசென் கூறு கிறார். “மக்கள் சமூகத்தை ஒரு நோயாளியைப் போல பார்த்து அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முயல்வதைத் தவிர்த்து, திறம்பட செயல்படக்கூடிய முகவர்களாக அவர்களைப் பார்க்கும் பார்வை நமக்குத் தேவைப்படுகிறது

**தேவகி ஜெயின்,** பத்மபூஷன் விருது பெற்றவர், காந்தியவாதி, பெண்ணியவாதி, பொருளாதார நிபுணர்.



தனிநபர்கள் நிலையிலும், சமூக நிலையிலும் இத்தகைய பார்வை வேண்டப்படுகிறது. மக்கள் திரளை நுகர்வோராகவோ, தேவைகள் நிறைவேறாத நிலையில் இருப்பவர்களாகவோ கருதுவதைத் தாண்டி இன்னும் பரந்துபட்ட தளத்தில் மாற்றத்தின் தூதுவர்களாக அவர் களைக் காணவேண்டும். வாய்ப்புகள் தரப் பட்டால் சிந்தித்து, அளவிட்டு, மதிப்பிட்டு, தீர்வுகளைக் கண்டு, பிறருக்கு ஊக்கமளித்து, போராடி இத்தகைய வழிமுறைகளின் மூலம் உலகத்தை மாற்றி அமைக்கக்கூடிய வல்லமை உடையவர்கள் இந்த மக்கள் என்று பார்க்க வேண்டும்."

பெண்களுக்குத் தேவைப்படுகிற அளவிற்கு சமூக ஆதரவையோ அல்லது சமூக மேம் பாட்டுக் கொள்கைத்திட்டங்களையோ தரு வதில் பலவிதமான முட்டுக்கட்டைகள் இருக்கி ன்றன. இவற்றை நாம் எப்படி பார்த்தறிகிறோம் என்பது முதல் முட்டுக்கட்டை. 1970களுக்கு முந்தைய பத்தாண்டுகளில் வீடுகள் தோறும் எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகள், அவற்றின் அடிப்படையில் உருவான செயல்திட்டங்கள், பெண்கள் குறிப்பாக விதவைகள், ஆதர வற்றவர்கள், குறைவான திறன் உடையவர் கள் என்ற பகுப்பின் அடிப்படையில் வடி வமைக்கப்பட்டவை. இவர்களுக்கு சமூக நலச் சேவைகள் அடிப்படையாகத் தேவைப்படு கின்றன என்று அப்போது கருதப்பட்டது.

பெண்கள் இயக்கங்களின் பல பத்தாண்டு கால உழைப்பின் பயனாக, ஒவ்வொரு மக்கள் குழுவிலும், சமுதாயத்திலும் பெண்கள் பொருளியல் ரீதியாக மிக முக்கியமான பங்காற்றக் கூடியவர்கள் என்பதால் பொருளா தாரத்திற்குப் பங்களிப்பு செய்யக்கூடியவர் களாக அவர்களைக் கருதி அவர்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், அவர்களின் பணிகள் சிறந்த விளைச்சலைப் பெறுவதற்கு அவர்களுக்கு பணவெகுமதிகளையும், சமூக ஆதரவையும் காட்டவேண்டும் என்ற சிந்தனை உருவாயிற்று. குழந்தைகளையும், வயதானவர்களையும் பேணுவதிலும்; வீட்டு வேலைகள் செய்வதிலும் பெண்களின் பங்கு பற்றியும், இவர்களுக்கு இதற்கான அங்கீகாரம் தரப்படுவதைத் தவிர இவற்றிற்காக இவர்கள் செலவழிக்கும் நேரத் திற்கு ஏற்ற வகையில் ஊதியமும் தரப்பட

வேண்டும் என்ற கோரிக்கை எழுவது தற்போது உலகெங்கிலும் சிறப்பாகவும், வலு வாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய பணிகளுக்காக ஒரு நாளின் பெரும் பகுதி நேரத்தை செலவிட வேண்டியிருப்பதால் பெண்களுக்கு ஆண்களைப் போல வெளி யில் சென்று வேலைசெய்யும் வாய்ப்பு பறி போகிறது. எனவே, பெண்களுக்கான அங்கீ காரம் மிகவும் முக்கியமானது ஆகும். பெண் களின் உழைப்பை அங்கீகரிப்பது அல்லது பெண்கள் செய்யக்கூடிய வேலைகளைப் பற்றி புரிந்துகொண்டு மதிப்பளிக்கும் வகையில் உழைப்பிற்கான வரையறையை விரிவாக்குவது என்பவை நலவாழ்விற்கும், பெண்கள் நலம் காக்கப்படவும் அவசியமானதாகும்.

தனிநபர்களிடமும், குடும்பங்களிலும் தரவு களைச் சேகரிக்கும் செயலின் தரம் மிக அதிகமாக மேம்படுத்தப்பட வேண்டும். தரவுகள் சேகரிக்கும் போது ஒவ்வொரு வீட்டிலும் வருமானம் ஈட்டும் குடும்பத் தலைவர்களாக ஆடவரையே கருதும்போக்கு இருந்து வருகிறது. ஆடவருடன் சேர்ந்து இருப்பவர்களாகத் தான் பெண்கள் பார்க்கப் படுகின்றனர்.

எனினும், இந்தியாவிலும் வெளிநாடு களிலும் நடத்தப்படும் ஆய்வுகள் பெண்கள் செலவிடும் உழைப்பிற்கான நேரத்தை மட்டு மின்றி அவர்களின் பொருளாதார பங்களிப் பையும் கணக்கில் எடுத்துக்கொண்டுள்ளன. பொருளாதாரப் பயன் கிடைக்காமல் போனா லும் கூட, பெண்கள் குறிப்பாக நிலமற்ற ஏழைப்பெண்கள் வீடுகளில் செய்யக்கூடிய பங்களிப்பு ஆண்களின் பொருளாதார, சமூகப் பங்களிப்பைக் காட்டிலும் அதிகமாக இல்லாது போனாலும் சமமான அளவில் இருக்கிறது. எனவே, புரிதலுக்கும் பெண்களுக்கான திட்டங்களை வடிவமைப்பதற்கும் தரவு சேகரிப்புகளில் மேம்பாடு தேவை என்பது மிக முக்கியமானது. மிகவும் தரமான வேலை வாய்ப்பு வினாநிரல்கள் குறிப்பாக இந்தியா வில் பயன்படுத்தப்படும் வினாநிரல்கள் குடும்பத்தில் ஒவ்வொரு உறுப்பினரின் செயல் பாட்டையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. இத்தகைய வினா வடிவங்கள் வீட்டுவேலை என்ற செயல்பாட்டிற்குள் பெண்களை அடக்கி விடுகின்றன. பகுதிநேரமாகப் பொருளீட்டி னாலும் கூட பெண்களை அவர்கள் கணக் கில் சேர்ப்பதில்லை.

### ரினானா ஜாப்வாலா தனது ஆய்வில் இப்படி குறிப்பிடுகிறார்:

“பெரும்பாலான தருணங்களில் பெண்கள் கண்களுக்குப் புலப்படாதவர்களாக இருந்து விடுகின்றனர். இவர்கள் பணியாளர்களாக அங்கீகரிக்கப்படுவதில்லை. அவர்கள் பெண் கள் என்பதும், ஒரு ஒழுங்கிற்குள் வராத பொருளாதாரச் செயல்பாடுகள் வெளிப்படத் தெரிவதில்லை என்பதுமே இதற்குக்காரணம். பொருளாதாரத்திற்கும், குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் பெண்கள் செய்து வரும் பங்களிப்பும் உழைப்பும் எப்போதுமே சரியாக மதிக்கப்படுவதில்லை.

அதினும் குறிப்பாக பெண்கள் வீட்டுக்குள் இருந்து கொண்டு வேலை பார்ப்பவர் களாகவும், சம்பளம் பெற்றுவீட்டு வேலை செய்பவர்களாகவும், குடும்பத்தொழிலிலோ அல்லது குடும்பப் பண்ணைகளிலோ சம்பளம் பெறாமல் உழைப்பவர்களாகவும் இருக்கும் நிலைகளில் அதன் மதிப்பு உணரப் படுவதே கிடையாது. இத்தகைய பெண்களின் பணிகள் ஒரு பணியாளரின் பங்குப் பணிகள் என்ற நிலையிலிருந்து பார்க்கப்படும் போதுதான் சிறக்கும். பொருளாதாரத்திற்குப் பங்களிப்பு செய்யக்கூடிய முகவர்கள் என்று பெண்களைக் கருதி சமூகப்பொருளாதார இலக்குகளாக அவர்களைப் பாவிக்க வேண்டும். 11வது ஐதாண்டுத் திட்டத்திற்கான ஆயத்தப்பணிகளின் போது (2007–2012) திட்டக் கமிஷன் பெண் பொருளாதார நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தது (WGFE). பெண்களும் வளர்ச்சியும் என்ற தலைப் பிலான வரைவை இந்தக்குழு எப்போதும் போல சம்பிரதாயமாகப் பார்வையிடுவதோடு மட்டுமின்றி உள்கட்டமைப்பு, தொழில், விவசாயம் போன்ற முக்கியமான தலைப்புகளின் கீழ்

அமைந்திருந்த வரைவுகளையும் பார்வையிட அனுமதிக்கப்பட்டது. இந்தத் தலைப்புகளில் இடம் பெற்றிருந்தவற்றைக் கூர்ந்து ஆராய்ந்து இவர்கள் அளித்த யோசனைகளுள் ஒன்று உள்கட்டமைப்பு மேம்பாடு பற்றியது. நிதி ஒதுக்கீடு என்ற கோணத்தில் பார்க்கும் போது இந்தத்தலைப்பு மிக முக்கியமான தலைப்பு களில் ஒன்றாகும். சமூகக்கட்டமைப்பு அல்லது மென்கட்டமைப்பு என்ற ஒன்றை உருவாக்க வேண்டும் என்பது பெண் நிபுணர்கள் தெரிவித்திருந்த யோசனை. ஏழையினும் ஏழையாக இருக்கக்கூடிய பெண்களுக்கு அதிகாரமளிப்பதாக அமையக்கூடிய ஆதரவுச் சேவைகளைப் பற்றியதே மென்கட்டமைப்பு.


இத்தகைய சேவைகளின் மூலம் சமூகத்திலும், பொருளாதாரத்திலும் இவர்கள் பங்கேற்க முடியும். உதாரணமாக குடிநீர் ஆதாரம், குழந்தைகள் பராமரிப்பு மையம், பால்வாடி, கழிப்பிடங்கள், குளியலரை, சமையலறை, துணி துவைக்கும் அறை ஆகியவற்றை ஒரே இடத்தில் கொண்டிருக்கக்கூடிய வளாகங் களை அமைப்பது ஒரு யோசனை. இந்தச் சேவைகளுக்கு என வழங்கப்படும் நிதியி லிருந்து இந்த வளாகம் கட்டப்படும். கட்டடம் கட்ட, மின்சாரம், பிறசேவைகள் போன்றவற்றிற்கு நிதி தேவைப்படுவதால் இதனையும் உள்கட்டமைப்பு என்ற தலைப் பின் கீழேயே கொண்டுவரலாம். நகரங்களில் வசிக்கும் நடுத்தர, மேல்தட்டு மக்களுக்கு பெரிய அலுவலகக் கட்டடங்களும், வளாகங் களும் கட்டித் தருவதற்காகவே இந்த நிதி பெரும்பாலும் செலவிடப்படுகிறது.

வறுமையில் சிக்கி உழன்று கொண்டிருக்கும் நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த ஒரு பெண், தனது மூத்தமகளிடம் வீட்டு வேலைகளை ஒப்படைத்து விட்டு பலமைல் தூரம் நடந்து சென்று விறகையும், தண்ணீரையும் கொண்டு வருவதற்குப் பதிலாக சமுதாயச் சேவை மையங்களிலேயே அவற்றைப் பெறமுடியும். தனது குழந்தையை அவள் காப்பகத்தில் விட லாம். பொது சமையலறையில் சமைத்துக்கொள் ளலாம். துணிகளை அங்கேயே துவைத்துப் போட்டு விட்டு வேலைக்குப் புறப்படலாம். திட்டமிடுபவர்களின் கவனத்திற்கு 1970 களில் கொண்டுவரப்பட்ட திடுக்கிடவைக்கும் புள்ளிவிவரங்களில் ஒன்று வேலைகளில் ஈடுபடும் பெண்களுக்கும், இறந்துபோகும் பெண்களுக்குமிடையே உள்ள விகிதம் ஒரு புள்ளியில் இணைந்ததைக் காட்டியது.

20 முதல் 35 வயது வரையுள்ள பெண்கள் வேலைகளில் மிக அதிகமாகப் பங்கேற்றனர். அதே சமயத்தில் இதே வயதுடைய பெண் களிடையே தான் இறப்பு விகிதமும் அதிகமாக இருந்தது. ஏழை மக்கள் அதிகமாக செறிவாக வாழக்கூடிய இந்திய நாட்டின் பகுதிகளில் இது குறிப்பிடத்தகுந்த அளவில் இருந்தது. BIMARU மாநிலங்கள் என்று அழைக்கப்டும் பீகார் மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இவை.

பொருளீட்ட வேண்டிய கட்டாயத்திற்கு பெண்கள் ஆளாவதும், மற்றவேலைகளையும் செய்ய வேண்டி இருப்பதால் இவர்களின் உடல்நலம் பாழாவதும், அதனால் உயிரி ழப்புகள் ஏற்படுவதும் இந்தத் தரவுகளின் மூலம் தெரியவருகிறது. எனவே சமூகத் திட்டங்கள் வறுமையில் உழலும் பெண் களின் பொருளாதாரப் பங்களிப்புடன் ஆழமாக இணைக்கப்பட வேண்டும் என்ற வாதம் இங்கே முன்வைக்கப்படுகிறது. ஆயினும் கூட, பெண்களுக்கும், பாதிக்கப் பட்டிருப்போருக்கும் தனிப்பட்ட கவனம் தரப்பட்டு திட்டமிடுதலில் அவர்களையும் பங்கேற்கும்படி செய்யும் போதுதான் இத் தகைய முயற்சிகள் பயனளிக்கும். உதாரண மாக, திட்டமிடல் வழிமுறைகளில் பெண் களின் கருத்துக்கள் கேட்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். சமூக மேம்பாடு தவிர உள்கட்டமைப்பு, பொது நிலங்களைப் பயன் படுத்துவது, இயற்கை வளங்களைப் பயன் படுத்திக்கொள்வது, வேலை வாய்ப்பு போன்ற பிற பிரிவுகளில் திட்டமிடுதலிலும் பெண் களின் பங்களிப்பு இருக்க வேண்டும். ●

# குடியரசுத் தலைவர் மாளிகை குறித்த நூல்கள் வெளியீடு




தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் கடந்த 25.07.2016 அன்று நடைபெற்ற விழாவில் 'குடியரசுத் தலைவர் மாளிகையின் பிரம்மாண்ட உலகத்தை காணுங்கள்' என்ற தலைப்பிலான நூலை குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஹமீத் அன்சாரி அவர்கள் வெளியிட குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் பெற்றுக் கொண்டார். பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் முன்னிலையில் இந்த விழா நடைபெற்றது.

குடியரசுத் தலைவர் மாளிகையின் வளமான கலாச்சாரம், வரலாற்றுப் பெருமை, சமூகப் பாரம்பரியம் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு செல்லும் வகையில், குடியரசுத் தலைவர் மாளிகையின் பல்வேறு அம்சங்கள் குறித்து பல்வேறு புத்தகங்களை கடந்த இரு ஆண்டுகளாக வெளியீட்டுப் பிரிவு வெளியிட்டு வருகிறது. அண்மையில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதுபோன்ற 5 புத்தகங்களை மாண்புமிகு குடியரசுத் துணைத்தலைவர் அவர்களும், மாண்புமிகு பிரதமர் அவர்களும் வெளியிட்டனர். இவற்றின் முதல் பிரதியை மாண்புமிகு குடியரசுத் தலைவர் பெற்றுக் கொண்டார். ''குடியரசின் முதல் தோட்டம்: குடியரசுத் தலைவர் தோட்டத்தின் இயற்கை'', ''குடியரசுத் தலைவர் மாளிகையின் கலையம்சம் மற்றும் உள் அலங்காரம்'', ''குடியரசுத் தலைவர் மாளிகையின் பிரம்மாண்ட உலகத்தை காணுங்கள்'', ''அழகு குறித்த படைப்பு: குடியரசுத் தலைவர் மாளிகையின் கட்டிடக்கலை மற்றும் எழில்மிகு தோட்டங்கள்'', ''இந்தியாவின் முதல் மேசையை சுற்றி: குடியசுத் தலைவர் மாளிகையில் உணவு படைத்தல் மற்றும் பொழுதுபோக்கு'' ஆகியவையே அந்த 5 நூல்களின் தலைப்புகள் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில் 5 நூல்களையும் தலைவர்கள் பாராட்டினார்கள். குறிப்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் பேசும்போது, ''இந்த புத்தகங்கள் வரலாற்றில் இடம் பெறும்'' என்று கூறினார்.

குடியரசுத் தலைவர் மாளிகை குறித்து வெளியீட்டுப் பிரிவு ஏற்கனவே நான்கு நூல்களை வெளியிட்டுள்ளது. ''சிறகு முளைத்த அற்புதங்கள்'', ''இந்திர தனுஷ்'', ''குடியரசுத் தலைவரின் பாதுகாவலர்கள்'', ''குவிமாடத்தின் கீழ் ஓர் உறைவிடம்'', ''குடியரசுத் தலைவரின் ஓய்வு இல்லங்கள்'' ஆகியவை அவற்றின் தலைப்புகள் ஆகும். இவை தவிர பிரணாப் முகர்ஜி அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகள் அடங்கிய 3 தொகுப்புகளையும் வெளியீட்டுப் பிரிவு வெளியிட்டுள்ளது. ●